743



# பழமையும் புதுமையும்



நம் முன்னோர்கள் தங்களுடைய பற்களை ஆலம்விழுது, வேப்பங்குச்சி முதலியவைகளால சுத்தம் செய்துகொண்டிருந்தார்கள்.

தற்காலத்தில் நாம் ரஸாயனசாஸ்திரத்தின் உதவியால் கோலினோஸ் பல்பேஸ்டைக் கொண்டு பற்களை சுத்தசெய்து சுத்தமாகவும் கெட்டியாகவும் வைத்துக்கொள்ள முடிகிறது.

**KOLYNOS**

ஏனென்றால் கோலினோஸ் நுரை பல் இடுக்குகளில் சென்று பரிஷ்காரப்படுத்தி, ருசி, வாய் கந்தம், யாவற்றையும் இனிமையாக்குகிறது.

கோலினோஸ்
சிக்கனமானது.
½ அங்குல பேஸ்ட்
தான் தேவையானது.




K1.2 TAM

# பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

## கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933.)

தலைமை ஆபீஸ் : மதுரை

★

சிறந்த சேவை செய்து வருகிறது

**நெருப்பு, மோட்டார், விபத்து**

முதலிய

**சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்**

**மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000**

★

கிளைகள் { பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா, ராவல்பிண்டி.

★

பிரதம ஏஜண்டுகள் :

## ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 SEP 1947
MADRAS

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்



# அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்...



கலக்கம், ஆயாச மில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

**கேசரி குடீரம் லிட், மதராஸ்**

ஓரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் — நாட்டுக்கு —

ஏஜண்டுகள்:-

**சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்**

பேர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை.






மற்ற மருந்துகளால் குணப் படுத்த முடியாதென அபிப் பிராயப்பட்ட பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் இவ்வபூர்வ மருந்தினால் காப் பாற்றப்பட்டிருக்கின்றனர்.

# ஹம்மிஸ் லிவர் க்யூர்

பிரபல டாக்டர்கள் இதை வைத்திய சாஸ்திரத்திற்கே ஒரு [illegible] போற்றுகிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் ஏஜண்ட்
[illegible] வேங்கடரமணய்யா & சன்ஸ்.
[illegible] ரோட், மைலாப்பூர், மதராஸ்.
[illegible], கல்கத்தா, [illegible],
பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

**LIVER CURE** Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.




## உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான்.

தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியைப் பாதுகாருங்கள்.

# மார்கோ சோப்

## டாய்லட் & மெடிஸினல்

**கல்கத்தா கெமிகல்**

CALCUTTA CHEMICAL



## தேவை

# கவிதை யுலகில் இரு புதிய ஜோதிகள்

## பிரசுராலயத்தின் ஆதரவு தேவை

காவேரி சுதந்திர மலரில் வெளிவந்துள்ள பாரதம் இனிது வாழி, ஜவகருக்கு வாழ்த்து முதலான 100 கவிதைகள் வரையில் பொருந்தியுள்ளனவும், நாமக்கல் கவிஞர், டி. கே. சிதம்பரநாத முதலியார், மற்றும் அறிஞர்களால் பாராட்டப் பெற்றனவும் டாக்டர். சு. கணபதிப் பிள்ளை B.A., P.H.D அவர்களது முன்னுரை கொண்டனவும் 'யாழ்ப்பாணன்' புனைந்துள்ளனவுமான

**1. மாலைக்கு மாலை** **2. தேசபக்தன் சபதம்**

என்னும் இரு கவிதைத் தொகுதிகளைச் சென்னையில் கவின்பெற அச்சிடவும் தமிழ் நாட்டிற் பரப்பவும் பொறுப்பு வாய்ந்த ஒரு பிரசுராலயத்தின் ஆதரவு தேவை.

மேலும் சுதந்திர இந்தியாவில் தமிழ்க்கலை அபிவிருத்தியின் பொருட்டு உதவக்கூடியனவும் பாடசாலைகளில் உபயோகித்த தக்கனவும், சுவாமி விபுலாநந்தர், திரு கே. என். அருள் நந்தி போன்ற அறிஞர்களால் பாராட்டப் பெற்றனவுமான (1) தமிழ் அக்ஷரகணிதம் (Algebra) (2) க்ஷேத்திர கணிதம் (Geometry) (3) எண் கணிதம் (Arithmetic) (4) ஆரம்ப விஞ்ஞான சாஸ்திரம் (Elementary Science) என்னும் நூல்களைப் பிரசுரிக்க விரும்புவோரும் பிரசுரத்துக்கு ஆதரவளிக்க விரும்பும் அபிமானிகளும் எமக்கெழுதுக.

The Manager :

**THE NORTH CEYLON BOOK DEPOT,**

(வடலங்கா புத்தகசாலை)

POINT PEDRO :: (CEYLON)




GIVES A LOVELY
MATT BEAUTY
TO YOUR
COMPLEXION

# Kalapi

## TOILET POWDER

KALAPI INDUSTRIES, BOMBAY, 2.

Sole Agents: KALAPI STORES, BOMBAY, 2.




# Kalapi

## SHAVING STICK

Shaving a pleasure with long lasting lather

KALAPI INDUSTRIES, BOMBAY, 2.

Sole Agents: KALAPI STORES, BOMBAY, 2.

# BITA CAFFIN

## பிடாகாபின்

(தலைவலி மாத்திரைகள்)




தலைவலி, பல்வலி, கால்களிலும் மூட்டுகளிலும் வலி, சூதகத்தின் போதுள்ள வலி முதலிய சகல வலிகளையும் நீக்கும். தூக்கமின்மை, மலேரியாசுரம் இவைகளையும் கண்டிக்கும். இருதயத்துக்கோ, குடலுக்கோ எவ்வித தீங்கும் செய்யாது.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்

மூன்று மாத்திரைகள் கொண்ட பாக்கெட் அணா 1

# BITA LAX

## பிடாலாக்ஸ்

(இனிப்பான சாக்லெட் சுகபேதி)

இலேசாகவும், சுகமாகவும், மலச்சிக்கலை போக்க வல்ல குணமுள்ளது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்




*Stockist:—*

**M/s DADHA & Co., P. T. Madras**

Manufactured by:—

BOMBAY TABLET MANUFACTURING COMPANY,

Post Box 2092, 176, Zaveri Bazaar, BOMBAY 2



# உங்கள் குழந்தை

குழந்தைகளின் வளர்ச்சிக்கு நிம்மதியான தூக்கம் மிகவும் அவசியம். குழந்தை தூங்காமலும், அடிக்கடி அழுதுகொண்டும் இருந்தால் உடம்பில் ஏதோ கோளாறு இருக்கிறதென்றே அர்த்தம்.

குழந்தைக்கு காய்ச்சலோ, மலச்சிக்கலோ அல்லது ஏதாவது வலியோ இருக்கிறதென்று தெரிந்தால் உடனே 'க்ரைப் கால்' கொடுங்கள்.

உடனே கண்டிப்பாய் குணமாகிவிடும் குழந்தை சுகப்படும். நன்றாகத் தூங்கும். நீங்கள் பெருமகிழ்ச்சியடையும் முறையில் குழந்தையைக் காண்பீர்கள்.

எப்பொழுதும் க்ரைப்-கால் பாட்டல் ஒன்று கைவசம் வைத்துக்கொள்ளுங்கள். பல்முளைக்கும் சமயத்தில் மிகவும் அவசியம்.

Meclec

# க்ரைப்-கால்



எல்லா குழந்தைகளின் நோய்களுக்கும்

தி மெக்லெக் நியூட்ரிமென்ட்ஸ் அன் பார்மஸூடிகல்ஸ் லிட்.

99, எ, ஆர்மீனியன் தெரு, ஜி. டி. மதராஸ்


FAS 895
இன்றியமையாதது
Signal
போக்கு வரத்து முறையை ஒழுங்கு படுத்தி விபத்து எதுவுமிராமல் தடுப்பதற்கான முதல் முக்கிய சாதனம் ஒரு நம்பிக்கையான ஸிக்னல் விளக்கு முறையாகும். வாழ்க்கை பரிமளிப்பதற்கு அவசியமான சரீர வனப்பும் சருமத்தின் தூய்மையும் அளிக்கும்சாதனம் மலபார் லிம்டா ஸோப்.
MALABAR LIMDA
LIMDA
மலபார்
லிம்டா ஸோப்
வெஜிடபில் சோப் ஒர்க்ஸ்
கள்ளிக்கோட்டை
புரொப்ரைடர்ஸ்: சேட். N.P. & கோ. கள்ளிக்கோட்டை, பம்பாய், சென்னை.

★

## மரச்சாமான்கள்

மரங்களை வெட்டி வீழ்த்தி மேசை, நாற்காலி, அலமாரி முதலியவைகளாக அமைக்க எஃகு ஆயுதங்கள் இன்றியமையாதவை.

★



## டாடா எஃகு

**தி டாடா அயர்ண் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்**

தலைமை சேல்ஸ் ஆபீஸ்: 102A, கிளைவ் தெரு, கல்கத்தா.




Agent :—T. T. KRISHNAMACHARI & Co.
12A Lingha Chetty Street — G. T. MADRAS.



## குலதனம்

போலக் கேச தனமும், சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேச தனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் கேசவர்த்தினியைக் கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியைக் கொண்டு அதை அடையுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினி ஒன்றையே உபயோகித்து வருவதால், இள நரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறாமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவனும் தேகப் பயிற்சி ஆகாரங்களால் பருத்து அழகிய சதைக் கட்டைப் பெறுவதுபோல, அற்ப கூந்தல் படைத்தவரும் கேசவர்த்தினியைக்கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம்.

குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டே விருத்தி செய்யுங்கள்.

# கேசவர்த்தினி

**கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது**

**விலை அணா 12**

(மேற் செலவு வேறு)

**எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்**

தயாரிப்பவர்

**தென் இந்திய ரஸாயன சாலை**

கோயமுத்தூர்.

# பொருளடக்கம்

சர்வஜித்து மலர் 7 — புரட்டாசி இதழ் 2

கண்நெட்ட பின்பு
சூர்ய நமஸ்காரம் 11

ரப்பர் 13
N. அனந்தவைத்யநாதன்

முத்து மூக்குத்தி 16
கௌரி

புரட்சி வாழ்க்கை 23
நா. ராமபத்ரதிக்ஷிதர்

கதம்பம் 31

மண்ணிலிருந்து மாணிக்கம் 33
ஸி. வி. ராமகிருஷ்ணன்

நடன கலா 38
கே. சுந்தரம்மாள்

ஆறுதல் 49
மா. ச.

ரோஜா முள் 53
ராஜலக்ஷ்மி சுவாமிநாதன்

பாரதி கண்ட கலைமகள் 61
வி. ஜி. ஸ்ரீநிவாஸன்

பதவி 66
வே. ரங்கராஜன்

ஸ்ரீரங்கம் துலுக்கநாச்சியார் 73
கலாதாஸன்

தேவானை 76
ஞானம்

குறிப்பு :— காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

198086




## 2000 வருஷங்களுக்குமுன்

முன்னோர்கள் சந்தனத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ் ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றியமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனாண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.

# மைசூர்
## சந்தன சோப்



சந்தனம் குறிப்பது குற்றமற்ற குணமே

★ மைசூர் கவர்மெண்டு தயாரிப்பு ★

# காவேரி

சர்வஜித்து மலர் 7 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—"பாரதியார் | புரட்டாசி இதழ் 2


## கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம்

கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது நமது தலைவர்களுக்கு இயல்பாக ஆகிவிட்டது. பாகிஸ்தான் பிரிவினைத் திட்டத்திற்குச் சம்மதித்தவுடனேயே சிறுபான்மையினர் மாற்றமும் சம்பவித்தே தீரும் என்று எதிர்பார்க்கவில்லை என்று பிரதமர் நேரு இன்று கூறுகிறார். ஆனால், கவர்னர் ஜனரல் ஜின்னாவின் திட்டத்தில் இது இருந்தது என்பது வெளிப்படை. அரசாங்கத்திலுள்ள அதிகாரிகளைப் பிரித்தவுடனேயே பஞ்சாப் முதலிய மாகாணங்களில் நடைபெறும் கோர சம்பவங்களுக்கு அடிகோலியதாய்விடும் என்று சற்று யோசனை செய்திருந்தால் விளங்கியிருக்கும்.

கண் கெட்டுவிட்டது. இனி அதைக் குறித்துவருந்திப் பயனில்லை. இனியாவது நிலைமையை நன்குணர்ந்து நிர்வகிக்கவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாபில் நடந்த கலவரங்களில் 15,000 மக்கள் மடிந்தார்கள் என்ற புள்ளி விபரத்தை வெளியிட்டிருக்கிறார் பண்டித நேரு. உண்மையில் இப்புள்ளி விபரங்கள் இரண்டு அல்லது மூன்று மடங்காக இருக்கக் கூடும் என்றும் கூறுகிறார். கவர்மெண்டார் ஜனமாற்றத்திற்குத் தயாராயில்லாததினால் ஏற்பட்ட விளைவுகள் இவை என்று ஒப்புக்கொள்ளுகிறார். இச் சம்பவங்கள் நேரும் என்று எதிர்பார்க்காததினால் அதைச் சமாளிக்க முடியாமல் போய்விட்டது என்கிறார். எப்பொழுது பிரிவினை ஏற்பட்டதோ, எப்பொழுது அதிகாரிகளுக்குள்ளும் பிரிவினைத் திட்டம் புகுந்து சிறுபான்மைக் கோஷ்டியினரைச் சார்ந்த அதிகாரிகள் தங்கள் கோஷ்டிக்குகந்த பிரதேசத்திற்கு மாற்றப்பட்டனரோ, அப்பொழுதே ஆங்காங்குள்ள சிறுபான்மை மக்கள் அனாதைகளாகிவிட்டனரே என்பதை மனதில் பதிய வைத்துத் திட்டம் வகுத்திருக்கவேண்டும். உத்தியோகஸ்தர்கள் மாற்றப்பட்டதுடன் சிறுபான்மையினரின் நலனைப் பாதுகாக்கத் தக்க துணையின்றிப் போய்விட்டது என்பது சிந்திக்கப்பட்டிருக்கவேண்டும். அதிகாரிகளைப் பிரிவினைத் திட்டத்தின்படி வகுக்க அனுமதித்திருக்கக் கூடாது. அல்லது அப்படிச் செய்த பின்னர் அதனால் ஏற்படக்கூடிய நிலைமைக்கு ஏற்றவாறு சிறுபான்மையினரைக் காக்கப் பந்தோபஸ்துகள் செய்யப்பட்டிருக்கவேண்டும். இவை செய்யப்படாததினால்தான் இவ்வளவு கஷ்ட நஷ்டங்களும் நிகழலாயின.

இப்போது வேண்டா வெறுப்பாக ஜனமாற்றம் ஏற்பட்டுவிட்டது. லக்ஷக்கணக்கான மக்கள் தாங்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து

ஜீவித்து வந்த வாசஸ்தலங்களை விட்டு, தங்கள் சொத்து, சுதந்திரம் எல்லாவற்றையும் துறந்து, உயிருக்கு மன்றாடி ஓட நேரிட்டுவிட்டது. இந்தக் லக்ஷக்கணக்கான மக்கள் மனதில் இந்தப் புரட்சித் தீயினுல் உண்டான இன்னல்கள் ஆறாப் புண்களாகி, அவர்கள் உள்ளங்களில் கசிந்து கொண்டேதானிருக்கும். அதனேடு ஓடிவந்த இரு எதிர்க்கட்சியினரும் எல்லைப்புறப் பிரதேசங்களிலேயே தான் அகதிகளாகத் தங்கியிருப்பார்கள்.

இதனுல் இனி எழக்கூடிய சச்சரவுகளை முன்னதாகவே சமாளிக்கக் கவர்மெண்டார் முற்படாமற்போனுல் பிறகும் நிலைமை சீர்கேடாகத்தான் முடியும். ஜனமாற்றம் எவ்வளவு ஆனபோதிலும், மனக்கசப்பு ஓடிவந்த மக்களிடையே நீங்காமல் நிற்பது திண்ணம். அவர்கள் மனத்தே தாங்கள் தலைமுறை தலைமுறையாக வசித்த பிரதேசங்களை மறுபடியும் பிடித்தாக வேண்டுமென்ற உறுதி இருக்கத்தான் செய்யும். பகைமை மனப்பான்மை சில தலைமுறைகளுக்கு மறையாது. எனவே பாகிஸ்தான்-இந்தியா எல்லைப்புறங்களில் சம்பவங்கள் நிகழ்வது திண்ணம்.

மேலும் காங்கிரஸ்காரர்கள் வெளுத்ததெல்லாம் பால் என்ற மனப்பான்மையை விட்டாலன்றி ராஜ்ய பரிபாலனம் செய்யமுடியாது.

ஜின்னுவும், அவர் லீக் கோஷ்டியினரும் பாகிஸ்தான் அடைந்துவிட்டோம், இனி எங்களுக்கு நாடாசை கிடையாது என்று கூறவில்லை. இரண்டு பாகிஸ்தான் பாகங்களையும் இணைக்க ரஸ்தா வேண்டுமென்ற கட்சியை முன்னமேயே எழுப்பியிருக்கிறுர்கள். பாகிஸ்தானத்திலுள்ள சிறுபான்மைக் கோஷ்டியினரைத் தொந்தரவு செய்து ஜனமாற்றம் ஏற்படும்படி செய்வது ஓர் தீர்க்க திட்டத்தின் முதற்பகுதி என்றே கருதவேண்டும். ஐந்தாம் படையினர் அல்லது அப்படி மாறக்கூடியவர்கள் பாகிஸ்தானத்தில் இருக்கக் கூடாது என்று எண்ணியே இத்தகைய சம்பவங்கள் பஞ்சாபில் நிகழ்கின்றன என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. உண்மையில் ஜின்னு கோஷ்டியினர் என்ன மனப்பான்மையிலிருக்கின்றனர் என்பதைத் தெரிந்துகொள்வது அவசியம். நம்மைப் பொறுத்தவரை இந்நிகழ்ச்சிகளெல்லாம் வரப்போகும் பெரும் போருக்கு அடிப்படை என்றே கருதுகிறேம்.

எனவே பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் யுத்தம் நிகழலாம் என்ற பூரண உணர்ச்சியுடனும் ஜாக்கிரதையுடனும் திட்டம் இப்பொழுதே வகுத்து ராஜ்யம் நடத்தினுல்தான் பின்பு கொட்டாவி விடாமல் இருக்கலாம். இல்லையேல் ஏமாற்றம் நிச்சயம். கெட்டதை நினைத்து நல்லதை நினைப்பதுதான் நவீன அரசியலின் அடிப்படை. இந்திய அரசாங்கம் இவை எல்லாவற்றையும் தீர்க்க தரிசனத்துடனும் அரசியல் அறிவுடனும் சீர்தூக்கி, தக்க பாதுகாப்புடன் ராஜ்ய பரிபாலனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேம்.

# புதுவித ரப்பர்கள்

விஞ்ஞான ரத்ன N. அனந்தவைத்யநாதன்

ரப்பர் என்றால் மாணவர் தப்பாக எழுதிய பென்சில் எழுத்துக்களை அழிப்பதற்கு உபயோகிக்கப்படும் பொருள்தான் நம் கண்முன் தோன்றும். ஆனால் அது இந்நாளில் ஈடுபடும் வேலைகளுக்குக் கணக்கில்லை. அது புகாத இடம் கிடையாது போலும். "மோட்டார்கார், பஸ் முதலியவற்றிற்கு இனி ரப்பர் ஸ்பிரிங் காம்!" திடுக்கிடச் செய்யும் இவ்வகை விளம்பரங்கள் (அமெரிக்க) ரப்பர் தொழிற்சாலை ஆராய்ச்சி நிலயங்களிலிருந்து கிளம்புகின்றன.

உஷ்ண பிரதேசங்களில் (முக்கியமாக தென்னமெரிக்கா, ஆப்ரிக்கா, கிழக்கு இந்தியா) வளரும் களா ஜாதி, ஆமணக்கு ஜாதி, இவற்றைச் சேர்ந்த சில விசேஷ தாவர வர்க்கம் சுரக்கும் பாலிலிருந்தே ரப்பர் தயாரிக்கப்படுகிறது. மரப் பட்டையை ஆங்காங்கு செதுக்கி அங்கிருந்து கசிந்தோடி வரும் பாலைப் பிரித்து அதற்குள் புகையைச் செலுத்தி அதைத் தண்ணீருடன் கொதிக்கவிட்டு அசுத்தங்களை நீக்கி அங்கு விளையும் அதுங்கும் பொருளை உஷ்ணமான உருளைகளுக்கிடையே கொடுத்துப் பிசைந்து தகடுகளாகச் செய்கிறார்கள். இதுதான் ரப்பர். இழு விசைக்கு ஈடுபட்டு மீண்டும் பழைய ஸ்திதியை அடைவதே ரப்பரின் முக்கிய குணம். இவ்வகை ரப்பர் மீள் சக்தியை உஷ்ணத்தில் இழந்து கெட்டியாக மாறுகிறது. இத்தோஷத்தை நிவர்த்திக்க மேற்குறித்த ரப்பரைக் கந்தகத்துடன் சூடு செய்து பக்குவப்படுத்துகிறார்கள். இதற்கு 'வல்கனைஸேஷன்' என்று பெயர். இயற்கை ரப்பர்ப் பொருள்களைத் தயாரிப்பதன் அடிப்படை இதுதான்.

ரப்பர் தொழில் சரித்திரத்தில் சில விசேஷ கட்டங்களைக் கவனிப்போம். கட்டை வண்டியில் பிரயாணம் செய்யும்பொழுது நாம் அனுபவிக்கும் ஆட்டங்களும் குலுக்கல்களும் நன்கு தெரிந்தன. இரும்புக் கட்டுள்ள சக்கரங்களால் ஏற்படும் இவ்வதிர்ச்சியை நிவர்த்திக்க வழி இல்லையா என்று யோசிக்கலானார்கள். ராணி விக்டோரியா வண்டிக்கு முதல் முதலில் கெட்டியான ரப்பர் கட்டு டயர் பொருத்தப்பட்டது. அசைவும் குலுக்கலும் அதிகம் இல்லை. காற்றடித்த கட்டை உபயோகித்தால் இன்னும் நலம் பெறலாமே என்ற யோசனை தாம்ஸன் என்ற ஆங்கிலேயருக்கு உதித்தது. கெட்டித் துணிகளில் ரப்பர் திராவகத்தை ஊற்றி அடுக்கடுக்காக வைத்துத் தைத்து, குழாய்க் கட்டுக்களைத் தயாரித்து, காற்றை அடைத்து, குழாய்க்குமேல் தோல் உரையைக் கொடுத்து உபயோகித்தனர். இதுதான் முதல் காற்றடைத்த டயர். இந்த டயர் 1200 மைல் பழுதுபடாமல் ஓடிற்றும். ஆனால் தொழில் முறையில் தயாரித்த டயர்கள் அதிக நாட்கள் நிற்கவில்லை. திரும்பவும் முழு ரப்பர் கட்டுகளே உபயோகிக்கப்பட்டன. 1888-ல் ஐர்லந்து தேசத்து டன்லப் என்ற 10 வயது சிறுவன் மூன்றுகால் ஸைகில் பந்தயத்தில் ஜயம்பெற எண்ணி அதற்கு உவந்த சகாயங்களைச் செய்து தரும்படி காற்றடித்த ரப்பர் டயர்களைச் செய்யும் ஆராய்ச்சியில் ஈடுபட்ட தன் தகப்பனை வேண்டினான். உள்ளே ரப்பர் குழாய், மேலே ரப்பர் சேர்ந்த துணி உறை கொண்ட கட்டுகளைச் செய்து தகப்பனர் கொடுத்தார். பையன் பல பந்தயங்களில் வெற்றி பெற்றான்.

அவ்வளவுதான். ரப்பர் கட்டுகள் லக்ஷக்கணக்கில் வியாபாரமாயின. பணமும் குவிந்தது.

இதே சந்தர்ப்பத்தில் கற்பூர எண்ணெயைச் சூட்டில் சிதைத்ததில் இலேசான ஒருவகை எண்ணெய்-ஐஸோப்ரீன் என்று இதற்குப்பெயர். கரியும், ஹைட்ரோஜனும் சேர்ந்த பொருள்—உண்டாகியது. இதைச் சீசாக்களில் அடைத்து அலமாரியில் ரசாயனி வைத்தார். இதைப் பற்றி மறந்துவிட்டார். 5வருஷம் கழித்துப் பார்க்கிறார். இலேசான நிறமற்ற திரவம் பாகுபோல் இறுகிவிட்டது; மஞ்சள் நிறமுள்ள கசடுகள் மிதந்திருந்தன. கசடை எடுத்தார். சோதித்தார். மிருதுவாக இருந்தது. அமுக்கத்தில் அமுங்கியது. என்ன ரப்பர் அல்லவா ஜனனமாயிருக்கிறது என்று வியப்புடன் கூறினர்! செயற்கை ரப்பர் இப்புவியில் பல லீலைகளைச் செய்ய இங்ஙனமே அவதரித்தது. ஆனல் இந்த ரப்பர் பயன் படாததாக இருந்தது. டில்டன் என்ற விஞ்ஞானி ரப்பரின் மர்மத்தைக் காண முயன்றார். இயற்கை ரப்பரைச் சூட்டில் சிதைக்குங்காலும் மேற்சொன்ன ஐஸோப்ரீன் உண்டாவதைக் கண்டார். ரகசியம் வெளிப்பட்டது. ரப்பர் ஐஸோப்ரீன் அணுமயம். ஐஸோப்ரீனின் ஒரு அணுவில் 5 கரி பரமாணுவும் 8 ஹைட்ரோஜன் பரமாணுவும் உண்டு. இதை C 5 H 8 என்று குறித்தல் வழக்கம். இவ்வணுவின் எடை 68. [C=5×12=60; H=8×1=8. கரியின் ஒரு பரமாணுவின் எடையை 12 என்றும் ஹைட்ரோஜனின் ஒரு பரமாணுவின் எடையை 1 என்றும் எடுத்துக்கொள்வது விஞ்ஞானப் பழக்கம்.] அதே விதமாக ரப்பர் அணுவின் எடை என்ன என்று கணக்கிட்டுப் பார்த்தால் ஓர் அணு ரப்பரின் எடை 1020000 என்று ஒரு சோதனையில் தெரியவந்தது. அதாவது ஒவ்வோர் ரப்பர் அணுவிலும் 75000 கரி பரமாணுக்களும் 120000 ஹைட்ரோஜன் பரமாணுக்களும் இருக்கவேண்டும். இந்த ராக்ஷஸ அணு 15000 ஐஸோப்ரீன் அணுக்கள் கூடிய திரட்டாக இருக்கவேண்டும். இத்திரள் கூடும் முறையை (Polymerisation) பாலிமரைஸேஷன் என்பர். ஐஸோப்ரீன் அணுக்கள் சங்கிலி வடிவில் ஒன்றேடொன்று மாட்டிப் பின்னிக்கொண்டே ரப்பராகவேண்டுமென்று தெளிவுபட்டது. இச்சங்கிலி வடிவங்கொண்ட பிரம்மாண்ட ராக்ஷஸ அணுச்சுருள் ஸ்பிரிங்கைப்போல் முறுக்கிக் கொள்வதும் நடுநடுவே சிக்கி முடிச்சுக் கொள்வதுமே ரப்பர் இழுபடுவதின் மர்மம். இழுக்கும் பொழுது சுருள் நீண்டு கொடுக்கிறது. இழுப்பை விட்டவுடன் நீண்டது திரும்பவும் சுருளாகிவிடுகிறது. மற்றெரு விஞ்ஞானி கூறுகிறார். சிறு அணுக்கள் வளையங்களாக ஒன்று கூடுகின்றன. இப் பல வளையங்கள் பின்னிய சங்கிலியே ரப்பர் அணு. ரப்பரை இழுக்கும்பொழுது வளையங்கள் குறுகி நீளும். ரப்பர் மீண்டும் பழைய ஸ்திதியை அடையும்பொழுது வளையங்கள் வட்ட வடிவங்கொள்ளும்.

ரப்பரை வல்கனைஸ் செய்தால் ரப்பரின் திறன் அதிகரிக்கிறது. ஏன்? வல்கனைஸ் செய்வதற்கு முன்னல் ரப்பர் அணுச் சங்கிலிகள் தனித்தனியே இருக்கின்றன. பல சங்கிலிகளை அடுக்கிவைப்பதற்கொப்பானது. அடுக்கைக் கிளறினல் சங்கிலிகள் வெவ்வேருகக் கலந்துவிடும். இச்சங்கிலிகளை சில இடங்களில் சேர்த்துப் பிணைத்துக் கட்டினல் அவை வெவ்வேருகக் கலந்து விழாதல்லவா? இன்னும் பல இடங்களில் பிணைத்துக் கட்டினல் மேலும் வலிமை இடம். இதே விதமாகத்தான் கந்தக அணுக்கள் ரப்பர் அணுச் சங்கிலிகளை இடைஇடையே பிணைக்கின்றன. கந்தகம் அதிகமாக ஆக ரப்பர்

இறுகிக் கெட்டியாகிறது. இலேசில் இழுபடுவதில்லை. பல இடங்களில் பந்தம் ஏற்பட்டுவிட்டால் சுயேச்சையாய் இழுபட முடியாதது வாழ்வில் நன்கறிந்ததே.

இந்த ரகசியம் தெரிய வர, செயற்கை ரப்பர் வகைகள் தலையெடுக்கத் தொடங்கிவிட்டன. பூடாடையீன் (Buta diene) C 4 H 8 என்ற பொருளைத் தாய்ச் சரக்காக எடுத்து அதனுடன் ஸ்டைரீன் என்ற பொருளைக் கூட்டி ராக்ஷஸ அணுக்களாக மாற்றி ரப்பர் தயாரிக்கப்படுகிறது. இவ்விதமாக வெவ்வேறு பொருள்களைச் சேர்த்துக் கூட்டி 60 வகை செயற்கை ரப்பர் தயாரிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் ஒரு செயற்கை ரப்பர் தொழிற்சாலையில் ஓர் உருளையில் 36 செயற்கை ரப்பர் பால்களை எடுத்துச் சுடுநீரில் சுழற்றிப் பக்குவப் படுத்திச் சோதிக்கின்றனர். இதிலிருந்து ரப்பர் பால்களைப் பலவிதங்களில் பல அளவில் சேர்த்துக் கட்டிப் பல்லாயிரக்கணக்கான ரப்பர் வகைகளை ஆக்க இயலும்.

மசகில்லா ஸ்பிரிங்குகளை உபயோகிக்கலாம் என்கிறார் ஒருவர். ஓர் உலோகக் குழலை எடுத்துக்கொள். அதைவிட நீளமான மற்றொரு குறுகிய குழலை நுழை. இரண்டுக்கும் இடையே ரப்பரை இசை. வெளிக் குழாயைத் திருகு. பின்பு விட்டுவிடு. ஸ்பிரிங்கின் வேலையைக் காண்கிறாய். இம் மசகில்லா ஸ்பிரிங்கின் வேலையைக் காண்கிறாய். இம் மசகில்லா ஸ்பிரிங் துளிகூடச் சத்தம் செய்யாது! என்ன ஆச்சரியம்! என்ன ஸௌகரியம்! காற்றடைத்த ரப்பர் ஸ்பிரிங்குகளைக் கொண்டு ரயில் வண்டிகளை இணைத்து ஆட்டம், அசைவு, அதிர்ச்சி இம்மூன்றாலும் நிகழும் அசௌகரியத்தை நீக்கி விடலாமாம். புதுவித ரப்பர் இழை கொண்டு தயாரித்த துணிகளைச் சலவை செய்வது மிகச் சுலபம். அத் துணியால் செய்யப்படும் ஆடைகள் ஜோராகவும், டீக்காகவும் தேகத்தில் அமரும். உஷ்ணத்தை உள்ளே வைத்துக் காப்பதற்கும் அழுக்கையும் சப்தத்தையும் தடுப்பதற்கு ரப்பர் உயர்ந்த பொருள். வீட்டில் ரப்பர் தளவரிசை நடப்பதற்கு என்ன சுகம்! சுவர்களுக்கு வர்ண ரப்பர் பூச்சு! ஈரத் துணி கொண்டு துடைக்க அழுக்கு நீங்கிப் பளிச்சென்றிருக்கும். வெள்ளை அடிக்கும் தொல்லை கிடையாது; பரள் பரளாகப் பூச்சு வெடித்து உதிராது. இன்னும் மரம், உலோகத் தகடு, கண்ணாடி முதலியவைகளைக் கொண்டு சாமான்களைச் செய்து ஒட்ட வைப்பதற்கு ரப்பர் மிக உதவும். செயற்கை ரப்பர் கொண்டு வேலை செய்வதில் பல சௌகரியமுண்டு. வேலை வெகு சீக்கிரம் முடியும். தீடீரென்று எதிர்பார்க்காமல் இயற்கை ரப்பர் உபயோகமற்று இறுகிவிடும். அத்தொல்லை செயற்கைப் பாலில் கிடையாது. இன்னும் நீராவிக்குப் பதிலாக மின்சார முறையில் சூடு செய்து எளிதாகவும் சீக்கிரமாகவும் வல்கனைஸ் செய்துவிடலாம். இம்முறையில் 5 மணி நேரம் பிடிக்கும் வேலை 18 நிமிஷத்தில் முடிகிறது. சரி, சரி என்னென்ன அதிசயக் கூத்துகள் நடத்தலாமோ அவற்றையெல்லாம் நடத்திக் கொண்டே போய் மக்களின் சுக வாழ்வைப் பெருக்கிக் கொண்டே போங்கள்; ரப்பர் ஆராய்ச்சியாளருக்கு ஜே!!

# முத்து மூக்குப் பொட்டு

கௌரி

“லலிதா” “லலிதா”!

“யாரது?”

“நான் தான் கல்யாணி. தெரியவில்லையா? கதவை எல்லாம் என் இப்படி அடைத்து வைத்துருக்கே? வீட்டில் இருக்கியோ இல்லையோன்னு சந்தேகம் வந்தது”

“எங்கேடீ போரது? வெய்யல் வேளையாய் இருக்கேன்னு சாத்தி வைச்சேன். இப்படி சத்தம் போடுகிரயே? கொஞ்சம் மெள்ளத்தான் பேசினால் என்ன உனக்கு? அந்த வழக்கம் தான் கிடையவே கிடையாதே!”

“என்னடியம்மா வரும்போதே இப்படிச் சண்டைக்கு வரே? அவர் இருக்காரா என்ன வீட்டிலே? ஆபீசுக்குப் போயிருப்பாரேன்னு சித்தே அலக்ஷியமாய் இருந்தேன். என் இன்னிக்கி ஆபீஸ் இல்லையா என்ன?”

“இல்லாமே என்ன? வருஷம் முந்நூற்று அறுபது நாளும் உண்டு. ஒரு நாளும் தங்க மாட்டார். இன்னிக்கி என்னமோ அவருக்கே தள்ளவில்லைபோலிருக்கு, படுத்துண்டு இருக்கார்.”

“எனக்கும் தலைக்குமேலே கிடக்கிறது வேலை. ஒன்று சொல்லி விட்டுப் போகணும்னு தான் ஓடி வந்தேன். அடீ உன் மூக்குப்பொட்டு இல்லாமல் முகமே என்னமோபோல் இருக்கு. எப்போ குடுக்கப்போகிறானாம் ஸேட்?”

“என்னடீ இது? கொடுத்து ரெண்டு நாள் கூட ஆகவில்லை. அவனும் கட்டித்தானே கொண்டு வரவேண்டும்? அதிருக்கட்டும். வெய்யல் வீணாகப்போகாமல் ஓடிவந்தாயே, சங்கதி என்ன?”

“ஒண்ணுமில்லேடி. நம்ம அடுத்தாத்துச் சரோஜா இருக்காளோண்ணோ. ஒரு மூக்குப் பொட்டு வாங்கி இருக்கா. இவ்வளவுக்கும் முத்து மூக்குப் போட்டுதான் பார்த்துக்கொள். என்ன அழகாய் இருக்குங்கரே?”

“என்ன செய்யணும்ங்கரே இப்போ? இப்பொழுது புது தினுசு போட்டுக்கராளே நிறைய முத்துக்கள் வைத்து, அதுதானே?”

“உனக்குப் பிடிக்கவில்லையா அது? ரொம்ப நன்னா இருக்குடீ லலிதா; இந்த சரோஜார்வின் ரூபத்துக்கு அது எவ்வளவு அழகாய் இருக்குங்கரே? உனக்குப் போட்டுண்டா ரொம்ப நன்னா இருக்கும்டீ. நீ நினைச்சா வாங்கலாம். ஒண்ணு வாங்கிப் போட்டுக்கோடீ. பளிச்சுனு இருக்கும் மூக்கிலே”

“சரிதான் போடீ; நான் வாங்கிப் போட்டுக்கொள்ளாவிட்டால் தூக்கம் வரவில்லையாக்கும் உனக்கு? ஆசையாய் இருந்தால் வாங்கிப் போட்டுக்கொள்ளேன் நீ”

“என்ன லலிதா, வாஸ்தவமாய்த்தான் சொல்ரேன். பட்ரையாட்டமா அந்த முகத்துக்கே அவ்வளவு லக்ஷணமாய் இருக்கே. உனக்குப் போட்டுண்டா எப்படி இருக்கும்னு எனக்கு என்னமோ அஞ்ஞானம். உன் முகத்துக்கு எவ்வளவு லக்ஷணமாய் இருக்கும்ங்கரே?”

“சரி, வர்ணனைக்குக் கிளம்பிவிட்டாயா நீ? இனிமே ஓயமாட்டாயே? இப்போ எனக்கு ஒண்ணும் ஓடாது. காலமேயே அவர் ஒண்ணும் சரியாகச் சாப்பிடலே. இப்போ எழுந்துவந்து ஆபீசுக்குப் போகணும்பாரோ என்னமோ” என்று லலிதா முடிப்பதற்குள்,

“சரிடியம்மா, நான் எது சொன்னாலும் அலக்ஷியமாய்த்தான் இருக்கும் உனக்கு. போய்ட்டுவரேன்” என்று கூறிவிட்டுப் போய்விட்டாள் கல்யாணி.

தன்னைப்பற்றிப் புகழ்ச்சியாக ஒருவர் பேசினால் கேட்பதற்கு யாருக்குத்தான் பிடிக்காது? லலிதாவிற்கு உள்ளுக்குள் பெருமையாக இருந்தாலும் அதைக் காட்டிக்கொண்டுவிடப் பிடிக்கவில்லை.

லலிதாவும் ராமஸ்வாமியும் இளம் தம்பதிகள். ராமஸ்வாமிக்கும் நல்ல பெரிய உத்தியோகம். நல்ல சம்பளம். கூடப் பரம்பரையாகப் பணமும் காசும் நிறைந்த செல்வாக்குள்ள குடும்பம். தம்பதிகள் இருவரும் ஒத்த ஜோடி. அழகிலோ, நிறத்திலோ, குணத்திலோ ஒருவரைப் பார்க்க ஒருவர் குறைந்தவரே அல்ல. கல்யாணி அவ்வளவு புகழ்ந்தாளே என்றால் ரோஜா இதழை ஒத்த நிறமும் கன்னங்கள் குழிய அந்தச் சிரிப்பும்! லலிதாவின் அழகில் எல்

லோருமே ஈடுபடத்தான் வேண்டியிருந்தது. வாயைத் திறந்தால் உயர்ந்த சொற்கள், சிரித்த முகம், அமர்ந்த நடை உடை, கனிந்த உள்ளம், நினைத்ததைச் செய்யக்கூடிய செல்வம்! யாருக்குதான் பிடிக்காது அவளை? எங்கு சென்றாலும் சரி, எந்த விசேஷமானாலும் சரி, லலிதா, லலிதா. பலாப்பழத்தை ஈ மொய்க்கும் சமாசாரம்தான். வீட்டிலோ இரண்டே பேர். இன்னும் குழந்தையா குஞ்சா ஒன்றையும் காணவில்லை. இதைப்பற்றி அவர்கள் வீட்டாருக்கு எப்படி இருந்ததோ, கல்யாணியின் மாமியாருக்குதான் பிரமாத அஞ்ஞானம்.

"காலா காலத்துலே ரெண்டு குழந்தை குஞ்சு பொரக்க வாண்டாமோ? இப்படி இருக்கலாமோடீ?" என்று லலிதாவைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு பல்லவி பாடாமல் விட மாட்டாள். வாரம் தவறாமல் அவளுக்குச் சுற்றிப் போட்டும் விடுவாள்.

கல்யாணி சென்றதும் கடிகாரத்தைப் பார்த்தாள் லலிதா. மணி இரண்டு அடிக்கும் சமயம். ராமஸ்வாமி எழுந்துவரும் நேரமாகி விட்டது. ஒரு சமயம் எழுந்ததும் ஆபீசுக்குப் போக வேண்டுமென்று கிளம்புவாரோ என்னமோ என்ற சந்தேகம் தோன்றவே மளமளவென்று உள்ளே சென்றாள். சீக்கிரம் ஆக வேண்டுமே என்று அவள் அவசரப்பட்டதற்குச் சரியாக ராமஸ்வாமியும் சீக்கிரமாகவே எழுந்து வந்துவிட்டார். அவர் கேட்பதற்கு முன்பு ஆகவேண்டுமென்று லலிதா எண்ணியது நடக்கவில்லை. "லலிதா என்ன செய்கிறாய்?" என்ற குரல் கூடவே வந்துவிட்டது.

"இதோ வந்துவிட்டேன். காப்பி எடுத்துண்டு வரேன்" என்றாள் அவள்.

காப்பியை எடுத்துவந்து அவர் முன்பு வைத்தவள் மறுபடியும் வேகமாக உள்ளே சென்றாள்.

"ஒன்றும் சிரமப்படுத்திக்கொள்ளாதே லலிதா. எனக்கு ஒன்றும் வேண்டாம் போல் இருக்கு. காப்பிபோரும்" என்றார் ராமஸ்வாமி லலிதாவால் ஒரு நிமிஷம் பேசாமல் இருக்க முடியுமா. ஒரே நிமிஷம் காரியக் கப்பல்தான். அதற்குள் எல்லாம் ஆகிவிட்டது.

ஒரு தட்டில் மூன்று நான்கு முட்டைக்கோஸ் வடையை வைத்து எடுத்து வந்தாள்.

"வேண்டாம் லலிதா" என்றார் ராமஸ்வாமி.

"என்? வெளியில் போகணும்னு அவசரப்படுகிறேளா? நன்கு மெதுவாய்த் தட்டியிருக்கேன். ரெண்டு எடுத்துக்கோங்கோ'! என்று லலிதா உபசாரம் செய்யும்பொழுது அவராலும் தட்டமுடியவில்லை. ஒன்றுக்கு மேல் அவரால் சாப்பிடவும் முடியவில்லை.

"உடம்பு என்னமோ அலுப்பாய் இருக்கு, ஆபீசுக்குக்கூடப் போகவாண்டாமான்னு பார்க்கிறேன் லலிதா" என்றார்.

இதைக் கேட்டதும் லலிதாவின் முகம் மலர்ந்தது. "நல்லதாகப் போச்சு. வருஷம் முந்நூத்து அறுபது நாளும் தான் ஆபிஸ் போகவாண்டாம்னுகூடஇருக்கமுடியாதே உங்களாலே? இன்னிக்கி எங்கேயாவது வெளியிலே போய்ட்டு வரலாம், நித்தியம் தான் இருக்கவே இருக்கு ஆபீஸ் ராமாயணம்" என்று கூறும் பொழுது, "ஆபீசுக்குப் போகலே என்றால் எவ்வளவு திருப்திடாப்பா! வேலையை வேணும்னு விட்டுவிடட்டுமோ?" என்றார் ராமசாமி. சிரித்துக்கொண்டாள் லலிதா.

மாலை கடற்கரைக்குச் சென்றது லலிதாவிற்காகட்டும் ராமஸ்வாமிக்கு ஆகட்டும் ஒரு மகிழ்ச்சியையும், குதூகலத்தையும் உண்டாக்கியது. வேலை செய்துவிட்டு வந்தால் வெளியில் கிளம்பவே மனம் வராது அவருக்கு. வேடிக்கையாக எவ்வளவோ விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த சமயம் லலிதாவிற்குக் கல்யாணி கூறிய விஷயத்தைப் பிரஸ்தாபிக்கவேண்டுமென்ற ஆவல்.

மூக்குப்பொட்டு! என்ன பிரமாத விஷயம். வாங்கி விடுவது என்று தன் மனதில் தீர்மானம் செய்து விட்டாள் என்றாலும் எதோ ஒரு சந்தேகம் மட்டில் அவள் மனதைக்குடைந்து கொண்டிருந்தது. பணம் காசைப்பற்றி எதாகிலும் பார்க்கவேண்டுமோ அவரைக் கேட்க வேண்டுமோ? அதெல்லாம் தான் ஒன்றும் கிடையாது. ஆனால் மூக்குப்பொட்டை வாங்குவதற்கு முன்பு அவரையும் தீர்மானமாக ஒரு வார்த்தை கேட்டு விடவேண்டும், பிறகு ஒன்றும் வரக்கூடாது என்பது அவள் எண்ணம். லலிதா ஒரு மூக்குப்பொட்டுக் கேட்டு ராமஸ்வாமி வாங்கவேண்டாம் என்று சொல்லிவிடப் போகிறார்? என்றால் அதுதான் விஷயத்தில் சுவாரஸ்யம். லலிதா சற்றே தயங்குவதற்கு ஒரு காரணமிருந்தது.

எல்லாம் லலிதா வைத்த சட்டம் அவன் கேட்டால் வேண்டாம் என்று சொல்ல மாட்டார். நகைக்கும் நட்டுக்கும் என்ன குறைவு? தலையிலிருந்து கால்வரை அவளை ஆபரணங்களால் இழைத்திருந்தார் என்று தான் கூற

வேண்டும். கழுத்திற்கு ஒற்றைக்கல் கமல அட்டிகை, கமலவளையல்கள், மோதிரம், ஜடைப் பில்லை, எல்லாம்தான். மற்றவைகளைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. நாளைக்கு ஒரு புடவைதான், நாளைக்கு ஒரு சாமான்தான். லலிதா சிங்காரம் செய்து கொண்டு வந்து விட்டாளானால் ராமஸ்வாமிக்கு உலகமே தெரியாது. இப்படி இருப்பவர் லலிதா ஒன்று கேட்டு, வேண்டாம் என்று சொல்லுவாரா என்று அதிசயமாய்த் தோன்றலாம். விஷயம் இதுதான்.

நகைகள் வாங்கும் விஷயங்களில் லலிதா தன் விருப்பப்படி கொஞ்சம் வாங்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அவளுக்கு என்னைக்கும் முத்து என்றால் கொஞ்சம் பிரமை. உயர்ந்த முத்துகள் வாங்கிப் போட்டுக்கொள்ள வேணும் என்று வெகு நாட்களாக ஆசை.

"என் ஆசைக்கு வாங்கிக் கொள்ளுகிறேன்" என்று ஒரு முத்து மாலைக்கு மன்றாடியது கொஞ்சமில்லை.

ராமஸ்வாமிக்கும் இவ்விஷயத்தில் பிடிவாதம் வேண்டாம். கமலத்தைத் தவிர வேறு ஒன்றும் அவருக்குப் பிடிக்காது. அவளும் "சிறுசு தானே, ஆசைப்பட்டால் வாங்கிப் போட்டுக் கொள்ளட்டும்" என்று தோன்றுவதது அது சமயம்தான்.

லலிதா இப்பொழுது வாங்க வேண்டும் என்று நினைக்கும் மூக்குப் பொட்டும் பிரமாதமில்லை. பார்க்காத அதிசயமும் இல்லை. பழைய காலத்து நத்து என்பார்களே? அதைப்போல ஒரு தினுசாக இருந்தது. கல்யாணி கூறியது போல் லலிதா அதை மூக்கில் அணிந்து கொண்டால் மிகவும் நன்றாகவே இருக்கும். அவளுக்கு மனதில் நிச்சயம்தான். எவ்வளவோ வளைத்து வளைத்து எண்ணிப் பார்த்தாலும் இப்பொழுது அவளுக்கு ஒரே ஒரு தைர்யம். "கட்டாயம் மூக்குப் பொட்டு வேண்டாம்என்று சொல்லமாட்டார்" என்ற தீர்மானம். வாங்கி விடுவது என்று தீர்மானம் செய்துவிட்டாள் என்றாலும் இன்று கேட்டும் விடுவது என்ற நிச்சயத்திற்கு வந்துவிட்டாள். பேச்சுப் பராக்கலே இதையும் பறக்கவிட்டாள். பேச்சு நடுவிலே "சீ, நாளைக்கு நான் ஒரு புது மூக்குப் பொட்டு வாங்கப் போறேன், என்ன சொல்றேள்" என்றாள்.

ராமஸ்வாமி சிரித்து விட்டார்.

"அப்பாடா! பெரிய சமாசாரம். நாளைக்கு ஸேட் உன் மூக்குப் பொட்டையும் கொண்டு வந்து விடுவாரே? நல்ல பெரிய கமலமாகப் பொறுக்கிக் கொடுத்திருக்கேன். வரட்டும் பார்" என்றார். லலிதா மௌனமாய் இருந்தாள். அதற்காக முகத்தில் ஒரு மகிழ்ச்சியும் புலப்படவில்லை.

"என்ன மௌனம்? பதிலைக் காணமே, பிடிக்கலையா?" என்றார் ராமஸ்வாமி.

"ஒண்ணுமில்லே. எனக்கு வேண்டியதை நான் வாங்கிக்கறேன், நீங்க ஒண்ணும் சொல்லப்படாது; என்ன?"

"அப்பாடா! உத்தரவு பலமான்னா இருக்கு! ஒவ்வொண்ணுக்கும் குறுக்கவா வந்து நிக்கறேன் நான்? குசாலாய் எது வேணுமோ வாங்கிக்கோம்மா. சரி, அப்படி என்ன அதிசய மூக்குப்பொட்டு வாங்கப் போறே. அதைத்தான் சொல்லேன் கேட்போம்" என்று லலிதாவின் கையைப் பற்றிக்கொண்டார் ராமஸ்வாமி. லலிதாவின் முகத்தில் விஷமச் சிரிப்புப் பறந்து மலர்ந்தது. "என்ன தெரியுமா? முத்து மூக்குப் பொட்டு!" என்றாள்.

"இதுக்கா இவ்வளவு மிரட்டல்? ஏது தைர்யம் வந்துடுத்துப்போலே இருக்கு. உம்... நடக்கட்டும். என்ன சொல்ல முடியும் என்னால்? அடித்து விடமாட்டாயா?

"ஆமான்னா. உங்களைத் தெரியாதாக்கும் எனக்கு? இப்போ தலையை ஆட்டிவிடுவேள். அப்புறம் போட்டுக்கப்படாது, அது, இதும்பேள்" என்று முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டாள் லலிதா.

"சரி என்னை என்ன செய்யணுங்கறே இப்போ? எது வேணுமானாலும் செஞ்சுக்கோ, நான் வாயைத் திறக்கலே, போதுமா? என்று அவளுடைய முகத்தை அன்புடன் தடவினார் ராமஸ்வாமி.

லலிதாவின் உள்ளத்திலே ஊறிய மகிழ்ச்சிப் பெருக்கு அவளுடைய அழகிய கண்களின் வழியே பாய்ந்து ராமஸ்வாமியின் உள்ளத்தில் அலைமோதியது. தன்னையே சற்று மறந்துவிட்டார் அவர். அன்று இரவும் ராமஸ்வாமிக்குச் சாப்பாடு வேண்டி இருக்கவில்லை.

"மத்தியானமும் ஒன்றும் இல்லை. இப்பவும் ஒண்ணுமே தொடவில்லையே? உடம்பு ஏதாவது செய்கிறதா?" என்றாள் லலிதா.

"முத்து மூக்குப் பொட்டுப் போட்டு கொண்டால் உன் முகத்திற்கு நன்றாய் இருக்குமா இருக்காதா" என்று யோசனை செய்கிறேன்.

ஒண்ணுமே பிடிக்கமாட்டேன் என்கிறது." என்ருர் அவர்.

"அதையும் தான் பார்த்து விடுகிறது. இப்படி அழகு பார்த்துப் பார்த்து என்னதான் செய்யப்போறேளோ! நான் என்ன பொம்மையா?"

"இல்லே லலிதா. அதுக்குள்ளே கோபித்துக் கொள்ளுகிறயே?"

"இல்லாட்டா என்ன? நீங்கதான் யோசித்துப் பாருங்களேன்"

லலிதாவைப் பிடித்துப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டார் ராமஸ்வாமி. அவருடைய மனேநிலே அன்று வரம்பை மீறியது. லலிதாவின் அன்பும் அழகும் புதிதாகவே தோன்றியது.

இன்பக் கடலிலே மிதந்து மகிழ்ந்த அன்று இரவை என்றும் மறக்கமுடியாது அவரால். மறுநாள் பொழுது விடிந்து வெள்ளிக்கிழமை. ராமஸ்வாமியும் லலிதாவும் இன்ப நினைவுகளிலே மிதந்துகொண்டு விளையாட்டும் சிரிப்புமாக இருந்தனர்.

"பழைய கமலத்தை எடுத்துவிட்டு நல்ல பெரிய கமலமாகப் போட்டுக் கட்டிக்கொண்டு வரச்சொன்னேன் சேட்டை. இன்று வந்துடும். எப்படி இருக்கப்போரது பாரேன்" என்ருர் ராமஸ்வாமி.

"அவ்வளவு பெரிசா போட்டுண்டாதான் எப்படி இருக்கும்? என் மூக்குப் பொட்டு வரப் போரது. எப்படி இருக்குன்னு பாருங்கோ" என்று பெருமையுடன் ஒரு திருப்பல் திருப்பினுள் லலிதா.

ஏற்பாடு ஆய்விட்டதா எல்லாம்? சும்மா என் வாயைக்கிண்டால்ம்னு கேட்டாய் நேத்திக்கி, பலே கெட்டிக்காரியா இருக்கரயே?"

"இல்லாட்டா எப்படி ஆகும் காரியம்? புலிக்கு இரை வச்சுப் பிடிக்கராப்பலே தான் உங்களிடமெல்லாம் காரியம்" என்று சொல்லிக்கொண்டே கடகடவென்று சிரித்தாள் லலிதா. அன்று ஆபீசுக்குக் கிளம்பவே மனமில்லே ராமசாமிக்கு. வண்டிக்குப் போவதும் உள்ளே வருவதுமாய் அலேந்துகொண்டே இருந்தார். லலிதாவின் அதிருஷ்டம் வைர மூக்குப்பொட்டு எடுத்து வந்த ஸேட்டு லலிதா விரும்பிய முத்து மூக்குப்பொட்டையும் தயாராக வைத்துக் கொண்டிருந்தார்.

"இந்த மாதிரி முத்து யாரையாவதுகொண்டு வரச் சொல்லுங்கோம்மா பார்க்கலாம்! நம்ப கிட்டேகூட இது ஒன்றுதான் இருக்கு" என்று அதைப் பற்றிப் பிரமாதமாகப் பிரசங்கம் செய்தார். லலிதாவின் ஆசை அன்றே பூர்த்தியாகி விட்டது. உடனே கல்யாணிக்குத் தெரியப் படுத்தாமலிருக்க முடியவில்லே அவளால்.

"வெள்ளிக்கிழமை நல்ல நாள் மூக்குப் பொட்டைப் போட்டுக்கோ கோவிலுக்குப் போய் அம்பாளேத் தரிசித்து விட்டு வரலாம்" என்ருள் கல்யாணி. அதுவும் நல்ல யோசனே அவர் வருவதற்குள் போய் விட்டு வந்து விடலாம் என்று எண்ணினுள்.

கோவிலும் வீட்டிற்குச் சற்று அருகிலேயே தான். கல்யாணியையும் அவள் மாமியாரையும் அழைத்துக்கொண்டு கால் நடையாகவே கிளம்பி விட்டாள் லலிதா. வேடிக்கைக்கல்ல, வாஸ்தவமாய் லலிதாவிற்கு என் கிளம்பி வந்தோம் என்ருகிவிட்டது. யார் எதற்காகப் பார்த்தார்களோ, லலிதாவால் தலே நிமிர முடியாமல் அவ்வளவு சங்கோசமாய்ப் போய் விட்டது.

"கோவில் சுவாமி தரிசனம் செய்ய வந்தார்களோ என்னேப் பார்க்க வந்தார்களோ?" என்று கோபித்துக்கொள்ளும்படியாகத் தான் இருந்தது.

"லலிதாவைப் பார், லலிதாவைப் பார்" என்று "கசகச" "குசுகுசு" என்று அப்படியும் இப்படியுமாகப் பேசிக் கொள்வது காதில் படாமல் எப்படி இருக்க முடியும்? பார்ப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் பதில் கூறுவதற்குத்தான் சரியாக இருந்ததே ஒழிய, கோவிலுக்குள்ளேயே போக முடியவில்லே.

"ஏண்டி? எதையாவது செய்துகொண்டால் போய்ச் சுவாமி தரிசனம் செஞ்சுட்டுவாங்களேன், இதுக்குதானுடீ? வியாபாரிகளுக்கு விளம்பரமே வாண்டாம். கோவிலுக்கு எதையாவது போட்டுண்டுவந்தா போரும்!" என்று அலுத்துக் கொண்டாள் லலிதா.

"அதுவும் உன்னுட்டமா ஒருத்தி போட்டுண்டு வந்தான்னு சொல்லு. எருமைக்கன்னுக்குட்டிக்கு நகை பூட்டினுப்பலே எனக்கும் சரோஜாக்கும் போட்டுண்டா என்னமாடி இருக்கும்? நாலு பேர் பார்க்கட்டும்னுதான் கோவில் குளம்னு வரது. எதையாவது போட்டுண்டா உடனே ஒவ்வொரு வீடா நொழைய முடியுமா? அப்படிப் போனுத்தான் நன்னு இருக்குமா? வெள்ளிக்கிழமைன்னு

அலங்காரம் பண்ணிக்கணும், பண்ணிண்டு கோவிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்ய ணும்னு சொல்ரா. எல்லோரும் ஒரு இடத் திலே கூடுகிறுளோன்னேடி! நம்ம பெரிய வான்ன என்னமோ அலக்ஷியமாய் நினைச்சுண்டு இருக்கே நீ" என்று பிரசங்கத்திற்குத்தொடங்கி விட்டாள் கல்யாணி.

"இந்தாடீ, போராதகுறைக்கு நீ வேறே பிரசங்கம் பண்ணிக் காதைத் துளைத்து விடாதே. போகலாம் வா வீட்டிற்கு. எங்கே பாட்டி?" என்று லலிதா அவளைப் படிமடக்கி ஞளே ஒழிய மனதில் எல்லாம் பெருமைதான் உள்ளுர.

ஒரு கட்டு மல்லிகைப் பூவை வாங்கி வந்து "இந்தாங்கோ, ரெண்டுபேருமா வச்சுக் கோங்கோ தலை நிறைய" என்ருள் பாட்டி எங்கேயோ கூட்டத்திற்குள்ளேயிருந்து வந்து கொண்டே. வீடு திரும்பும்பொழுது ஏக நாழி கையாகிவிட்டது.

"சுற்றிப் போடணும்னு எண்ணிண்டு இருந் தேன். இவ்வளவு நாழியாயிடுத்தே. இந்தாடி யம்மா, மந்திரிச்ச விபூதி. இதையாவது இட் டுண்டு போ" என்று எதையோ முணுமுணுத்த படி இருவர் நெற்றியிலும் விபூதியை ஒரு பொட்டு இட்டாள் பாட்டி. குங்குமம் வாங்கிக் கொண்டு "அவர் வந்துருப்பார்" என்று எண்ணிக் கொண்டு வந்தபடி லலிதா வீட்டிற் குள் நுழையும்பொழுதே எதிரில் சாய்வு நாற் காலியில் சாய்ந்து கொண்டிருந்தார் ராம ஸ்வாமி.

"என்ன சுவாமி தரிசனமோ?" என்ருர் லலிதாவைக் கண்டதும்.

"ஆமாம், வெள்ளிக்கிழமை இல்லையா?" என்று அவர் முன் மலர்ந்த முகத்துடன் நின் ருள் அவள். தாமரையை ஒத்த அவளுடைய நிறத்திற்கு இடையில் வெளுத்த ரோஜா நிறப் புடவை, குறுகிய இடையை எடுத்துக் காட்டும் படியான கல்இழைத்த ஒட்டியாணம், உயர்ந்து மெல்லிய அழகிய கழுத்திலே கண்ணைப் பறிக் கும் கமலமும் பச்சையும் கலந்த ஆபரணங்கள், கருவிழியுடன் கடைகிழிந்த கண்களிலே மை, வசீகரமான முகவெட்டை எடுத்துக் காட்டும் படியான திலகம் நெற்றியிலே! மூக்கில் புதி ; காக அணிந்திருந்த மூக்குப்பொட்டு, லலிதா வின் இயற்கை அழகை மேலும் பன்மடங்கு அதிகரிக்கச் செய்தது.

ராமஸ்வாமி அப்படியே சிறிது நேரம் அவ் வழகைப் பருகினர். லலிதாவைத் தினந்தோ றும் பார்க்கிருர் என்ருலும் அவள் அளிக்கும் காட்சியும் முகத்தில் நிறைந்திருந்த அளவிலா மகிழ்ச்சியையும் அவர் கண்டதே இல்லை என்று தான் தோன்றியது. உள்ளத்திலே பொங்கிய அன்பு தம்மையே மறந்தார். லலிதாவின் இரு கரங்களையும் பற்றி அவளைத் தன் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு,

"இரு உன்னைப் பார்க்கலாம்" என்ருர்.

கனிந்த உள்ளத்திலே மடை திறந்த வெள் ளம் போன்ற அவருடைய வார்த்தைகளைக் கேட்ட லலிதாவும் தன்னை மறந்தாள் ஒருகணம் என்ருலும் மறுகணம் எங்கு இருக்கிறோம் என் பதை உணர்ந்தாள். அவருடைய மனோ நிலை யையும் அறிந்தாள். துள்ளிக் குதித்து அவர் எதிரில் நின்ருள்.

"புதிய மூக்குப் பொட்டுப் போட்டுக்கொண் டிருக்கையேபார்க்கலாம்னு பார்த்தேன். அதுக் குள்ளே என்னமோ பிரமாதமாய்த் துள்ள றயே?" என்ருர் ராமஸ்வாமி.

"இங்கிருந்து பார்த்தா கண்தெரியாதாக் கும்? என்று பரிகாசமாய்ச் சிரித்தாள் லலிதா."

"உம்........என்னைப் பயித்தியக்காரனுய் அடிக்கிறே"

"பின்னே! இன்னிக்கிதான் கல்யாண மானவா போல, போங்கோன்ன!"

"சரி, மூக்கு பொட்டு, மூக்கு பொட் டுன்னே! என்னடான்னு பார்த்தா பழங் காலத்திலே "நத்து"ன்னு சொல்லுவாளே பெரியவாள்ளாம். அதுக்கு போஸ்தரா போட்டுண்டு இருக்கே?"

"இருந்தா என்ன? இதைத்தான் இப்போ எல்லாரும் போட்டுக்கரா. நன்ன இருக்கோ இல்லையோ சொல்லுங்கோ முன்னலே"

"உனக்கு எதைப் போட்டுண்டாதான் நன்ன இருக்காது லலிதா? கேக்கரயே? என் வாயைக் கிண்டணும்னு தானே?"

"பார்த்தேளா? ஆரம்பிச்சுட்டேள். மூக் குப் பொட்டு நன்ன இருக்கான்ன, என்னையா புகழனும்னேன்?" என்று அவ்விடத்தை விட் டுக்கிளம்பினுள் லலிதா.

"முணுக் இங்கரத்துக்குள்ளே வந்து விடுகி ரதே கோபம்! பார்த்துச் சொல்லலாம்னு கூப் பிட்டா குதிச்சுண்டு ஓடுகிரயே பிரமாதமாய்"

"ஆமாமாம்! பாவம் குழந்தை ஒண்ணுமே தெரியாது போலே பேச்சைப் பாரு!" என்று

குறும்பாகச் சிரித்துக்கொண்டே அவ்விடத்தை விட்டகன்றாள் லலிதா.

அவ்வேகத்தில் அவள் மூக்கிலிருந்த முத்துக்களின் பிரகாசம் நெருப்பு அனல் வீசுவது போல் இருந்தது. "மிகவும் உயர்ந்த முத்து தான், நம்ம ஸேட்ஜியிடமே எல்லாம் பொறுக்கி வாங்கும் நகை" என்று தமக்குள் சொல்லிக் கொண்டார் ராமஸ்வாமி.

அன்று இரவும் ராமஸ்வாமி என் சரியாகச் சாப்பிடவில்லை என்று தெரியவில்லை.

"எண்டியம்மா; மூணுநாளாச்சு விளையாட்டைப்போலே! ஒண்ணுமே தொடலையே அவர்! இனிமே எதோ என்னமோன்னு பேசாமே இருப்பாளோ? வைத்தியரையாவது ஒரு நடை வந்து பார்க்கச் சொல்லேன்" என்று லலிதாவிடம் மெள்ளக் கூறினாள் சமையல்காரப் பாட்டி. ராமஸ்வாமிக்கு வாய்க்கு என்ன பிடிக்குமோ, என்ன வேண்டுமோ எல்லாம் தெரியும் அப்பாட்டிக்கு. அவருடைய வயிறும் உடம்பும் கூட நன்றாகத் தெரியும். அவர் "நன்றாக இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு சாப்பிட்டால்தான் பாட்டிக்கும் தூக்கம் வரும். மூன்று நாட்களாக அவளுக்கும் எதோ வேதனை பிடித்துக்கொண்டு விட்டது. அவர் உடம்பைக் கவனிக்காமல் இருக்கிறாளே என்று லலிதாவின் பேரில் சற்றே கோபம்கூட வந்தது அவளுக்கு.

"எதாவது கொஞ்சம் சூடு இருக்கோ பார்த்தயோ லலிதா?" என்றாள் அவளிடம்.

பாட்டி கூறியதற்குமேல் லலிதாவுக்கும் உள்ளூரக் கொஞ்சம் யோசனை வந்தது. இந்த வயதில் விளையாட்டும் சிரிப்பும்தானே. என்றாலும் எண்ணிப் பார்த்தால் "ஒண்ணு, ரெண்டு, மூணு நாள் ஆயிடுத்தே" என்று கணக்குப்போட ஆரம்பித்தாள்.

ராமஸ்வாமியின் உடம்பிலும் சூடு எடுத்துப் பார்க்கும்பொழுது நூறுகூட இருந்தது.

"எல்லாம் நாளைக்குச் சரியாகிவிடும்" என்றார் ராமஸ்வாமி. லலிதாவுக்கு எதோ வேதனை பிடித்துக் கொண்டு விட்டது. வண்டியை அனுப்பி வைத்தியரை அழைத்துவரச் சொன்னாள்.

வைத்தியர் "ஒன்றுமில்லை. கொஞ்சம் அஜீர்ணத்தினால் சூடு. மருந்து அனுப்புகிறேன். இரவே இரண்டு வேளை கொடுங்கள். ஒன்றுமிருக்காது" என்று சொல்லிவிட்டுப் போனார்.

"நான் அப்பவே சொல்லணும்னு வாயெடுத்தேன். குறுக்கச் சொல்லுவானேன்னு நிறுத்திண்டேன். தெரியும் எனக்கு" என்றாள் பாட்டி.

"என்ன பாட்டி? என்றாள் லலிதா?

அதற்குமேல் சொல்ல மறுத்து விட்டாள் பாட்டி.

போகவும் வரவும் எதோ தனக்குள் பேசிக்கொண்டே இருந்தாள்.

* * *

வெள்ளிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை வந்துவிட்டது.

"என்ன பாட்டி இது?" என்றாள் லலிதா கவலை தோய்ந்த முகத்துடன்.

"நான்தான் சொன்னேனே எனக்கு அன்னிக்கே "சுருக்"ன்னுது. அந்தக் கிழவிக்குதான் ஆகட்டும். கொஞ்சம் யோசனை வாண்டாமோ?" என்றாள் பாட்டி.

"என்ன யோசனைங்கரே பாட்டீ?"

"நீங்கள்ளாம் இந்த காலத்துவாம்மா. சொன்னாலும் கேக்க மாட்டேள். உங்களுக்காவும் தெரியாது சொல்லு! எதுக்கு? நாலு பேர் நடுவிலே போவானே? சிவ சிவான்னு கிடக்கப்படாதா?"

"ஆனால் எங்கேயும் போகாமேயா இருப்பா பாட்டீ? நீங்க சொல்ரது ரொம்ப நன்னாதான் இருக்கு!"

"அடியம்மா! சொல்ரேன் கேளு. உலகத்திலே ஒத்தர் நன்னா இருந்தா பார்க்கப் பொறுக்கமாட்டாடியம்மா எல்லாரும். நகையும் நட்டுமா, கண்ணுக்கு எதாவது சோடையா இருக்கா? பளிச்சுன்னு போனால் எல்லோர் கண்ணையும்தான் உறுத்துகிறது. கண்ணே பாதி இருக்கும். இன்னிக்காவது சுத்திப் போடணும்? நகையையும் நட்டையும் போட்டுண்டு பளிச்சுனு ஒரு புடவையை எடுத்துக் கட்டிண்டயானாலே எனக்கு உள்ளுக்குள் யோசனைதான். ரெண்டு பேருமா என்னத்துக்கு வெளியில் கிளம்பரேள்?" என்றாள் பாட்டி.

டாக்டரோ ஒன்றுமில்லை என்கிறார். ராமஸ்வாமிக்கு என் ஜுரம் இறங்கவில்லை, ஆகாரம் செல்லவில்லை என்று லலிதாயிற்கு வேதனை பிடித்துக் கொண்டது. பாட்டி கூறியதை நினைத்துக்கொண்டு வேறு வேதனைப்பட்டாள்.

இரண்டு மூன்று நாட்கள் ராமஸ்வாமிக்கு உடம்பு சௌகரியமில்லை என்பது கல்யாணிக்கோ அவள் மாமியாருக்கோ தெரியவில்லை. தெரிந்ததோ இல்லையோ ஓடி வந்தாள் பாட்டி.

"எதுகளுடைய கண்ணோ தாண்டி பட்டுடுத்து. இல்லாமன்னா நன்னா இருந்தவருக்கு திடீர்னு என்ன இப்போ?" என்று ஒரு நாழி அங்கலாய்ந்து விட்டு,

"ஒண்ணுமில்லே, கவலைப்பட்டுண்டு இராதே! சுத்திப்போட்டு, இன்னிக்கு நாத்துக்கிழமையோனா சுப்பு சாஸ்திரியை வந்து இரண்டு விபூதி போடச்சொல்ரேன். அப்புரம் எல்லாம் எங்கேன்னுகேளு" என்று சொல்லிவிட்டு கரித்தூள் எல்லாம் போட்டுக் கொட்டாங்குச்சியையும் வைத்து எரிய விட்டுச் சுற்றிப் போட்டாள். சுப்பு சாஸ்திரியும் வந்து விபூதி போட்டார்.

"ஒண்ணுமிருக்காது நன்னா தூங்குவார் பார்," என்று சொல்லிவிட்டுப் போனாள் பாட்டி.

ராமஸ்வாமிக்கு மருந்து கொடுப்பதோ, கஞ்சி கொடுப்பதோ, கையில் கடிகாரத்தைக் கட்டிக் கொண்டுதான் செய்தாள் லலிதா.

இரவும் சரியாகத் தூங்கினார் என்று தோன்றியது லலிதாவுக்கு.

"சித்தே தூங்கினார் போலவே இருக்கே லலிதா, பார்த்தயா! எந்தப் பாவியின் கண்ணோ தான்" என்று சொல்லிக்கொண்டாள் சமையல்காரப்பாட்டி.

எல்லாம் அஞ்ஞானம் தான். ராமஸ்வாமிக்கு உடம்பில் தெளிவு காணவில்லை. ஜுரமும் குறையவில்லை. சந்தோஷமும் சிரிப்புமாக இருந்த வீட்டில் ஒரு வாரமாகக் கவலையும்அலைச்சலும் அதிகமாகி விட்டது.

வைத்தியர் இரத்தத்தைப் பரிசோதனை செய்யவேண்டுமென்று எடுத்துப் பார்த்ததில் ஏதோ விஷ ஜுரமென்றும் இறங்க இன்னும் இரண்டு வாரங்கள் ஆகுமென்றும் அபிப்ராயப் பட்டார். வைத்திய சிகிச்சை முறைகள் மிகவும் துருசாக நடந்தன. ஊரிலிருந்து ராமஸ்வாமியின் தாயார் தகப்பனாரும் வந்து சேர்ந்தார்கள்.

ராமஸ்வாமிக்கு எதாவது ஜுரம் என்று வந்தால் இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் இருந்ததும் இல்லை, அப்படி இருந்தாலும் இவ்வளவு அதைர்யமாக அவர் பேசியதும் கிடையாது. இந்தத் தடவை படுத்துக்கொண்டது முதல் "ஏதோ வந்துவிட்டது லலிதா, ஏதோ வந்துவிட்டது!" இதே பேச்சுத் தான்.

லலிதா எப்படி தைர்யமாய் இருப்பாள் பாவம் ஒரே கவலையிலும் பயத்திலும் ஆழ்ந்தான்.

தாயாரைக் கண்டது முதல் பச்சைக் குழந்தையைப்போல் ஆரம்பித்துவிட்டார் ராமஸ்வாமி. எப்பொழுது பார்த்தாலும் "அம்மா, அம்மா!" கஞ்சி அம்மாதான் கொடுக்கவேண்டும், எப்பொழுதும் பக்கத்திலேயே இருக்கவேண்டும்.

"இவ்வளவு நாள் வாயால் கூட அதிகமாகச் சொன்னவர் இல்லை. எப்படியம்மா உங்களை விட்டு விட்டு இருக்கார்" என்றாள் லலிதா.

"சொல்லாட்டா என்ன? சொல்லாதவனுக்கு தாண்டியம்மா ரொம்ப இருக்கும் மனசிலே. எப்படியோ அடக்கிப் போட்டு வச்சுண்டு இருந்திருக்கான். வா, வான்னு, ஆயிரம் கடிதாசு போட்டான். நன்னா இருக்கச்சே வந்து பாக்கத்தோணலே. பாவி, ஒண்ணுகிடக்கிறது. இங்கேயே இருப்பம்னு தோணலே அவருக்கு. அங்கே என்னமோ கொள்ளை போரதுன்னு ஒக்காந்துஇருந்தார்" என்றுராமஸ்வாமியின் தாயார் மீனாக்ஷி அம்மாள் வாய் ஓயவில்லை.

ஜுரம் ஆரம்பித்து எவ்வளவு நாட்கள் ஆகின்றன என்று கணக்கிட்டுக் கொண்டிருந்தாள். வைத்தியர் 'ஜுரம் இரண்டு வாரமாக அடிப்பதால் உடம்பு மிகவும் பலஹீனப்பட்டிருக்கிறது. இன்னும் ஏதோ கோளாறு ஒன்று சேர்ந்து கொண்டிருப்பதாகவும்' சந்தேகப் பட்டார். கேட்கவேண்டுமோ? லலிதாவுக்கு ஒன்றும் சொல்லத் தெரியாத வேதனை. உள்ளூர அவளுக்கு ஒரு யோசனை. நினைக்க நினைக்க அவள் மனம் தாங்கவில்லை. முத்து மூக்குப்பொட்டை எவ்வளவு ஆசையுடன் வாங்கினாளோ அதைப்பற்றி அவ்வளவு வெறுப்பு உண்டாகிவிட்டது.

"அவரும் மனம் கோணாமல் வாங்கிக்கொண்டார், இது தெரிந்தா சொன்னார்? வந்ததே! இப்படியா ஒருநாள் போட்டுக் கொள்வதற்குள் நன்றாய் இருந்தவரை மலைபோல படுக்கவைக்கணும்? இப்படி ஒரு போராத காலமா?" என்று நினைக்க நினைக்க லலிதாவின் மனம் தாங்கவே இல்லை. வேறு யாரிடம் சொல்வது? எல்லாவற்றிற்கும் சமையல்காரப் பாட்டிதான்.

"ஆமாண்டியம்மா, அந்தப் பேச்சு எடுக்கரச்சேயே வந்துடுத்தே உடம்பு அவருக்கு! வாண்டவே வாண்டாம்டியம்மா, திருப்பியானும் கொடுத்துடு" என்றாள். (தொடரும்)

# புரட்சி வாழ்க்கை

நா. ராமபத்திர தீக்ஷிதர்

காவேரியாற்றங்கரைத் தென்சரகுத் தெருவில் அமைத்துள்ள சுப்பையாபிள்ளை பலகாரக் கடையில் காலை 7 மணிக்கு மதுரையில் தொழிலாளர் ராமச்சந்திரபிள்ளை ஒரு கோப்பை தேத்தண்ணீர் குடித்துவிட்டு நிக்கல் அணு ஒன்றைச் சுப்பையன் கள்ளாப்பெட்டியில் வீசி எறிந்து கருப்பட்டி டீயை ஒரு அணுவுக்கு விற்கும் கள்ள மார்க்கெட் டீஸ்டாலை ஒழிக்க இந்தப் பாஸ்கரபுர கிராமத்தில் யாருமில்லையா வென்று கூச்சலிட்டான்.

சுப்பையன் கோபாவேசத்துடன் "உனக்கு சும்மா போக முடியவில்லையா - பட்டணத்துக் காசு கொழுப்பல்லவா உன்னை அப்படி பேசச் சொல்லுகிறது. காலம் கெட்ட வழி என்ன - உன் பேச்சுத் திமிரென்ன - மதுரையிலிருந்து ஒரு பாக்கெட் வெள்ளைச் சர்க்கரை முடிந்து கொண்டுவருகிறதுதானே-கிராமத்துசோத்துக் கடையில் உன் கைவரிசையைக் காட்ட வெட்கமில்லையா" என்று பர பரப்புடன் ஒன்றன் பின் ஒன்றாக வார்த்தைகளை அடுக்கினான். காலைப் பானத்திற்குச் சுப்பைய்யன் சோத்துக் கடையை நம்பின பல கிராமவாசிகள் கடை வாசலில் கூடி நின்றார்கள்.

ராமச்சந்திரபிள்ளை சிவந்த வர்ண அரைக்கை பாடியும் அள்ளைகளில் பைகள் வைத்து தைத்த காக்கி சராயும் போட்டுக்கொண்டு கைகளை கால் நிஜார் பைகளில் திணித்துக் கொண்டு சண்டைக்கிழுக்கும் பாவனையாக, கிராமக் கூட்டத்தை நோக்கினான். சட்டைப்பைகளில் அரைகுறை சந்திர வடிவத்துக்குள் அரிவாள் சுத்தியின் வடிவங்கள் காணப்பட்டன. தலையில் காந்திக் குல்லாவின் ஒரு பக்கத்தில் மேலே கண்ட குறிகள் சிவந்து தோன்றின. கூட்டத்தார்கள் ராமச்சந்திரனை சமாதான முயற்சி செய்தும் பயன்படவில்லை.

"நான் இந்த ஊர் ஏழைகளின் பணத்தைப் பிடுங்கி மாடி வீடு கட்டப்போகும் சுப்பையனைச் சும்மாவிடப்போவதில்லை" என்று கர்ஜித்தான். ஆனால் அவன் பக்கம் பேசக்கூடியவன் ஒருவனும் அந்தக் கூட்டத்தில் இல்லை. சில சிறுவர்கள் எட்டி நின்று வேடிக்கை பார்த்தார்களே தவிர, சுப்பையனுக்கு யாதொரு அனுதாபமும் காட்டவில்லை. தனிமையாகத் தவிக்கும் ராமச்சந்திரனுக்குக் கோபம் மேலிட்டுக்கொண்டு வந்தது.

வயது முதிர்ந்த மாணிக்கம் ராமச்சந்திரனை மெதுவாகத்தள்ளி "இந்தக்கிராமத்தில் சண்டை கூச்சல் கிடையாது. அவரவர்கள் தங்கள் தங்கள் வேலைகளைப் பார்ப்பதற்கே அவகாசமில்லை. நீ வந்த வேலையைப் பார்த்துவிட்டு மதுரைக்குப் போடா" என்று அமைதியுடன் சொன்னான்.

"மதுரையில் இந்த அக்கிரமம் நடக்குமா? அப்படி நடந்தாலும் பொதுஜனங்கள் இந்தச் சுப்பையனைச் சும்மா விடுவார்களா? இந்தக் கிராமத்தில் எல்லாரும் ஆடுகள்போல் போட்டதைத் தின்றுவிட்டு வாயைப் பொத்திக் கொண்டு போகிறீர்களே" என்று பரிதாப ஆவேசத்துடன் கத்தினான்.

'ஆடுகள்போல்' என்று சொல்லும்போது சிலருக்குக் கோபம் வந்துகொண்டிருந்தது. மாணிக்கம் நிலைமை மோசமாகக் கூடாதென்று நினைத்து "பட்டணத்துப் பயல் ஏதோ பிதற்றுகிறான்" என்று சமாதானம் சொல்லி மெதுவாக ராமச்சந்திரனைக் கடையை விட்டு மாணிக்கம் இழுத்தான். அதற்குள் காவேரியில் தண்ணீர் மொண்டுகொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்த சுந்தராம்பாள் தன் அண்ணன் ராமச்சந்திரனைப் பார்த்து "அண்ணே! நீ எப்போது மதுரையிலிருந்து வந்தாய்? என் நேரில் வீட்டுக்குவந்து பழையசோறு சாப்பிடாமல் சம்பாதித்த காசைப் பலகாரக் கடையில் தொலைக்கிறாய்" என்று சொல்லி ராமச்சந்திரனை வீட்டுக்குக் கூப்பிட்டதும் பெண் பிள்ளை பேச்சைக் கேட்ட பலர் பலகாரக்கடைக்குள் தங்கள் தங்கள் அலுவல்களைக்கவனிக்க போய்விட்டார்கள். தனிமையாய் நின்ற ராமச்சந்திரன் வேறு சண்டைக்கு இழுக்கக்கூடிய ஆள்களில்லாததால் தங்கை சுந்தராம்பாள் பின்னால் வீட்டுக்குப் போனான்.

சுந்தராம்பாள் தண்ணீர்க் குடத்தைச் சமயலறையில் வைத்துவிட்டு, ஆடைத் தயிர் கலந்த

பழைய சோற்றைத் தன் புருஷன் வேலன் முன்னும் ராமச்சந்திரன் முன்னும் வாழையிலைகளில் வைத்தாள். ராமச்சந்திரன் வீட்டிற்கு வந்ததும் தன்னுடைய அச்சுக் காகிதங்களடங்கிய காக்கிப்பையை ஒரு ஆணியில் மாட்டிவிட்டு, தன்னுடைய மச்சான் வேலனிடம் க்ஷேம சமாசாரங்களை விசாரித்துவிட்டு, மதுரையைப்பற்றியும் தன்னுடைய மில் வேலையைப்பற்றியும் சவிஸ்தாரமாக வர்ணித்துக்கொண்டு தன்னுடைய மேல் பதவியைப் பற்றியும் கிராமத்தார்களுடைய பரிதாப நிலைமையையும் அளந்துகொண்டிருந்தான்.

வேலன் அன்று காலையில் காவேரியில் ஸ்நானம் செய்துவிட்டு விபூதி தரித்துக்கொண்டு முருகனைப் பிரார்த்தித்து, பிறகு வீடு வந்து காலை ஆகாரம்சாப்பிடத்தன்மனைவியைக் காவேரியிலிருந்து எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்போதுதான் ராமச்சந்திரன் சுந்தராம்பாளுடன் வீட்டிற்குள் நுழைந்தான். ராமச்சந்திரன் தன்னுடைய மதுரை ஆடையுடன் தான் காலை நீராகாரத்திற்கு அதிக அருவருப்புடனும் கால்மனதுடனும் வேறு விதியில்லையென்று நினைத்து வேலனுடன் உட்கார்ந்தான். வேலன் ராமச்சந்திரன் நிலைமையை நன்றாக அறிந்துகொண்டு "என் தயிராடை கலந்த சோத்தை சாப்பிட கசக்கிறதோ?" என்று குறும்புத்தனமாகராமச்சந்திரனைக் கேட்டான்.

"பட்டணத்தில் பத்தாம் பசலியான உனக்கு இடமில்லை. இரண்டு சூடான இட்டலிகளையும் சூடான ஒரு கோபை டீயையும் நீஜன்மாயிவில் குடித்திருந்தால் அல்லவோ அவைகளின் அருமை உனக்குப்புலப்படும். பழையசோற்றைதின்றுவிட்டு வெண்ணைந்தைபோல் திண்ணையில் படுத்து புரள நீலாயக்கே ஒழிய, சுறு சுறுப்பாக தேத்தண்ணீர் நரம்புகளில் ஓடிக்கொண்டிருக்கும்போது தொழிலாளர் கூட்டத்தில் மில்லில் நின்று பணம் சம்பாதிக்க நீ தகுதியில்லாதவன்" என்று சரமாரியாகப் பரபரப்புடன் ராமச்சந்திரன் பதிலுரைத்தான்.

வேலன் மனம் கொஞ்சம் கலங்கியது. ராமச்சந்திரன் நுனி விரல்களால் சோற்றை வாயில் போட்ட போது அது அமிர்தம் போலிருந்தாலும் அதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ள மனமில்லாமல் எல்லாம் சுந்தராம்பாளின் திறமையென்றே மனதில் நினைத்தான். எனினும் தேயிலையின் மகத்துவத்தை நினைத்து, சற்றே தயங்கினான்.

"அடே வேலா, நீ இந்த மாதிரி என் தங்கையுடன் கஷ்டப்படுவது எனக்குப் பிடிக்கவில்லை. குக்கிராமத்தில் இரண்டு ஏகரா நிலத்தையும் ஒரு குடிசை வீட்டையும் வைத்துக் கொண்டு இரவு பகலாக நிலத்தில் நெற்றி வேர்வை விழ வேலை செய்தும் என்ன பலனைக் கண்டாய். நான் மில்லில் மாதம் முப்பத்தைந்து ரூபாய் சம்பாதிக்கிறேன். சில வருஷங்களுக்குப் பிறகு ஐம்பது நூறாகிவிடும். குடியிருக்கச் சுத்தமான வீடு, போனஸ் பணம், பிராவிடன்ட் பண்டு இன்னும் பலவித சௌகர்யங்களுண்டு. சுந்தராம்பாளுடன் நீயும் இந்தப் பாழும் கிராமத்தை விட்டுவிட்டு என்னுடன் மதுரைக்கு வா. உங்களிருவருக்கும் 50 ரூபாய் மாதம் கிடைக்கும். குடியிருக்க வசதி உண்டு. வேலை அதிகமில்லை. மணிப்படி மில்லுக்குப் போய் எந்திரங்கள் ஓடுகிற அதிசயங்களைக் கண்டு களித்து மேலதிகாரிகளைத் தினசரி வந்தனம் செய்து காலம் கழிக்கலாம்" என்றான்.

"என்னடா மச்சான், நீ கிராம வாழ்க்கையின் சுகத்தை எங்கே கண்டாய். கருமமே கண்ணயினர். காரியமே கருத்து. எங்களுக்கு கோபால முதலியார் முதலான பெரிய பெருந்தன்மையுள்ள முதலாளிகள் இருக்கும் வரையில் எங்களுக்கு யாதொரு குறைவும் கிடையாது. எங்களுக்கு இட்டிலியும் தேத்தண்ணீரும் அகப்படாது என்கிறாயா? அவைகள் எங்கள் லட்சயத்துக்கு ஏற்றதல்ல. சாப்பிடுவதற்குப் போதுமான தான்யம் நிலத்திலிருந்து கிடைக்கிறது. பசு எருமைகளிடமிருந்து சுத்த பால், தயிர், நெய் முதலியன ஏராளமாகக் கிடைக்கின்றன. எங்கள் மனது சந்தோஷமாகவும் அமைதியாகவும் இருக்கிறது. தினசரி காலத்தைக் கழிக்க எங்கள் அழகிய வயல்களும்; மா, தென்னஞ் சோலைகளும் காவேரியாறுமிருக்க மாதச் சம்பளத்தைக் கொண்டு போலி ஆகாரங்களை வாங்கி எதற்காகக் காலம் கழிக்க வேணும். தவிர, இரக்கமற்ற மோட்டார்களில் போகும் பணக்காரர்களையும், மாடி வீடுகளையும் கண்டு ஏன் ஏமாற வேண்டும். நல்ல மாடுகள் உள்ளூரிலேயே விலை போகும். எங்களுக்குக் கிராமமே சுவர்க்கம்" என்று வேலன் உத்ஸாகத்துடன் பதிலுரைத்தான்.

"பழைய பாடங்களை எனக்கு வேண்டாம். உங்களை மதுரைக்கு அழைத்துப்போய் வேலையில் அமர்த்தவே நான் இங்கு வந்திருக்கிறேன். உங்களைமாத்திரம் அல்ல, இன்னும் அனேக கிராம சோம்பேறிகளைக்கூட அழைத்துப் போகப் போகிறேன். உங்களை நினைக்க

நினைக்க எனக்குப் பரிதாபமாகவிருக்கிறது'' என்றுசொல்லி, சாப்பிட்டுவிட்டுக் கைகளைக் கழுவிக்கொண்டு, காக்கிப்பையில் வைத்திருந்த சில காயிதங்களை வேலன்முன் விரித்தான்.

மதுரைமீனாக்ஷி கோவிலையும் அழகிய வைகை யாற்றின் படத்தோற்றத்தையும் மில்லின் பல அம்சங்களடங்கிய போட்டோ படங்களையும் கண்டு வேலன் பிரமித்துத் தயங்கினான்.

"இனி இவ்வுலகில் பணக்காரர்கள், ஏழைகள் என்ற ஜாதிவித்தியாசம் கிடையாது. பணக்காரர்கள், முதலாளிகள் என்ற கோரரூப ராட்சசர்களுக்கு இனி இடம் கிடையாது. உலகமெல்லாம் தொழிலாளர்களே. அவர்களை ரக்ஷிக்கத் தொழிலாளர் சங்கங்கள் ஆங்காங்கு ஏற்பட்டுவருகின்றன. உலகத்தின் பணம், செல்வாக்கு, நாகரிகம் எல்லாம் என் சட்டையிலுள்ள சுத்தியிலும் அரிவாளிலுமே அடங்கியுள்ளன. இனி மகாராஜாக்களோ, தனவந்தர்களோ ஏழைகளைச் சவுக்கடி அடித்து வேலை வாங்கும் காலம் மலையேறிவிட்டது. நீங்கள் மதுரைக்கு வந்து எங்கள் வைபவங்களை நேரில் கண்ணால் பாருங்கள்'' என்று வேலனுக்கு ஒரு சிறு பிரசங்கம் செய்தான்.

"ஆனால் எங்கள் கோபால முதலியார் நீ சொல்லுகிறபடியில்லையே. எங்களிடம் விசேஷ அன்புள்ளவர். நாங்கள் அன்புடன் வேலை செய்கிறோம். அவரும் அன்புடனே எங்களை வேலை செய்யச் சொல்வார். அவரின் சுகதுக்கங்கள் எங்களுடையவை. எங்கள் சுகம் அவருடைய பெருமை. எங்களுக்குக் கஷ்டம் நேர்ந்தால் அவர் உதவி செய்வார். ஒரு ஏகர் நிலம் அவர் குடும்பத்தாரால் என் குடும்பத்துக்கு மான்யமாக விடப்பட்டிருக்கிறது. மற்றவை எங்கள் குடும்பத்தார் பாடுபட்டுச் சேர்த்தவை. உன் தங்கை ஒழிவு நேரத்தில் கோபால முதலியார் வீட்டில் வேலை செய்வாள். வேலை என்ற பெயரே ஒழிய அவர் சம்சாரம் அவளைக் குடும்பத்தில் பிறந்த ஒருத்தி என்றே பாவிப்பாள். இவ்வூரிலிருக்கக் கடவுள் அனுக்கிரகம் வேண்டும். சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லை. மனசுக்கு அமைதி உண்டு. கிராம சமூகமே பட்டணத்தை விட அழகு வாய்ந்தது'' என்று வேலன் பதில் சொன்னான்.

"செவிடன் காதில் சங்கு ஊதுகிறது போலிருக்கிறது உன் பேச்சு. நீ கோபால முதலியார் குடும்பத்தை வர்ணிக்கிறாயே தவிர உன்னுடைய கௌரவத்தையும் உன்னுடைய ஆண்மைத்தனத்தையும் ஏளனம் செய்து கொண்டு வருகிறாய். நீ ஏன் கோபால முதலியார் போல் ஆகக்கூடாது? இந்த கிராமத்தில் உங்களை அந்தப் பதவிக்கு ஏறவிடுவார்களா? பயித்தியம்போல் அடிமை மோகத்தில் ஆழ்ந்து கிடக்கிறாய். நீ எப்பொழுதும் அடிமையாகவிருக்க விரும்புகிறாயா'' என்று கேட்டான்.

"ஏன் மாணிக்கம் பணக்காரன் ஆகவில்லையா? அவன் என்ன அடிமையா? அமைதியாகவிருந்தால் தக்க காலத்தில் பலன் கிடைக்கும். மாணிக்கம் இட்ட கட்டளையை இவ்வூரார் தலைமேல் செய்வார்கள். கடவுள் நியாயத்தவறாகவிருந்தாலும் இருப்பதாகத் தோணலாம். மாணிக்கம் நியாய வாக்கின் உருவமே''

"மாணிக்கம் மாத்திரம் குறுக்கிடாமலிருந்தால் இன்று பலகாரக்கடை சுப்பையனைச் சட்னியாக்கியிருப்பேன்'' என்று ராமச்சந்திரன் தடுத்துப் பேசினான்.

"ராமச்சந்திரா! நீ துரும்பைப்போல் ஆகிவிட்டாய். துரும்பை முறுக்கிப் போட்டால் துள்ளிக் குதிக்கும். அது போல் நீ பட்டணவாஸ மயக்கத்தில் துள்ளிக் குதிக்கிறாய். நீ இங்கேயே தங்கு. இந்தக் கிராமத்தில் அனேக வேலைத் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன; வீடுகள் புதுமாதிரி கட்டப் போகிறார்களாம்; பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, மின்சாரவசதி, தண்ணீர்ப் பாசனம் எல்லாம் ஏற்பாடாகிக் கொண்டிருக்கின்றன. இச்சிறு கிராமம் சிறிய பட்டணமாகப் போகிறதாம். இதே மாதிரி நம்முடைய கிராமங்களெல்லாம் முன்னேற்றமடையப் போகின்றன. அதற்கு ஊக்கமுள்ள ஆள்கள் தேவை. இங்கே சுயேச்சையாக சம்பாதித்துத் தேகத்தைத் திடப்படுத்திக் கொள். நீ ஏன் பல மில் அதிகாரிகளின் கொடுமைக்கு ஆளாகவேண்டும்'

"இந்த மாதிரி அனேக கட்டுக்கதைகளை நான் கேட்டு, காதுகள் செவிடாகிவிட்டன. கிராமத்தில் இனி நாய்கள்கூட நடமாடாது. சினிமா உண்டா, டிராமா உண்டா, பொழுது போக்கப் பந்தய விளையாட்டு மேடைகள் உண்டா—எதை நம்பி சர்க்கார் உங்களைக் கை தூக்கிவிடப் போகிறார்கள்? நீங்கள் பாடுபட்டுச் செக்குமாடுகள் போல் உழைத்து, தான்யங்கள் உற்பத்தி செய்ய வேண்டியது தான். வியாபாரிகள் ஒன்றுக்குக் கால் ரொக்கப்பணம் கொடுத்துச் சுயநலத்துக்காகப் பட்டணத்துக்கு வாரிக்கொண்டு போவார்கள், ஏமாற்றமடை

யாமல் தெம்புள்ள போதே மில்களில் வேலையில் அமர்ந்து பணம் சம்பாதியுங்கள். பிறகு கிழட்டுப் பிணங்களாகக் கிராமத்தில் தங்கி, காலத்தைக் கழியுங்கள்" என்ருன் ஆத்திரத்துடன்.

வேலன் மனம் அன்று முழுதும் தத்தளித்தது. சுந்தராம்பாள் தன் அண்ணன் சொல்வதில் ஏதோ உண்மையிருக்கிறது என்று நினைத்தும் பாஸ்கர புரத்தை விட்டுப் போகக் கொஞ்சம் கூட மனம் எழவில்லை. ராமச்சந்திரன் அன்று சாயந்திரம் சுப்பையன் பலகாரக் கடை எதிரில் செங்கொடி ஒன்றை நாட்டி, சுமார் நாற்பது ஐம்பது தட்டுக்கெட்ட வாலிபர்களை ஒன்றுசேர்த்து தொழிலாளர்களின் மகிமையைப் பற்றியும் அவர்கள் சாதித்திருக்கும் அரியபெரிய விஷயங்களைப் பற்றியும் ஒன்றுக்குப் பத்தாக அளந்துவிட்டுக் கொள்ளையடித்து ஏழைத் தொழிலாளிகளின் பணத்தைப் பிடுங்கி பெரிய தனக்காரர்களான பல பெரியோர்களை மனதாரத் திட்டி, கட்டுக்கடங்காத சில சிறுவர்களையும், வீட்டில் கோபித்துக்கொண்டு ரகசியமாக ஓட எத்தனித்துக் கொண்டிருந்த சில பாலர்களின் மனத்தையும் குழப்பிச் சிதறவிட்டு வேலன் வீட்டுக்கு வந்து பழைய புராணத்தை அவிழ்த்துவிட்டு, தொழிலாளர் உபாக்கியானத்தைத் தொடங்கி விட்டான். வேலன், சுந்தராம்பாள் தவிர உபந்யாசத்தைக் கேட்கச் சில சோம்பேறிகளும், கிராம உதவாக்கரைகளும் சேர்ந்து விட்டார்கள்.

மறுநாள் காலையில் மாணிக்கம் கோபால முதலியாரைச் சந்தித்து வேலன் மைத்துனன் ராமச்சந்திரனுடைய நடவடிக்கையைப் பற்றிப் பிரஸ்தாபித்தான். கோபால முதலியார் பால்ய சேஷ்டையின் கோளாறு என்று சொல்லி ஒன்றும் பொருள் படுத்தவில்லை. சுந்தராம்பாள் கோபால முதலியார் வீட்டின் பின் பக்கம் வழியாக உள்ளே வந்து அவர் சம்சாரத்தைக் கண்டு தான் தன் புருஷனுடன் தன் அண்ணன் ராமச்சந்திரன் வீட்டிற்கு மதுரைக்குப் போக அனுமதிகொடுக்க வேண்டுமென்று அச்சத்துடன் கேட்டாள். மதுரை பெரிய பட்டணமென்றும் சமத்தாகக் காலத்தைக் கழித்து சுகமாகத் திரும்பி வாவென்றும் ஆசீர்வதித்தாள். வீட்டு வேலையைப்பற்றிக் கவலையாக இருக்கிறது என்று சுந்தராம்பாள் சொல்வதற்கு முன் தான் பார்த்துக் கொள்வதாயும், அதைப் பற்றிக் கவலை வேண்டாமென்றும் கபடமற்ற பூர்ண மனதுடன் தெரிவித்தாள்.

வேலன் கோபால முதலியார் வீட்டுத்திண்ணையில் வந்து நின்று முதலியாரிடம் உத்தரவு கேட்டான் முதலியார் ராமச்சந்திரன் எங்கேயென்று கேட்டதற்கு அவன் மதுரைக்குப் போகத் தயாராகவிருந்த சிலருடன் பேசிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தான்.

"நீ மதுரையில் பஞ்சாலையில் வேலைக்கு அமரப் போகிருயா, அல்லது விருந்தாடியாகப் போகிருயா? என்று கேட்டார்.

"எனக்கு மதுரைக்கு உங்களை விட்டுப்போக மனமில்லை. ஆனால் ராமச்சந்திரன் அங்கே சம்பாதிக்க அனேக வசதிகள் இருக்கிறதென்றும் கட்டாயம் குடும்பத்துடன் அங்கே வர வேண்டுமென்றும் வற்புறுத்துகிருன். அவன் சொல்வதை நான் தட்டமுடியவில்லை. ஆனால் தங்களை விட்டுப் போகத்தான் வருத்தமாக இருக்கிறது"

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பது சான்ருேர் வசனம். மதுரைக்குப் போய் நேர்மையாக வேலையிலமர்ந்து திரவியம் சம்பாதித்து, பிள்ளை குட்டிகளுடன் சுகமாகத் திரும்பிவா. கடவுள் சம்மத மிருந்தால் நான் உன்னை மறுபடியும் சௌக்யமாகப் பார்ப்பேன். பாஸ்கரபுரத்தான் என்ற நல்வாக்யத்தை நீ எப்பொழுதும் காப்பாற்றுவாய் என்பது என்னுடைய திண்ணம். ஆனால் பட்டணச் சூழ்ச்சியில் மயங்கிவிடாதே. உன் வீட்டையும் நிலத்தையும் நீ என்ன செய்யப்போகிருய். ஏதாவது ஏற்பாடு செய்து விட்டுப்போ. பிதுரார்ஜித திரவியம். வீணுப்போகலாகாது.'

"அதைப்பற்றித்தான் கவலையாக இருந்தது. ஆனால் மாணிக்கம் நிலத்தைக் குத்தகைக்கு ஒப்புக்கொண்டான். நீங்கள் என் வீட்டையும் மாடு கன்றுகளையும் பார்த்துக் கொள்ள வேணும்"

"குடியில்லா வீட்டைப் பார்ப்பது தான் கஷ்டம். ஆனால் உங்கள் குடும்பத்தார் எங்கள் மேல் வைத்திருந்த விசுவாசத்துக்காக நான் கவனித்துக் கொள்ளுகிறேன். ஆனால் பட்டண வாசம் ஒரு சூதாடியின் தொழில் போல் ஆகிவிட்டது. பணக்காரர்களாவதுமுண்டு. உண்ண உடுக்க வசதியில்லாதவர்களாகவும் ஆவதுண்டு. உன் குணத்துக்கு முதல் சொன்னதே தகுதியாகும். அப்படி துரதிர்ஷ்டவசத்தால் உனக்கு ஏதாவது குறைவு ஏற்பட்டால் பாஸ்கர புரத்தையும், மாணிக்கத்தையும், என்னையும் மறந்து விடாதே. நாங்கள் எப்பொழுதும் உன் மேலான க்ஷேமத்தைக் கோருகிறவர்கள். உனக்குக் குறைவு ஏற்பட்டு நான் உதவி செய்ய வேண்டுமென்பது என் கருத்தல்ல. எல்லாம் ஈசன் செயல். போய்வா"

## 2

சுமார் ஐந்து மாதங்கள் கடந்தன. மதுரைப் பஞ்சாலையில் வேலைக்கு அமர்ந்த சில வாலிபர்கள் வாரந்தோறும் பாஸ்கரபுரத்திற்கு வந்து கொண்டிருந்தார்கள். சுப்பையன் பலகாரக் கடையில் அந்தச் சமயங்களில் வியாபாரம் ரொம்ப கடுமை. பலகாரக் கடை ரெஸடோரண்டாக மாறிவிட்டது. சிலர் மாடர்ன் 'கபே' என்றும்கூட சொல்லத் தொடங்கிவிட்டார்கள். வாரம் ஒரு முறை விடுமுறை என்று சுப்பையன் ஹோட்டலைச் சாத்திவிடுவான். பாஸ்கரபுர ஸ்திரமான குடிபடைகளுக்கு காபி, இட்டலி, தோசை கிடைப்பது அரிதாகிவிட்டது. காசைக் கொடுத்தாலும் இல்லையென்றால் நிர் தாக்ஷிண்யமாக இல்லைதான். கிராமத்தார்களைக் கெஞ்சிக்கொண்டு காவேரியோரத்தில் குடிசை போட்ட சுப்பையன், பெட்ரோமாக்ஸ் லைட், காரைக் கட்டிடம், செங்கொடி பறக்கும் மார்பிள் டேபிள், கப் ஸாஸர் மாடர்ன் கபே புரொப்ரைட்டர் தோழர் சுப்பையாவாகி விட்டார். பணச்செருக்கு ஏற்பட்டதும் ஒரு மமதையும் ஏற்பட்டுவிட்டது. நிலைமையைக் கிராமத்தார்கள் அறிந்தும் காலத்தின் போக்கு என்று சும்மா பொறுத்துக் கொண்டிருந்து விட்டார்கள். கிராமவாசிகளுக்கு ரெஸ்டோரெண்ட் தேவையில்லை. கிளப்புக்குச் செலவழித்த பணத்தைச் சிக்கனப்படுத்தி, வீட்டிலேயே தங்களுடைய பசியின் வியாதிகளைத் தீர்த்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். சுப்பையனுடைய திரவியம் விஷமேறுவது போல் ஏறிக்கொண்டே வந்தது. காரணம், தொழிலாளர்களும், அவர்களுடைய சிப்பந்திக் கூட்டங்களுமே. தொழிலாளர் சங்க நிதி உண்டியென்ற ஒரு பெரிய இரும்புப் பெட்டி கடைவாசலில் புதைக்கப்பட்டது. பிடாரி கோயில், அய்யனர், மாரியம்மன் கோவில், கிராமதேவதை உண்டிகளில் விழுந்து கொண்டிருந்த சில்லறைக்காசுகள், காணிக்கைகளைக் காந்தம் பிடித்த இரும்புப் பெட்டி கவர்ந்தது. இரும்புப் பெட்டி உண்டியின் பொக்கிஷதார் யார் என்று ஒருவரும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

ராமச்சந்திரன் தோழர்களின் பிரபல வீடராகவே ஜ்வலித்தான். ஊழியத் தொழிலில் அமர்ந்த எந்தக் கூலியாளும் ராமச்சந்திரனென்றால் ஹிட்லர் ஸல்யூட் அடிப்பான். காகிப்பையுடன் கால்நடையாக ஊர்வலம் வந்த ராமச்சந்திரன் உத்தியோகம் வலுக்க; பஸ்ஸில் ஏறுவதும் காரில் போவதும் சமயத்தில் ஆகாயவிமான உதவியை எதிர்பார்ப்பதும் தவறுதல் அல்ல வென்று ஏற்பட்டுவிட்டது. ராமச்சந்திரன் கூட்டங்களில் வைஸ்ராய் கவர்னர்கள் என் கொள்ளைச் சம்பளம் வாங்குகிறார்கள் என்று கர்ஜிக்கும் சமயத்தில் கரகோஷங்கள் அணுகுண்டு வீழ்ச்சிச் சப்தத்தை தோற்கடித்துவிடும்.

வேலனும் சுந்தராம்பாளும் மதுரை பிரபல பஞ்சாலையில் ராமச்சந்திரனின் பேருதவியால் வேலைக்கு அமர்ந்தார்கள். தினந்தோறும் வேலைக்குத் தவருமல் மணிப்படி போய் வருவார்கள். கோழி கூப்பிடும்போது எழுந்திருந்தவர்கள் சங்கு ஊதும்போது விழித்துக் கொள்ளப் பழக்கப் படுத்திக் கொண்டார்கள். காவேரியாற்றையும் முருகனையும் பின்பற்றிய வேலன் மதுரை டவுன் தண்ணீர் குழாயையும், சாக்கடை ஓரங்களையும் தரிசிக்கும்படி நேரிட்டது. காவேரியாற்று வெள்ளப் பெருக்கையும், அமிர்தம்போன்ற ஊற்று ஜலத்தையும் அனுபவித்த சுந்தராம்பாள் பைப் சண்டையையும் தண்ணீரில் பாலைக் கலந்த திராவகத்தையும் தரிசித்தாள். வெள்ளை வேஷ்டி வேலன் காக்கி ஜெட்டி தோழனுக மாறும்படி நேர்ந்துவிட்டது. டாம்கோ ஆயில், பேஸ் பவுடர், லுங்கி பார்டர் புடவை, கனகாம்பர புஷ்ப மூட்டைகளைக் காலவசத்தால் சுந்தராம்பாள் அனுஷ்டித்து வரும்படி நேர்ந்துவிட்டது. சுமார் இரண்டு மாதங்கள் கால அட்டவணைப்படி நடந்தன. தொழிலாளர்கள் பலர் மில்லில் வேலை செய்து வந்தார்கள். ஆயிரக்கணக்கானவர்கள்தான். ஒருவரை யொருவர் தெரிந்துகொள்ள அவகாசம் கிடையாது. அப்படியிருந்ததால் சிநேக பாவம் அதிகமாக ஏற்படவழியில்லை. ஒருவரையொருவர் சந்திக்கும்போது இரண்டொரு வார்த்தைகள் பேசிக் கொள்ளத்தான் அவகாசமிருக்கும். குளத்தங்கரையில் துள்ளிக் குதிக்கும் மீன்கள் போல் வேலனும் அவனுடைய தர்மபத்தினியும் மதுரை மாநகர் பஞ்சாலை எஞ்ஜின்கள் கர்ஜிக்கும் கோர சப்தத்தில் ஆழ்ந்து நின்றார்கள். ராமச்சந்திரனுக்கு வேலனின் குறைகளைக் கேட்கவோ, ஆறுதல்கள் சொல்லவோ அவகாசப் படவில்லை. தொழிலாளர்களைச் சங்கங்களில் சேர்ப்பதிலும், அட்மிஷன், என்ட்ரென்ஸ், மெம்பர் சம்பளங்களை வசூலிப்பதிலும், தொழிலாளர் சங்க அபிவிர்த்தியை வளரச் செய்வதிலும், காரிய கமிட்டியின் காலாலிட்ட கட்டளைகளைத் தலையால் செய்வதிலும் ஈடுபட்டிருந்தான். பஞ்சாலையில் மாதச் சம்பளம் வாங்கினுலும் அவனுக்காக ஏற்பட்ட வேலைகளைச் செய்ய அவகாசமில்லை. ஏனெனில், எந்திரங்கள் ஓடுகின்றன. சரியாக ஓடுகின்றனவா? ஓடுவதற்கு வேண்டிய சாதனங்

ளிருக்கின்றனவா? அந்தப் பெரிய பூதங்கள் சாப்பிடக் கணக்குப்படி பஞ்சுகள் கொட்டை யில்லாமல் கொடுக்கப்படுகின்றனவா என்று நின்று கவனிப்பதுதான் அவன் வேலே. அது நூலாக மாறுகிறதோ அல்லது அறுந்துவிட்டதோ அல்லது பூதத்தின் வாயில் திணிக்கும் பஞ்சுகள் என்ன ஆகிறதோ என்ற கவலே அவனுக்குக் கிடையாது. அந்தந்த வேலேகள் செய்ய ஆங்காங்கு புத்தி மழுங்கிய மனித உருவங்கள் நின்றுகொண்டிருந்தன. மேலதிகாரிகள் உலாவிக்கொண்டிருக்கும் சிற்சில சமயங்களில்தான் சில மயமான மனித பிம்பங்களில் உணர்ச்சிகள் காணப்படும்.

வேலன் சுந்தராம்பாள் இருவருக்கும் மாதம் 50 ரூபாய் சம்பளம். ஒருமிக்க அவ்வளவு திரவியத்தை அவர்கள் கண்ணுல் கண்டதில்லே. முதல் மாதத்தில் தங்களுக்கு அவ்வளவு கிடைத்த விஷயத்தில் ஒரு அதிர்ச்சிதான். ஆனல் ஆபீஸின் வெளியில் வந்ததும் சங்கச் செலவு, கூட்டுறவு நிதி, தான்ய சப்ளே யென்று பல சாக்குப் போக்குகளில் முக்கால் வாசி தீர்ந்துவிட்டது. பாக்கியிருந்த கொஞ்சம் நஞ்சம் துணி மணி கண்ணுடி சோப் பவுடர்களாகக் கரைந்துவிட்டது. பதினேந்து நாள் சென்றதும் அடுத்த மாதச் சம்பளத்தை எங்கிப் போய் எதிர்பார்த்தவர்களாய் முதல் தேதியை நம்பியிருந்தார்கள். வேலேகளோ அதிகமாகக் கிடையாது. மேலதிகாரிகளுக்கு டிமிக்கி கொடுப்பது என்பது ஒரு அரிய பெரிய வித்தை. அனேக தொழிலாளர்கள் அவ்வித்தையில் அனுபவத்தால் நன்ருய்ப் பயின்றவர்கள்.

"பஞ்சாலே முதலாளிகள் ஏழைகளிடம் கசக்கிவேலே வாங்கி ஒரு ரூபாய் பொருளே பத்து ரூபாய்க்கு விற்று ஏழைகளின் வாயில் மண்ணேத் தெள்ளிப் போட்டுத் கோடீசுவரர்களாக ஆகி, தாங்கள் வசிக்கத் தனி பூந்தோட்டப் பங்களாவும், மலேகளில் கோடைக் காலமாளிகையும், உல்லாசபொழுது போக்க விநோத விலே மாதர்களேயும் ஏற்படுத்திக் கொள்ளுகிருர்கள். இவர்கள் பஞ்சாலேயை எட்டிப்பார்த்திருப்பார்களா? நாம் படுங் கஷ்டங்களேத் தெரிந்துகொண்டிருப்பார்களா? என் இந்த அக்கிரமகாரர்களுக்கு நாம் பணம் சம்பாதித்து கொடுக்கவேண்டும்?" என்று ஒரு நாள் சுந்தராம்பாள் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த லெட்சுமி அவள் காதில் பட உரக்க எஞ்சின் சத்தத்தின் மேல் குரலுடன் கத்தினுள்.

"இணைற்றுத் தவளேக்கு நாட்டு வளப்பமேன். நாம் சம்பளம் வாங்குகிருேம். எஜமானுக்குத் துரோகம் செய்யாமல் வேலே செய்வது நம்முடைய கடமை" என்று சுந்தராம்பாள் பதிலுரைத்தாள்.

"இதென்ன நியாயம் அம்மா! நீ தொழிலாளர் சங்கக் கொள்கைகளே அறியவில்லேயா? இனி லட்சாதிபதிகள் கோடீசுவரராகார்கள். ஏழைத் தொழிலாளிகள் லட்சாதிபதிகளின் வாழ்க்கைக்குச் சமமாக இருப்பார்கள். நீ கொஞ்சநாள் மெதுவாக வேலே செய். தொழிலாளர்கள் எல்லோரும் அவ்விதமாகவே செய்யப் போகிருர்கள். உற்பத்தி குறையும், கொள்ளே லாபம் குறையும்; முதலாளிகள் தொழிலாளிகளேக் கும்பிட்டுக் கெஞ்சுவார்கள்."

"அது தர்மமல்ல. நான் மனச் சாட்சிக்கு விரோதமாக நடக்க முடியாது" என்ருள் சுந்தராம்பாள்.

"நீ ஒருத்தியால் என்ன முடியும். தொழிலாளர்கள் முழக்கம் கேட்கவில்லேயா" என்று லெட்சுமி சொல்வதற்குள் மானேஜர் சமீபத்தில் வந்து லெட்சுமியை வேலேயை விட்டு டிஸ்மிஸ் செய்து விட்டதாக உத்தரவிட்டார். லெட்சுமி "ஹோ" என்று அலறிக்கொண்டு அடுத்த கட்டிடத்தில் வேலே செய்து கொண்டிருந்த தன் புருஷனிடம் முறையிட்டாள். லெட்சுமி டிஸ்மிஸ் செய்யப்பட்டாள் என்ற விஷயம் காட்டுத் தீப்போல் பஞ்சாலேயில் பரவிவிட்டது. தொழிலாளர் சங்கம் இந்தக் கேஸை சொந்தமாக எடுத்துக்கொண்டு மானேஜருடன் கடித யுத்தத்தைத் துவக்கினுர்கள். விசாரணே செய்ய மானேஜருக்கு இஷ்டமில்லே. நடந்த சம்பாஷணேயை ராமச்சந்திரன் தங்கை நடந்தபடி சொல்வாளோ என்ற சந்தேகந்தான் மானேஜருக்கு. கடிதப் போக்குவரத்து காலத்தில் சுந்தராம்பாள் நிலேமைமோசமாகிவிட்டது. சங்கத்தலேவர்கள் சுந்தராம்பாளேப் பயமுறுத்தினுர்கள். சத்திய சந்தனுன வேலன் தன்னுடைய மனேவியின் கட்சியில் நின்ருன். அநேக தொழிலாளிகள் சுந்தராம்பாளே வீடர் ராமச்சந்திரன் தங்கையல்ல வென்ருர்கள். ராமச்சந்திரனும் தன்னுடைய தலேமைப் பதவியை இழக்க மனமில்லாமல் தொழிலாளர்களுடன் சேர்ந்தான். இதற்குள் பஞ்சாலே நிலேமை மோசமாகிக் கொண்டு வந்தது. லெட்சுமியின் டிஸ்மிஸல் ஊர்ஜிதமாகிவிட்டது.

வேலனும் சுந்தராம்பாளும் மில் சொந்தக்காரர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களென்றும் அவர்களே விரோதிகளாக பாவிக்கவேண்டுமென்றும் அனேகர் பேசத் தொடங்கிவிட்டார்கள். ராமசந்திரனும் மௌனம் சாதித்தான். நியாயமான வேலேயி லீடுபட இந்த ஆபத்தா

என்று வேலன் மனம் நொந்தது. ஐந்து மாத காலத்தில் 250 ரூபாய் சம்பளம் கிடைத்ததே என்ற கௌரவத்தைத் தவிர மனம் சாந்தியடையவில்லை. மனதார வேலை செய்வதென்றால் தொழிலாளர்கள் இடங்கொடுக்கவில்லை. வேலை செய்யாமல் டிமிக்கி விடுவதென்றாலும் மனம் இடங்கொடுக்கவில்லை. வேலையை விட்டு ஓடுவதென்றால் பயங்காளிகள் என்று தொழிலாளர்கள் ஏசுவார்கள். தொழிலாளருடன் ஒத்துழைக்க நினைத்தாலும் அவர்கள் இவர்களைச் சட்டமில்லாமல் ஒதுக்கிவிட்டார்கள். ராமசந்திரனை யுக்தி கேட்கலாமென்று நினைத்தால் அவன் இவர்கள் கண்களில் அகப்படுவதில்லை.

ஐந்தாவது மாதம் ஆரம்பித்தவுடன் மதுரை டவுன் அமளியாகக்கிடந்தது. யுத்தம் நின்றும் சாமான்கள் அகப்படவில்லை. அரிசிக்கு ரேஷன். கிடைப்பதும் அரிது. சர்க்கரை குதிரைக் கொம்பு, உயிரைக் கொடுத்து வரிசையில் நின்று கிரோஸின் கால்புட்டி வாங்கவேண்டும். விறகு ரேஷனில் குடும்பங்கள் தத்தளித்தன. உடுக்க உடை யானை குதிரை விலை. குடியிருக்க வீடுகள்கூடக் கிடைப்பது அரிதாகிவிட்டன. தொழிலாளர்கள் பட்டணத்தில் வரம்புகடந்து நின்றார்கள். கல்லெறி, கத்திக்குத்து, வேலை நிறுத்தம் முதலியன மீனாக்ஷியம்மன் க்ஷேத்திரத்தில் தாண்டவமாடின. எல்லாவித தொழிலாளிகளும் சம்பளம் வாழ்க்கைக்கு கட்டவில்லையென்றுவேலை நிறுத்தத்தீர்மானங்கள் கொண்டு வந்தார்கள். பஞ்சாபீஸிலும் வேலை நிறுத்தப் பேச்சு மும்மரமாக நடமாடினது.

வேலன் தன் பாஸ்கரபுரத்தையும் மாணிக்கத்தையும் கோபால முதலியாரையும் நினைத்து நினைத்து வருந்தினான். ஒரு நாள் திடீரென்று மில் லாக்கவுட் என்றார்கள். மில் வேலைக்காரர்கள் தங்கள்நியாயமான கோரிக்கைகளைத் தீர்க்காவிட்டால் வேலை நிறுத்தம் செய்துவிடுவோம் என்றார்கள். வேலைக்குப் போக முயன்ற சிலர் குத்தப்பட்டார்கள். போலீஸ் உத்யோகஸ்தர்கள் அனேகர் மில்லைக் காப்பாற்ற வந்தாலும் புரட்சி அடங்காமல் அதிகரித்துவிட்டது. அனேகவித தொழிலாளர்கள் செங்கொடிகளைத் தூக்கிக்கொண்டு கூட்டம் கூட்டமாகவும் பத்தி பத்தியாகவும் ஊர்வலம் வந்தார்கள். தெரு ஜனங்கள் வேடிக்கை பார்ப்போமென்று வெளிக்கிளம்ப உத்தேசித்தால் உயிருக்கே அபாயம். பஞ்சாலை அதிகாரிகள் வீடுகளைக் காலி செய்யும்படி தொழிலாளர்களை வற்புறுத்தினார்கள்.

வேலனும் சுந்தராம்பாளும் தாமரை இலையிலுள்ள ஜலத்துளிகளைப்போல் தத்தளித்தார்கள். கூட்டத்திற்கு ராமச்சந்திரன் தலைவன் என்றும் அவனுக்கு எப்பொழுதும் ஆபத்தென்றும் தெளிவாகிவிட்டது. லயனில் தங்கியிருக்க அவர்களுக்கு மனம் வரவில்லை. ராமச்சந்திரன் அடிபட்டு எங்கேயோ ஓடிவிட்டானென்ற வதந்தி கிளம்பினது. டவுனின் சம்பாதித்தது போதுமென்று வேலனும் சுந்தராம்பாளும் தங்கள் கிராமத்துக்குக் கால் நடையாகக் கிளம்பினார்கள். நாலைந்து நாள் கஷ்டப்பட்டு மனோவியாகூலத்துடனும், பசியால் பீடிக்கப்பட்டும் கோபால முதலியார் வீட்டு வாசலில் வந்து விழுந்தார்கள்.

கோபால முதலியார் மிகுந்த அனுதாபத்துடன் இருவர்களையும் வரவேற்று உள்ளூரிலிருந்த ஒரு வைத்தியரைக்கொண்டு இந்தத் தம்பதிகளுக்குச் சிகிச்சை செய்தார். டவுன் வாழ்க்கையும் மில் சேவையும் எங்கள் குடும்பப் பரம்பரைக்கு வேண்டாமென்று முருகன்முன் வேலன் சபதம் செய்துகொண்டான்.

வேலையிழந்து போலீஸ் அதிகாரிகளிடமிருந்து தப்பி ஓடி ராமச்சந்திரன் சுப்பையன் ரெஸ்டோரெண்டுக்குத் தட்டுத் தடுமாறிக் கொண்டு வந்தான். சுப்பையனே டீஸ்டாலை மூடிக்கொண்டு இரும்புப் பெட்டியிலுள்ள உண்டியில் பணத்தை வாரித் திரட்டிக் கொண்டு இரவோடிரவாகப் போனவிடம் தெரியாமல் மறைந்து விட்டான்.

கடைசியில் ராமச்சந்திரனை உயிர்ப்பித்து, கிராம காரியாலயங்களில் ஈடுபடும்படி செய்வது பெருந்தன்மை வாய்ந்த கிராமப் பெரிய தனக்காரரான கோபால முதலியாரின் பொறுப்பாகவே முடிந்தது.

கிராம சமூகச் சிறப்பு பாஸ்கரபுரத்தில் முருகனருளால் செழித்தோங்கி வந்துகொண்டிருக்கிறது. புராதன அனுஷ்டானங்களை ஒட்டி நவீன முறைகளில் கிராம பரிபாலனம் செழித்தோங்கி வளர்கிறது. இந்தியாவில் புரட்சிப் புயற்காற்றில் அடிபட்டும் அடிபடாமலும் ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. ஜாதிமத பேதமின்றி, தங்கள் தங்கள் வேலைகளைக் கண்ணும் கருத்துமாகச் செய்பவர்கள் பலர் இருக்கிறார்கள். வித்யாசங்களை வளர்த்துத் தீமூட்டி வளர்த்தாலும் கோபால முதலியார் போல் பலர் பசுக்களைப் போல அமைதி நிலைமையை நாட்டிக்கொண்டே இருக்கிறார்கள்.

---



எல்லா பொருட்களும் ஏராளமாகக் கிடைத்து வந்திருந்த பண்டைய நாட்களில் வீண் செலவு செய்கிறவர்களை மன்னிக்க இடமிருந்தது. ஆனால் எதிலும் சிக்கனம் கையாளவேண்டியிருக்கும் இன்றோ ஹமாம், 501 ஸோப்புகளின் சின்னஞ்சிறு துண்டு துக்கடாக்களையும் காப்பாற்றுவது அத்தியந்த அவசியம்.

## ஹமாமும் 501 ஸோப்புகளும்

**தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.**

---

வேலை செய்யும்
ஒவ்வொரு மணி
நேரத்துக்கும்

# லக்ஷ்மி

தன் பாலிஸிதாரர்களுக்கும், நலனடைவோருக்கும் 1946-ல் செலுத்தியது

## ரூ. 1000-க்கு அதிகம்

**லக்ஷ்மி பாலிஸிகள்**

என்றாலே பாலிஸித் தொகையை உடனுக்குடன் பைசல் செய்வது

## லக்ஷ்மி இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: அமிர்தசரஸ்

### தேவை

ஆர்கனைஸர்கள்: இன்ஸ்பெக்டர்கள், அனுபவம், நம்பிக்கை, செல்வாக்கு, திறமை உள்ளவர்கள் பிரதிநிதிகள் இல்லாத இடங்களில் தக்க சம்பளத்திலே உழைக்க கீழ்கண்டவருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

பிராஞ்சு மேனேஜர்:

**லக்ஷ்மி இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,**

தபால் பெட்டி 1244. :: மதராஸ்.

# கதம்பம்

## பாராட்டுவோம்!

சினிமாவில் ஆபாசக் காட்சிகள் மலிந்துகிடக்கின்றன என்பதைத் திடீரென்று இப்பொழுது 'சென்ஸார்' என்ற திருக்கூட்டத்தார் உணர்ந்து விட்டார்கள்! ஆபாசங்களைப் பார்த்து, களித்து, சலித்துவிட்டார்கள் என்று கூடக் கூறலாம்.

தமிழ்ப் படங்களில் அரை நிர்வாணக் காட்சிகள், பச்சையாக, கொச்சையாக, விரசமான காதல் சம்பாஷணைகள்–இவைகள் 'சென்ஸார்' அவர்களது அனுமதிபெற்றே காட்டப்படுகின்றன. அறிவாளிகள் தமிழ்ப்படமென்றால் கேவலமாகக் கருதுகிறார்கள். இளைஞர்கள் 'மனிதனின் மேன்மையான உணர்ச்சிகள் பாழாக்கப்படுகின்றனவே' என்று வருத்தங் கொள்ளுகின்றனர். யௌவன ஸ்த்ரீ புருஷர்கள் ஆபாஸங்களைப் பார்ப்பதற்கே சென்றுவிட்டுக் குறை கூறுகின்றனர். பத்திரிகைத் தொழில் நடத்துபவர்களும் நேர்மையான முறையில், உள்ளது உள்ளபடி விமர்சனம் செய்வதில்லை. ஆபாசப் படங்களுக்கு வசூலாகி விடுகிறது என்பதை ஆதாரமாகக் கொண்டு பட முதலாளிகள் ஆபாஸங்களை அதிகமாக்குகிறார்கள். மேல் நாடுகளில் சினிமா சிறந்த அறிவு வளர்ச்சிச் சாதனமாக விளங்குகின்றது. இங்கு மக்களை அறிவிலிகளாக்க சினிமா உதவுகிறது.

இப்படிப்பட்ட வெட்கக்கேடான நிலைமையைச் சீர்திருத்த 'சென்ஸாரும்' தூக்கத்திலிருந்து விழிப்படைந்து சில அரிய சீர்திருத்தக் கோட்பாடுகளை வெளியிட்டுள்ளார்கள்.

மிருக வெறியை எழுப்பும் காட்சிகள் கூடாது.

அரை நிர்வாணமாகவோ, அல்லது முழு நிர்வாணமாகவோ ஆட்டம் கூடாது.

காம விகாரம் உண்டுபண்ணக் கூடிய விதமாய் அங்கங்களைக் காட்டக்கூடாது.

சமூகத்தையோ, மதத்தையோ அல்லது அவைகளின் பழக்க வழக்கங்களையோ பழிக்கும் விதத்தில் காட்சிகள் இருத்தல் கூடாது.

கடவுள் நிந்தனை கூடாது.

கொள்ளை, கொலை முதலிய கோரக் காட்சிகள் அளவுக்கு மீறி, தீய உணர்ச்சிகள் எழுப்பும் வண்ணம் இருத்தல் கூடாது.

இப்பொழுதாவது தம் கடமையைச் செய்ய முன்வந்த 'சினிமா சென்ஸார்' அவர்களைப் பாராட்டுவோம்!

## ராஜாக்களின் கலாட்டா

இன்னும் சில சுதேச சமஸ்தானாதிபதிகளுக்கு ஞானோதயம் ஏற்படவில்லை! பழைய 'ஜபர்தஸ்தை'க் கைவிட மனமில்லை. மக்கள் தான் இனி இம்மாநிலத்து மன்னர்கள் என்ற உண்மையைப் புரிந்து கொள்ளவில்லை. ஏதேச்சாதிகாரங்களை உதறித்தள்ள மீனம் மேஷம் பார்க்கிறார்கள். மக்களின் பரிபூரண சுதந்திர உரிமைகளைப் பறி முதல் செய்யவே திட்டமிடுகிறார்கள். கண் துடைப்பு ஜாலவித்தை காட்டுகிறார்கள். மக்கள் விழிப்படைந்து விட்டார்கள் என்பதை உணர மறுக்கிறார்கள். திருவாங்கூர் சமஸ்தானம் வழிகாட்டியும் விழிப்படையாமல் மயக்கத்தில் ஆழ்ந்துள்ளார்கள். அடக்கு முறையை அமுல் நடத்துவதில் ஆர்வம் காட்டுகிறார்கள். சகுனி மாமாக்களின் துர்ப்போதனைகளைக் களைந்து மக்களின் அன்பை, ஆதரவைப் பெற முயற்சி செய்யவில்லை.

சமஸ்தானங்களில் மிகவும் பிற்போக்கானது ஐதராபாத்! மக்களில் மிகவும் பெரும்பாலோர் ஹிந்துக்கள். ஆனால் பொறுப்பு வாய்ந்த பதவி வகிப்போர் பிற் போக்கு மனப்பான்மை கொண்ட முஸ்லீம்கள். நேற்று வரை மக்களின் பிரதிநிதிகள் என்று கூட சட்ட சபையில் கிடையாது. சட்டசபை என்று ஒரு கேலிக் கூத்துச் சபை உண்டு. பொதுஜன அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் கொடுக்காத இடமது. பொதுஜன மந்திரிகள் என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் நிஜாம் அவர்கள் மூர்ச்சை போட்டு விடுவார்! அப்படிப்பட்டவர் மக்களின் சுதந்திர கோஷத்தை வெறுப்பதில் ஆச்சரியமில்லை. 1947-ஆம் ஆண்டில் ஒவ்வொரு நாடும் பரிபூரண சுதந்திரத்தை அடைய முற்படும் நாளில் உளுத்துப்போன இரட்டையாட்சித் திட்டத்தைச் சீர்திருத்தப் பரிசாக நிஜாம் அவர்கள் வழங்க முன் வருகிறார். சிறுபான்மையோராகிய முஸ்லீம்களுக்கு அதிக

ஸ்தானங்கள். பெரும்பான்மையோருக்கு மிகக் குறைவான பிரதிநிதித்துவம். பொறுப்பற்ற சட்டசபை. மதிப்பில்லாத மந்திரிகள். மக்கள் இந்த அநீதியைத் தகர்த்தெறியக் கிளர்ச்சி செய்கிறார்கள்.

சற்று முற்போக்கான மைசூர் சமஸ்தானத்திலும் பூரண சுதந்திரம் மக்கள் கோருகிறார்கள். பழைய சேற்றில் ஊறிய திவான் முதலியார் முட்டுக்கட்டைகள் போடுகிறார். சர். ஸி. பி. யின் கதியை நினைத்தாவது முதலியார் திவான் புத்தியுடன் பிழைப்பார் என்று எண்ணிய அறிவாளிகளுக்கு ஏமாற்றம்! இந்திய யூனியனில் வாழும் மக்களும் சரி, சமஸ்தானங்களில் வாழும் மக்களும் சரி, யாவரும் பாரத மக்களே. ஒரு பிள்ளைக்கு நல்ல பழமும் மற்றொரு பிள்ளைக்கு அழுகின வாழைப்பழமும் என்ற நீதி அடுக்குமா? சகோதரர்கள் இந்த வித்யாசத்தைப் பொறுப்பார்களா?

காலத்தை உணர்ந்து மக்களின் பரிபூரண சுதந்திர அபிலாஷையைப் பூர்த்தி செய்வதே சமஸ்தானாதிபதிகள் பிழைக்கவழி. இல்லாவிடில் சமஸ்தானாதிபதிகள் என்று பெயரளவில் சொல்லிக்கொள்ளக்கூட உரிமை இல்லாமல் போய்விடக்கூடும். கட்டுக்கடங்காமல் கரைபுரண்டோடி வரும் வெள்ளத்தை இரண்டு சட்டி மண்ணை வெட்டி அணைபோட்டுத் தடுக்க முயல்வது புத்திசாலித்தனமா என்பதை நமது சமஸ்தானாதிபதிகள் நன்கு யோசித்து உணர வேண்டுகிறோம்!

## இனி தனிச் சலுகை எதற்கு?

நாடு துண்டிக்கப்பட்டாய்விட்டது. முஸ்லீம்கள் தனி ராஜ்யம் ஸ்தாபித்துக் கொண்டுவிட்டனர். இந்திய யூனியனில் வசிக்கும் சிறுபான்மையோராகிய முஸ்லீம்கள் பழையபடி விசேஷ சலுகைகள் கொண்டாடி, கிளர்ச்சி செய்வது நியாயமல்ல. எல்லாச் சிறு பான்மையோருக்கும் உள்ள பாதுகாப்புக்கள் அளிப்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் பெரும்பாலரான சமூகத்திற்குக் கிடைக்கும் வசதிகளைவிட அதிகப்படி வசதிகள் இன்னும் அளிக்கப்படுவதைக் கண்டிக்காமலிருக்க முடியாது. உதாரணமாக "முஸ்லீம் பெண்கள் கல்லூரி" என்று சென்னையிலிருக்கிறது. அதில் படிக்கும் முஸ்லீம் பெண்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அக்கல்லூரிக்கு மேலும் சலுகைகள், ஆதரவு காட்ட வேண்டுமென்ற கிளர்ச்சியைப் பேகம் அம்மிருத்தீன் என்ற அம்மையார் ஆரம்பித்திருக்கிறார்.

"முஸ்லீம் பெண்களின் விஞ்ஞானம் முதிர இப்பொழுதுள்ள பாடங்கள் போதா. வேறு பாடங்களும் போதிக்கப்பட வேண்டும். பாஷை சம்பந்தமாகவும் பண்பு சம்பந்தமாகவும் முஸ்லீம் பெண்களுக்குத் தனித்தேவையிருக்கின்றது."

வேறு பாடங்கள் போதிக்கப்படும் கல்லூரிகளுக்கு முஸ்லீம் பெண்கள் போவது உசிதமல்லவாம்.

இப்படிப்பட்ட அர்த்த மற்ற பிரிவினை ஏற்பட்ட பிறகே துவேஷம் நாட்டில் தலைகாட்ட ஆரம்பித்துள்ளது. பிறருடன் பழகாமல் தனியாக வாழ்ந்துவர விரும்புவதை இன்னும் நாம் ஆதரிப்பது குற்றம்! ஆபத்துங்கூட. எதற்காகத் தனிப் பள்ளிக்கூடம் முஸ்லீம்களுக்கு? அதுவும் சர்க்கார் செலவில்?

சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை முஸ்லீம்களுக்குத் தனிப் பாஷையென்று உண்டென்பது பொருந்தாது. தமிழர்களுக்குத் தனிக் கல்லூரி, தெலுங்கர்களுக்குத் தனிக் கலாசாலை, கன்னடியர்களுக்குத் தனிப் பள்ளிக்கூடம், மலையாளிகளுக்குப் பிரத்தியேக பள்ளிகள் இப்படியெல்லாம் பிரித்துக்கொண்டே போனால் நாட்டில் வேற்றுமை உணர்ச்சிகள், மனப்பான்மைகள் உற்பத்தியாக அரசாங்கமே அடிகோலுவதுபோலாகும். வேண்டுமானால் தங்கள் சமூகத்தில் நன்கொடை வசூலித்து, தனி ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக்கொள்ளட்டும். சற்றே சிந்தித்தால் அதுகூட ஆட்சேபகரமானதுதான்.

வேற்றுமைகள் நீங்கி, சமரசம் பரவி, சகோதர உணர்ச்சியுடன் எல்லாச் சமூகங்களும் சமாதானத்துடன் வாழ, தனிப் பள்ளிக்கூடங்கள் போன்ற சலுகை ஏற்பாடு ஒழியவேண்டும். எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்வதில் ஆர்வம் காட்டுவதே சிறந்த சமூக சேவை. முஸ்லீம்கள் இதை உணர வேண்டுகிறோம்.

# மண்ணிலிருந்து மாணிக்கம்

**ஸி. வி. ராமகிருஷ்ணன்**

தலைப்பைப் பார்த்ததும், சிலர் மாணிக்கம் கிடைக்கும் வழிகள்கூட இருக்கின்றனவா என்று சந்தேகப்படுவர். இன்னும் சிலர் 'மனிதன் ஒருமாதிரியோ' என்றுகூடச் சந்தேகிக்கலாம். இவர்களுக்குப் பழைய கதை ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஒருவன் சாகும் தறுவாயில் தன்னுடைய பிள்ளைகளைக் கூப்பிட்டு, புழக்கடையில் பணப்பெட்டியைப் புதைத்து வைத்திருப்பதாகச் சொல்லிவிட்டுப் பரலோகம் அடைந்தான். தந்தை இறந்தவுடன் பிள்ளைகள் புழக்கடையை ஆழத்தோண்டிப் பார்த்தும், பெட்டி ஒன்றும் கிடைக்கவில்லை. பின்னரே தந்தை எண்ணத்தை மைந்தர் உணர்ந்தனர். நிலத்தை ஆழ உழுது பயிரிட்டால், பயிர் செழித்து வளர்ந்து, ஊதியம் அதிகம் கிடைக்கும் என்பதையே தகப்பனுர் பிள்ளைகளுக்கு மறைமுகமாக உணர்வித்தார். அதேபோல எங்கேபார்த்தாலும் பஞ்சமும் பிணியும் தாண்டவமாடுகின்ற இக்காலத்தில், நம் நாட்டில் உள்ள நிலத்தை வளம்பெறச் செய்து அதிகம் பயிரிட்டால், வருமானம் பெருகி, பஞ்சம் ஒழிந்து, ஒவ்வொருவரும் செல்வந்தராய்த் திகழ்வர் என்பதைத்தான் 'மண்ணிலிருந்து மாணிக்கம்' என்னும் தலைப்பால் குறிப்பிட்டேன்.

பருவ மழை சரிவர இல்லாததின் பயனுக, முக்கியமாக வானம்பார்த்த பிரதேசங்களில், உணவுநிலை மிகக் கேவலமாய் இருக்கின்றது. எங்கே பார்த்தாலும் "உணவுப் பொருள்களை அதிகம் உற்பத்தி செய்யுங்கள்" என்ற ஒரே கூக்குரல். இதற்காக அரசாங்கம் விவசாயிகளுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்யத் தயாராயிருக்கிறது. ஆகவே சுதந்திர இந்தியாவில் செய்யவேண்டிய முதல்வேலை உணவுப் பிரச்னையைத் தீர்த்து, ஒவ்வொரு இந்தியனுக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் அளிப்பதேயாம். தற்சமயம் பயிர்விளையும் நிலங்கள் அதிகமில்லாதிருப்பினும், உள்ள நிலங்களிலேயே அதிக உணவுப் பொருள்களைப் பயிர் செய்வதுதான் சிறந்த முறையாகும். ஆகவே நிலங்களில் உள்ள மண்ணின் தன்மையைப் பற்றியும், மண்ணில் உள்ள மூலப் பொருள்கள் தாவரங்கள் வளர்வதற்கு உதவியாக இருக்குமா என்பதைப் பற்றியும் ஆராய்ந்து, நிலங்களின் தன்மை கெட்டிருப்பின், இரசாயன முறைகளின் மூலம் பயிரிடுவதற்கு வசதியாக நிலங்களை மாற்றிப் பின்னர் பயிரிட்டால், பயிர் செழித்து வளர்ந்து, பஞ்சத்தை ஓட்டி அனைவரும் இன்ப வாழ்வு நடத்த உதவியாயிருக்கும். எனவே மண்ணில் தாவரங்கள் வளர்வதற்கு அத்தியாவசியமான மூலப்பொருளைப் பற்றிய இந்த ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதுவதன் மூலம் விவசாயிகள் நன்மை பெறக்கூடும் என்று எண்ணுகிறேன்.

மண்ணில் உள்ள தாது வஸ்துக்களில் பாஸ்பரஸ் (Phosphorous) ஒன்ருகும். அது தாவரங்கள் செழித்து வளர்வதற்கு ஜீவநாடிபோன்றது. தாவரவளர்ச்சிக்கும், செழிப்பிற்கும் இன்றியமையாத தாவர உணவாகும் (Important plant nutrition for the growth of the plants). தாவரங்கள் தங்களுக்கு வேண்டிய பாஸ்பரஸ் உணவைப் பெரும்பாலும் நிலத்திலிருந்தே பெறுகின்றன. பாஸ்பரஸ் முதலிய எல்லாத் தாவர உணவுகளும் தண்ணீருடன் கலந்து, திரவபதார்த்தமாக வேர்களின் மூலம் உறிஞ்சப்பட்டு, தாவரங்கள் வளர்வதற்கு உதவி புரிகின்றன. மண்ணில் உள்ள எல்லாப் பாஸ்பரஸும் தாவரங்களால் உபயோகிக்கப்படவில்லை. பாஸ்பரஸின் சிறிது பாகம் தான் தாவரங்களுக்குக் கிடைக்கின்றது. அதற்கு, 'கிடைக்கும் பாஸ்பரஸ்' (Available phosphorous) என்றுபெயர். நில

ங்கள் தாவரங்களுக்கு பாஸ்பரஸ் அளிக்கும் தன்மைக்கு 'மண்ணின் பாஸ்பரஸை அளிக்கும் சக்தி' (Phosphate supplying power of soil) என்று பெயர். நிலத்தின் பாஸ்பரஸ் அளிக்கும் சக்தி (அதாவது தாவரங்களுக்கு நிலத்தினின்று கிடைக்கும் பாஸ்பரஸின் அளவு) நிலத்திற்கு நிலம் மாறுபடுகிறது. ஒரு நிலத்தில் பாஸ்பரஸ் அளிக்கும் சக்தி அதிகமிருப்பின், அங்கே தாவரங்கள் அதிக செழிப்பாகவும், மற்றொரு நிலத்தில் பாஸ்பரஸ் அளிக்கும் சக்தி குறைவாக இருப்பின், அங்கு அவ்வளவு செழிப்பில்லாமலும் வளர்கின்றன. ஆகவே தாவரங்களின் செழிப்பும், வளர்ச்சியும், அவைகள் பயிராகும் நிலங்களினுடைய 'பாஸ்பரஸ் அளிக்கும் சக்தியைப்' பொறுத்திருக்கிறதாம். இனி 'பாஸ்பரஸ் அளிக்கும் சக்தி' நிலங்களின் தன்மையினுலும், நிலங்களிலுள்ள மற்றப் பொருள்களினுலும் எப்படிப் பாதிக்கப்படுகின்றது என்பதைப்பற்றியும், தாவர வளர்ச்சிக்கு முக்கியமான இந்தப் 'பாஸ்பரஸ் அளிக்கும் சக்தி'யை எப்படி அதிகப்படுத்தலாம் என்பதுபற்றியும் கவனிப்போம்.

முதன்முதல் நிலத்தில் பாஸ்பரஸ் எப்படிக் கலந்து இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளவேண்டும். மழையும், வெய்யிலும் மாறி மாறி அடிப்பதின் பயனுக, மலைகளின் பல பாகங்கள் உடைந்து (Weathering of Rocks) மழை நீருடன் கலந்து, நிலங்களுக்கு வருகின்றன. அப்பொழுது மலைகளிலுள்ள தாவர வஸ்துக்களும் (Mineral salts) பூமிக்கு வருகின்றன. நிலத்தில் மற்ற தாதுப் பொருள்களெல்லாம் பல மாறுதல்கள் அடைந்தபின், பாஸ்பரஸ் கால்சியத்துடன் (Calcium) சேர்ந்து, கால்சியம் பாஸ்பேட் (Calcium Phos-phate) ஆக மாறி நிற்கிறது. ஒவ்வொரு நிலத்திலும், ஒரு ஏக்கராவுக்குப் பொதுவாக 2000—3000 பவுண்டுகள் பாஸ்பரஸ் (பாஸ்பரஸ் பஞ்ச பிராணயுதி ரூபத்தில் அளந்ததும் (measured in terms of Phosphorous Pentoxide) இருக்கிறது. ஆனல் வெளியிலிருந்து 20—30 பவுண்டுகள் கால்சியம் சூபர் பாஸ்பேட் (Calcium super phosphate) சேர்த்தால் அந்த நிலத்தில் பயிர் செழித்து வளருகிறது. இதிலிருந்து நிலத்திலுள்ள எல்லாப் பாஸ்பரஸூம் தாவரங்களுக்கு உபயோகப்படவில்லை என்று அறிகிருேம். பாஸ்பேட்டுகளில், கரையும் பாஸ்பேட் (Soluble phosphate), கரையாப் பாஸ்பேட் (Insoluble phosphate) என இரண்டு விதங்கள் உள்ளன. கரையும் பாஸ்பேட்டுகள்தான் தாவரங்களின் வேர்களால் உறிஞ்சப்பட்டு உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆகவே நிலத்தில் உள்ள பாஸ்பரஸில் கரையும் பாஸ்பேட் (Soluble phosphate) மிகவும் குறைவாயிருப்பதால், தாவரங்கள் செழிப்பாக வளருவதில்லை. ஆனல் கரையும் பாஸ்பேட்டை வெளியிலிருந்து சேர்த்தவுடன் செழித்து வளர ஆரம்பிக்கின்றன. எனவே தாவரங்கள் வளர்வதற்கு நிலத்தில் கரையும் பாஸ்பேட் (Soluble phosphate) அதிகம் தேவையெனத் தெரிகிறது.

நிலம் கொஞ்சம் அமில நிலமாயிருப்பின் (Acid soil), பாஸ்பரஸ் இரும்பு, அலுமினியம் முதலியவைகளுடன் சேர்ந்து கரையாப் பாஸ்பேட்டுகளாகிய (Insoluble phosphates), இரும்பு அலுமினியம் பாஸ்பேட்டுகள் (Iron and Aluminium phosphates) உண்டாகின்றன. இவைகளின் கரையாத் தன்மையின் (due to insolubility) பயனுக, தாவரங்கள், இவைகளை உணவாக உபயோகிக்க முடியாததால், செழித்து வளர்வதில்லை. ஆனல் நிலம் அமிலமும் இல்லாமல், சவுக்கமும் (Alkaline) இல்லாமல், நடுத்தரமாயிருப்பின் (neither acidic nor Alkaline i.e, tending to neutrality) கரையும் பாஸ்பேட்டாகிய கால்சியம் பாஸ்பேட் (Calcium phosphate) மாத்திரம் இருப்பதால், தாவரங்கள் செழித்து வளரும். இதிலிருந்து நிலம் நடுத்தரமாயிருப்பது (neutral soil) தாவர வளர்ச்சிக்கு உகந்தது என்று தோன்றுகிறது.

இதே சமயத்தில் நிலம் சற்று அதிக அமிலமாயிருப்பது ஒரு விதத்தில் நல்லது என்று தோன்றுகிறது. ஏனெனில் கரையாப் பாஸ்பேட்டுகளாகிய இரும்பு, அலுமினியம் பாஸ்பேட்டுகளைக் கரைக்கும்சக்தி, அமிலங்களுக்கு உண்டு. ஆகவே சற்று அதிக அமிலம் (Slight Excess

of Acid) இருப்பின் கரையாப்பாஸ்பேட்டுகளும், கரைக்கப்பட்டு தாவரங்களுக்காக உணவாகின்றன. ஆனால் இந்த அமிலத்தை நிலத்தில் எப்படிப் புகுத்துவது! நிலத்தை ஆழ உழுவதின் பயனாக, தாவரங்கள் சுவாசிக்கும் பொழுது வெளியிடுகின்ற கரியமிலவாயு (Carbon dioxide given out by the plants at the time of respiration) மண்ணில் வேர்களுக்கு அருகில் தண்ணீருடன் கலந்து, கரியமிலம் (Carbonic Acid) என்கின்ற அமிலம் உண்டாகிறது. இந்த அமிலம் எல்லாப் பாஸ்பேட்டுகளையும் கரைத்து, கரைந்த ரூபத்தில் தாவரங்களுக்கு உணவாக அளிக்கிறது. ஆகவே நிலத்தை நன்கு உழுது, சற்று ஈர நிலமாகச் (Moist land) செய்தால், இந்த அமிலம் அதிகம் உற்பத்தியாகி, பாஸ்பேட்டுகளைக் கரைத்து, தாவரங்களுக்கு உணவாக அளிப்பதின் மூலம் தாவர வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும். கரியமிலவாயு கிடைப்பதற்காக மற்ற உபயோகமற்ற செடிகளை அருகில் பயிரிடுவார்கள். அவைகள் சுவாசிக்கும் போது கிடைக்கும் கரியமில வாயு (Carbon dioxide) அமிலம் உற்பத்தியாவதற்கு உபயோகமாயிருக்கும்.

இனி அடுத்தபடியாகத் தாவரவளர்ச்சி நிலத்தின் தன்மையைப் பொறுத்து இருக்கிறது. நில முண்டுகள் (Soil Colloids) நிலத்திலுள்ள பாஸ்பரஸைத் தங்களுடைய மேல் பாகங்களில் ஆகர்ஷித்துக்கொள்ளுகின்றன (Absorption). அதனால் தாவரங்களுக்குக் கிடைக்கும் பாஸ்பரஸின் அளவு குறைவுபடுகிறது. அது தாவரத்தின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. பொதுவாக நிலங்களை அவைகளின் தன்மைக்கு ஏற்ப மணற்பாங்கான நிலம், மண்ணும் மணலும் கலந்த நிலம், களிமண் நிலம் (Sandy Soil, Medium Soil and clay soil) என மூன்று விதமாகப் பிரிக்கலாம். மணற் பாங்கான நிலத்தில் தண்ணீர் அதிகம் நிற்காது. களிமண் நிலமோ எனில், பாஸ்பரஸைப் பயிருக்கு உபயோகப்படாதபடி தானே ஆகர்ஷித்துக்கொள்ளுவதால் (Absorbs Phosphorus) பயிரிடுவதற்கு உபயோகமானதல்ல. ஆகவே பயிரிடுவதற்குச் சிறந்த பூமி, மண்ணும் மணலும் கலந்த நிலமேயாம் (Medium soil).

பயிரிடும் நிலம் நன்கு அமைந்திருக்க வேண்டுமாயின், அதில் கால்சியம் கார்பொனெட் (Calcium Carbonate) என்ற தாது வஸ்து இருக்கக்கூடாது. ஏனெனில் அது கரியமிலவாயுடன் கலந்து, கால்சியம் பைகார்பொனெட் (Calcium bicarbonate) என்ற வஸ்து உண்டாகி விடுவதால், கரியமிலம் (Carbonic Acid) உண்டாகாமல் தடுத்து விடுகிறது. ஆகவே தீங்கு விளைக்கும் பொருளாக அமைந்திருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் இரும்பு, அலுமினியம் பாஸ்பேட்டுகளாகிய கரையாப் பாஸ்பேட்டுகளுடன் சேர்ந்து, கால்சியம் பாஸ்பேட் என்னும் கரையும் பாஸ்பேட் உண்டாக உதவி புரிகிறது. நரிவலமாய்ச் சென்றால் நல்லதா, இடமாய்ச் சென்றால் நல்லதா, என்றதற்கு மேலே விழுந்து பிடுங்காமல் சென்றால் நல்லது என்றது போல், அது நன்மை, கெடுதல் இரண்டையும் செய்வதால், நன்மை அதிகமா, கெடுதல் அதிகமா என்பவைகளைப்பற்றி யோசிப்பதைக் காட்டிலும், கால்சியம் கார்பொனெட் (Calcium carbonate) நிலத்தில் இல்லாமல் செய்வதே சிறந்ததாகும்.

நிலத்தின் தன்மைக்குப் பிறகு கவனிக்க வேண்டிய மற்றொரு பொருள், நிலத்தில் உள்ள குணபம் (Humus) ஆகும். இது நிலத்தில் காணப்படும் சிக்கலான பொருள் (Complicated matter). இது தண்ணீரை அதிகமாக ஏற்று வழ வழா என்று ஜெல்லிபோல உள்ள முண்டு (Jelly like colloid). இது பூமியிலேயே இருக்கும்படி விட்டு வைப்பின், பாஸ்பேட்டுகளை ஆகர்ஷித்து (Absorbs the phosphate being colloidal in nature). தாவரங்களுக்கு அதிக பாஸ்பேட்டுகள் கிடைக்காமல் செய்து விடுகிறது. ஆனால் கால்சியம் கார்பொனெட் (Calcium carbonate) உள்ள நிலங்களில் குணபத்தை வெளியிலிருந்து சேர்த்தாலோ, கால்சியத்தை மட்டும் ஆகர்ஷித்து, பாஸ்பேட்டைத் தாவரங்களுக்குக் கொடுத்துவிடும். அதனால் தாவரங்கள் அதிக பாஸ்பேட்டைப் பெற்றுச் செழித்துவளரும். இதிலிருந்து

கால்சியம் கார்பொனெட் உள்ள நிலங்களில் குணபத்தைப் (Humus) போடுவதன்மூலம் தாவர வளர்ச்சியை அதிகப்படுத்தலாம் என்று தெரிகிறது.

இதுவரை நிலங்களில் உள்ள மற்றப் பொருள்களினுல் தாவர வளர்ச்சி எப்படி மாறுதலடைகிறது என்று கவனித்தோம். இனி பாஸ்பேட் உரங்களை (Phosphate manures) நிலங்களுக்குப் போடுவதன் மூலம் உண்டாகும் பயனைக் கவனிப்போம். களிமண் (Clay soil) நிலங்களில் கரையும் பாஸ்பேட்டாகிய கால்சியம் சூபர்பாஸ்பேட் (Calcium superphosphate) உரத்தைப் போடுவதன் மூலம் தாவர வளர்ச்சி அதிகமாகிறது. மணற்பாங்கான நிலங்களில் (Sandy soils) கரையும் பாஸ்பேட்டுகளாகிய கால்சியம் சூபர்பாஸ்பேட்டும், அம்மோனியம் பாஸ்பேட்டும் (Calcium superphosphate and Ammonium phosphate) தாவர வளர்ச்சிக்கு உதவுகின்றன. இந்த உரங்களைவிட கடலைப் பிண்ணுக்கும் (Groundnut cakes) மிருகங்களின் எலும்புகளும் (Bone meal) மிகச்சிறந்த உரங்களாம். ஏனெனில் பிண்ணுக்கிலிருந்து அமிலம் தயாராவதற்கு வேண்டிய கரியமிலவாயுவும், தாது பாஸ்பேட்டுகளும் உண்டாகின்றன. எலும்புகள் பிரிந்து (Decompose) அநேக அமிலங்களும், பாஸ்பேட்டுகளும் உண்டாகின்றன. இவ்வுரங்கள் பாஸ்பேட் உணவை அளிப்பதோடல்லாமல், நிலங்களில் பயிர் செழிப்பதற்கு வேண்டிய அமிலங்களையும் அளிப்பதால் இவைகளே சிறந்த உரங்களாம்.

ஆகவே விவசாய இலாகா அதிகாரிகள் ஒவ்வொரு கிராமத்திலும் ஆராய்ச்சிக் கூடங்கள் மூலம் (Experimenting Stations) கீழேகண்ட உதவிகளை விவசாயிகளுக்குப் புரியவேண்டும்:—

முதன் முதலில் பயிரிடும் நிலத்தை ஆராய்ந்து அது எத்தகைய நிலம் என்று கண்டறிய வேண்டும். பின்னர் அதில் உள்ள கரையும் பாஸ்பேட்டின் அளவையும், கரையாப் பாஸ்பேட்டின் அளவையும் அறிந்து, கரையும் பாஸ்பேட் அளவை அதிகரிக்கவும், கரையாப் பாஸ்பேட் அளவைக்குறைக்கவும், உபாயங்கள் சொல்லவேண்டும். பின்னர் நிலங்கள் அமிலமா யிருக்கும் படியும், ஆழ உழுது கரியமிலவாயு அதிகம் கிடைக்கும் படியும் செய்யவேண்டும். நிலத்தில் கால்சியம் கார்பொனெட் முதலியவை இருப்பின், குணபத்தை வெளியிலிருந்து சேர்த்து, நிலத்தில் உள்ள கால்சியத்தைப் போக்கவேண்டும். கடைசியாக நிலத்திற்கேற்ப உரங்களைக்கண்டு பிடித்து அவை பயிரிடுவோர்க்கு சுலபமாகவும், சரஸமாகவும் கிடைக்கும்படி செய்யவேண்டும். இவைகளைச் செய்வார்களாயின், நிலத்தில் தாவர உணவாகிய பாஸ்பரஸ் அதிகமாகி, தாவரம் செழித்து வளர்ந்து, இந்தியாவையே உலகத்தின் தானியக்களஞ்சியமாகச்செய்துவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பின்னர் இந்தியமக்கள் பலம் தரத்தக்க புஷ்டியான உணவுகளை உண்டு தீர மக்களாய், உலகிலே எல்லாத்துறைகளிலும் மற்றவர்களுக்குச் சரிநிகர் சமானமானவர்களாய், இதிகாசவீரர்கள் பிறந்த இந்நாடு இழந்த கீர்த்தியை மறுபடியும் நிலைநாட்ட முற்படுவார்கள் என்று நம்புகிறேன். இயற்கை அன்னை எவ்வளவு தூரம் ஒத்துழைக்கின்ருள் என்று பார்ப்போம்




அதிகாலையில் தோட்டத்தில் அழகான இந்திய ரோஜா முதல் முதலாக மலரும்பொழுது . . . உங்களுக்கு வினோலியா ஒயிட்ரோஸின் நினைவுகள் ஏற்படுகின்றன. மிருதுவான நுரையைத் தரும் வினோலியா உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது—மேலும் மிக மெல்லிய சருமத்தையும் சுகமாகச் சுத்தம் செய்கிறது. அழகை மென்மேலும் அதிகரிக்கச் செய்ய உங்கள் இஷ்டத்திற்குரிய இச் சோப்பைவிட உத்தமமானதோ, தகுதியானதோ வேறு கிடையாது.

# வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 22-23 TM — VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND




கே. சுந்தரம்மாள்

3

"கலா! எங்கு சென்றிருந்தாய்? நட்டுவனார் வந்து இவ்வள நேரம் காத்துக் கொண்டிருந்தார். உன்னைத்தேடி பொம்மி சென்றிருக்கிறாள். இப்படி இருட்டினபிறகு வெளியில் தங்கலாமா கண்ணு! எனக்குக் கவலையாக இருக்காதா?" என்று அன்பால் கடிந்து கொண்டாள் பாட்டி, அப்பொழுதே உள் நுழைந்த கலாவைப் பார்த்து.

"அம்மா! குழந்தை ஜாக்ரதை. யுவராஜா தங்களிடம் ஒப்புவித்து வரச் சொன்னார்" என்றான் கலாவை அழைத்து வந்த அரண்மனைச் சேவகன்.

"என்ன? யுவராஜா அனுப்பினாரா? என்னடி கலா! எனக்கு ஒன்றுமே புரியவில்லை." என்றாள் பதட்டத்துடன் பாட்டி.

"ஒன்றுமில்லை பாட்டி. முதலில் அவனை அனுப்பிவிட்டுவா, பிறகு எல்லாம் சொல்லுகிறேன்" என்றாள்.

"சரி, நீ போய்வா அப்பா, மஹாராஜாவிற்கு என் வணக்கம் சொல்லு" என்றாள்.

"பாட்டி நம்ம குலம் கேவலமல்ல, மாதவி மணிமேகலை இவர்கள் பிறந்த உன்னத குலம் என்றாள்" சந்தோஷம் பொங்கியெழ. இரண்டுமாத காலத்திற்கு முன்பாக நடந்த ஓர் சம்பவத்தினால் அவ்விளமனதில் ஓர் வித தாங்கலும் வருத்தமும் குடிகொண்டன. ரவிவர்மனது சொற்களினால் அக்குறை நீங்கிவிட்டது போன்ற உணர்ச்சி அவ்விளம் ஹிருதயத்தில் தோன்றியபடியினால் பாட்டியினிடம் அவ்வளவு குதூகலமாகப் பேசினாள். மனதின் தன்மையை அறியாத நிலைமையில் பாட்டி ஒன்றும் புரியாமல் விழித்தாள். அவ்விஷயம்?

ஒரு சமயம் பள்ளிக்கூடம் விட்டுவரும் பொழுது ஒரு தோழியின் வீட்டு முன் ஹாலில் உட்கார்ந்துகொண்டு அவளுக்குக் கணக்குச் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தாள் கலாவதி. வீட்டின் யஜமானி பூக்காரனைக் கூப்பிட ஹாலின் பக்கம் வந்தாள். கலாவதியைக்கண்டதும்,

"சரோஜி! இந்தப்பெண்யார்?" என்றாள்.

"என்கூடப் படிப்பவள். கணக்கில் அவள்தான் பஸ்ட் மார்க் வாங்குவாள். இன்று ஒரு கணக்கு வெகுகடினமாக இருந்தது. அதைச் சொல்லித் தருவதற்காக அழைத்து வந்தேன்" என்றாள்.

"குழந்தை, உன்பெயரென்ன?" என்றாள்.

"கலாவதி" என்றாள் பதில்.

"அழகிற்கு ஏற்ற பெயர். எம்மா நீ எந்தத்தெருவிலிருக்கிறாய்? உன் அப்பாவிற்குஎன்ன உத்தியோகம்?" என்றாள்.

"நான் ஜெண்பக லக்ஷ்மி தெருவில் கடைசி பங்களாவில் இருக்கிறேன். அம்மா அப்பா இருவரும் இல்லை. பாட்டியும் நானும் வேலைக்காரியும் இருக்கிறோம்" என்றாள்.

"ஜெண்பகலக்ஷ்மி தெருவா? ஆனால் நீ........" என்று முடிக்குமுன்.

"தேவடியா ஜாதியம்மா" என்றாள் சரோஜி.

அவ்வளவே. அதுவரை பூமாதேவி சொரூபத்தில் பேசியவள் பேய்ரூபமெடுத்து விட்டாள். "நன்னுயிருக்குடியம்மா நன்னுயிருக்கு" என்று தோள்பட்டையில் கன்னத்தை இடித்துக்கொண்டு, "சரோஜி, வரவர புத்தி உலக்கைக்கொழுந்தாக வளருகிறதே. வீட்டிற்குள் யாரைத்தான் அழைத்துவருவது என்ற நியதி கிடையாதா? உன் சிநேகிதமெல்லாம் பள்ளிக்கூடத்துடன் நிற்கட்டும். தேவடியாக்குட்டி பழக்கம்தான் பாக்கி. சிறுபிள்ளைகள் நடமாடுமிடம். இனிமேல் இப்படியெல்லாம் அழைத்துவந்தாயோ, உன்னை லேசில் விடமாட்டேன். இந்தாடியம்மா! நீ ஆத்துக்குப்போய்விடு. அக்கிரகாரத்துக்குள் அவகூப்பிட்டான்னு நீ வராதே. உன் நிலைமை தெரிந்து நட" என்றாள்.

"வேற்றுமையுணராத சிறு உள்ளத்தைச் சின்ன பின்னமாக்கிவிடுமே தன் சொற்கள்" என்று சிந்திக்கும் கல்வியறிவும் மனப்பான்மையும் இருந்தால் இச்சொற்கள் அவள் வாயில் வருமா? கலாவின் கண்களில் நீர் நிரம்பிற்று. சட்டென எழுந்து வெளியே சென்றுவிட்டாள். தாய்க்குப் பயந்த சரோஜியும், கலாவிற்கு ஆறுதல் சொல்லவேண்டுமென்று மனதிற்குள் நினைத்தாலும் பயந்த பார்வையுடன் நின்றுவிட்டாள்.

வழியில் பார்க்கிற்குச் சென்று கொண்டிருந்த, பாமினி, கமலா, சுசீலா மூவரும் கலாவின் சோகமடைந்த முகத்தைக்கண்டு,

"கலாவதி ஏன் ஒரு மாதிரியாகக் காணப்படுகிறாய்?" என்றாள் கமலா.

சோகக்குமுறல் சிதறிற்று. கண்ணீர் வழிந்தோட நடந்த விஷயத்தைச் சொன்னாள்.

"சரோஜா அம்மா துடுக்குக்காரி. இப்படி முகத்திற்கு முன்தான் ஏச வேண்டுமோ. தனியாகப் பெண்ணிடம் கண்டித்தால் மண்டைவெடித்துவிடுமோ? அழாதே கலா. நீ இனிமேல் அவள் வீட்டிற்குப் போகாதே. வேண்டுமானால் அவள் உன் வீட்டிற்கு வரட்டும்" என்றாள் பாமினி.

"ஏன் பாமினி! நான் என்ன குற்றம் செய்தேன்? நானும் எல்லோரையும் போலத்தானே படிக்கிறேன். தேவடியாள் என்றால் அவ்வளவு இளப்பமா?" என்றாள் கலா.

"பின்னே தேவடியாள் என்றால் தெய்வத்திற்குச்சமானம் என்று நினைத்துக் கொண்டாயோ? நீ என்னதான் படித்தாலும் எவ்வளவு ஒழுங்காக நடந்தாலும் உன் ஜாதி கேவலமானதே. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகி விடுமா? நல்ல அந்தஸ்து உள்ளவர்கள் உங்கள் முகத்தில்கூட விழிக்கமாட்டார்கள். முதலில் உன் அப்பா யாரென்று உனக்குத்தெரியுமா?" என்றாள் கமலா.

"எங்கப்பா வடக்கே வெகுதூரத்தில் இருக்கிறார். வீட்டில் அவரது பெரிய படமிருக்கிறது. என் அம்மா செத்துப்போய் விட்டாள். அவர் வேறு கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார். எங்கள் முகத்தில் விழிக்கக்கூடாதபடி என்ன அநியாயம் செய்தோம்" என்றாள் கலா.

"உங்கள் பாட்டி கிழவியாய்விட்டதினால் சிந்துவாரற்றுக் கிடக்கிறாள். ஒரு சமயம் உன் அம்மா ஒழுங்காக இருந்திருக்கலாம். ஏனென்றால் இச்சமஸ்தானம் முழுவதும் உன் அம்மாவின் குணத்தைச் சிலாகித்துப் பேசுகிறது. உன் அடுத்த வீட்டு மனோன்மணியைப் பார்த்தாயா? தினம் அவள் வீட்டில் ஆண் பிள்ளைகளின் நடமாட்டம் தென்படுகிறதல்லவா? அவள் எவ்வளவு பணக்காரியாகி விட்டாள். நீயும் அவளைப் போல் பெரியவளானால் உன் வீட்டிற்கும் ஆண்பிள்ளைகள் வருவார்கள். பணம் கொடுப்பவர்களெல்லாம் உங்களுக்குப்புருஷர்கள். நாங்கள் அக்னிசாக்ஷியாக எவனைக் கைப்பிடிக்கிறோமோ, அவனுடன்தான் கஷ்டமோ சுகமோ ஆயுள் முடியுமட்டும் காலம் கழிப்போம். நினைத்துப்பார் உங்கள் ஜாதியின் கேவலத்தை" என்றாள் கமலா.

"ஏன் எங்கள் ஜாதியிலும் கலியாணம் செய்துகொள்ள முடியாதோ?" என்றாள் கலா.

"யார் உங்களைக் கட்டுவார்கள்? உங்களுக்கு ஏற்பட்ட விதி அதுதானே" என்றாள் கமலா.

"அப்படியா? நிஜமா எங்களுக்குக் கல்யாணமே கிடையாதா?."

"கல்யாணம்உண்டு. எப்படித்தெரியுமா? நீ பருவமடைந்ததும், ஒரு நல்ல நாளில், உன்னை அலங்காரம்செய்து கோவிலுக்கு அழைத்துச் செல்லுவார்கள் மேளதாளத்துடன். ஒரு பொட்டுத்தாலியைச் சுவாமி கையில் கொடுத்து வாங்கித்தருவார் கோவில் பட்டர். அதை நீ வாங்கி, கழுத்தில் கட்டிக்கொள்ள வேண்டும். சுவாமி பெயருக்கு அகமுடையான். பிறகு இஷ்டமானவர்களுக்கெல்லாம் நீ பெண்டாட்டி. வேண்டுமானால் உன் பாட்டியைக் கேட்டுப்பார்" என்றாள் கமலா.

அதற்குமேல் என்ன பேசுவதென்று புரியவில்லை கலாவதிக்கு. இந்தக்கேவல மானஜாதியில் ஏன் பிறந்தோம் என்றஎண்ணம் மட்டும் தான் தோன்றியது. ஆனாலும் அவ்விளமனதில் ஓர் விதச் சிந்தனையும் ஓடலாயிற்று. உடனே சுவாமியைக்கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொல்லிவிட்டு, "நான் படித்து உத்யோகம் செய்வேன். நம்ம புவனா டீச்சர் மாதிரி கன்னிகையாகவே இருப்பேன்." என்றாள்.

"ஆமா ஆமா உன்பாட்டி பார்த்துக் கொண்டிருப்பாள்" என்றாள் கமலா.

"ஏனடிகமலா, விதண்டா வாதம் செய்கிறாய்? கலாவதி, இவள் கிடக்கிறாள். நினைத்தால் நாம் எல்லாம் செய்து விடலாம். உறுதியும் சஹிப்புத் தன்மையும் வேண்டும், அவ்வளவே. நீ இவர்கள் பேச்சைக் கேட்டு வீணாக மனதைப் புண்ணாக்கிக் கொள்ளாதே. உன் இஷ்டப்படி நடக்க உனக்குச் சுதந்திரமுண்டு. நம் மஹாராஜா வசதியளிப்பார்" என்றாள் பாமினி.

வீட்டிற்கு வந்ததும் பாட்டியினிடம் உண்மையைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற துடிப்பில் "பாட்டீ! நம்ம ஜாதியில் கல்யாணம் எப்படிப் பண்ணுவார்கள்" என்று கேட்டாள் கலா!

"அதைப்பற்றி இப்பொழுது என்ன? உன் கல்யாணத்தின்பொழுது தெரிந்து கொள்ளலாம்." என்றாள் பாட்டி.

"இல்லை, இப்பதான் சொல்லவேண்டும். யசோதா பிராமணப் பெண்; அவள் கல்யாணம் பார்த்தேன். சுசிலா முதலிப் பெண்; அவள் கல்யாணம் பார்த்தேன். தாசி ஜாதி கல்யாணம்தான் பார்க்கவில்லை. அதைச் சொல்லு" என்று பாட்டியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்கினாள்.

இதற்கு என்ன பதில் சொல்லுவது என்று சிந்திக்கும்பொழுது தனது புதல்வியின் மண வாழ்க்கையும், அவள் மரணாந்த காலத்தில் தன்னிடம் கேட்டுக்கொண்ட வாக்குறுதியும் படக்காட்சிபோல் மனத்திரையில் தோற்றமளிக்கவே கலாவின் முகத்தைப் பார்த்தபடியே அதில் லயித்துப்போனாள்.


# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 10,00,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 10,00,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 6 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனாபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | திருநெல்வேலி ஜங்ஷன் | ராமநாதபுரம் |
| அனகாபள்ளி | சாலூர் | திருச்சிராப்பள்ளி | மதுரை |
| அம்பாசமுத்திரம் | சிப்பூருபள்ளி (Vizag) | திருவாரூர் | மாருடேரு |
| ஆம்பூர் | சிதம்பரம் | தூத்துக்குடி | விழுப்புரம் |
| ஈரோடு | சித்தூர் (கொச்சி) | தென்காசி | விருதுநகர் |
| கடலூர் N. T. | சீயாழி | நாகப்பட்டணம் | விஜயநகரம் |
| கடலூர் O. T. | தஞ்சாவூர் | பரமக்குடி | வேலூர் |
| காஞ்சீவரம் | தாடபள்ளிக்கூடம் | பாலக்காடு | வேதாரண்யம் |
| காரைக்குடி | திலாரு R. S. | பார்வதிபுரம் | ஜெய்பூர் |
| | திருநெல்வேலி டவுன் | புதுக்கோட்டை | (ஒரிஸ்ஸா) |

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... 2¾% விதம்
இரண்டு „ „ ... ... 3% „
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 10,000/வரை வட்டி 2¼% „
கரண்ட் கணக்கு .. .. .. .. ½% „
தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

கலாவதியின் தாயார் மோஹினி பருவமடையும் சமயம் சாதாரணமான ஓர் கிராமத்தில் வசித்துவந்தார்கள். அந்த ஜில்லாவிலேயே நாட்டிய ராணியாக விளங்கினுள் மோஹினி. அவளது நாட்டியத்தின் புகழ் எங்கும் பிரகாசித்தது. அவள் அழகு ஜோதியாக விளங்கினுள். அவள் நாட்டியத்தைவிட, தூய்மையான குணமும் அழகுமே யாவர் மனதையும் கவர்ந்தன. பூர்வ ஜன்ம வாசனுபலமோ ஏனே, அவள் சிறு வயதிலிருந்தே குலத் தொழிலை வெறுத்தாள். நாட்டியக் கலைக்கே தனது வாழ்நாளை அர்ப்பணம் செய்யவேண்டும். அதன் மூலமே பொருள்தேடி, பணத்தாசைபிடித்த தாயினிடம் கொடுக்க வேண்டுமென்று நினைத்தாள். ஆனுல் கலையின் சிறப்பை அவ்வளவாக உணராத காலநிலை அவள் ஜீவனத்திற்கும் சற்றுக் கஷ்டப்படவேண்டியதாயிற்று. அக்னி சாக்ஷியாகத் தன்னை மணக்க ஒருவரும் முன்வரவில்லை யென்பதை அறிந்ததும், மனம் வெம்பினுள். தாயாரின் தொந்தரவு அதிகமாயிற்று. வறுமையும் தலைகாட்டத் தொடங்கிற்று. குலத் தொழிலினின்றும் தப்பினுல் போதுமென்ற நிலைமை ஏற்படவே, தாயார், மாமா இவர்களின் ஏற்பாட்டிற்கிணங்கி, பக்கத்து ஊர் ஜமீந்தார், நாற்பது வயதடைந்தவருக்கு ஆசை நாயகியாக இருக்க ஒத்துக்கொண்டு, தனது ஒழுக்கம் கெடாமல் தந்திரமாக அவரிடம் ஓர் பதினுயிரம் ரூபாயை வாங்கி, தாயாரிடம் கொடுத்துவிட்டு, ஒன்று பிராணத் தியாகம் செய்துகொள்ளவேண்டும், அல்லது கண் காணுமல் சென்று நாட்டியப் பணியை மேற்கொள்ள வேண்டுமென்னும் முடிவிற்கு வந்தாள்.

அந்த ஏற்பாட்டின்படி ஓர் நாள் குறிப்பிட்டு, அன்று இரவு அவ்வூர் கோவிலில் பொட்டுக்கட்டி மறுநாள் ஜமீனுக்கு அழைத்துச் செல்லுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. அன்றையதினம் ஜமீந்தார் வர ஸௌகரியப்படாததினுல் அவரது பிரதிநிதி வந்தார் மோஹினியை அழைத்துச் செல்ல. கடைசியாக இரவு கோவிலில் அவளது நாட்டியம் நடக்கப்போவதாக எங்கும் அறிவிக்கப்பட்டது.

ஓர் கேஸின் நிமித்தம் பக்கத்து ஊருக்கு வந்திருந்த ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் ராஜாராம் காதில் இச்செய்தி எட்டவே, வெகு நாட்களாக மோஹினியைப்பற்றியும் அவள் நாட்டியத்தைப்பற்றியும் கேள்விப்பட்டு நேரில் காண ஆவல் கொண்டிருந்தவராதலால், நாட்டியத்தைக் காண, சாயங்காலமே இவ்வூருக்கு வந்தார்.

சந்தியாவந்தனம் செய்யும்பொருட்டு ஆற்றின்பக்கம் சென்ருர். வேகவாகினியானவள் பூர்ண பிரவாகத்துடன் சென்றுகொண்டிருந்தாள். மாலை மங்கும் நேரமாகி இருந்தபடியினுல் படித்துறையில் நிசப்தம் நிலவியது. மேலும்அப்படித்துறை கிராமத்திற்கு வெளியே இருந்தது. சுவரோரமாக நின்று ஜபம் செய்யும்பொழுது அடுத்தபக்கத்திலிருந்து,

"வேகவாஹினி, என்னை ஏற்றுக்கொள். இனி எந்தக் கீழான ஜன்மமெடுத்தாலும் பரவாயில்லை. இந்தத் தாசி குலத்தில் மட்டும் பிறக்கவேண்டாம். பவானி மாதா என்னை மன்னிப்பாய்" என்ற பெண் குரல் கேட்கவே, திடுக்கிட்டுப் படிகளைக் கடந்து சென்ருல் நேரமாகிவிடுமென்று ஒரு ஜம்பண்ணி, தலைமறைவாகவிருந்த சுவரைத் தாண்டிக் குதித்தார்.

அழகே உருவான நங்கையின்பக்கத்தில் இவர் குதிக்கவே திடுக்கிட்டு இரண்டடி பின் வாங்கினுள். முன்பின் சிந்தனைசெய்ய வழியின்றி முன் ஜாக்ரதையாக எட்டி அவள் கையைப்பிடித்துக்கொண்டார்.

இச்செய்கையினுல் மனம்பதறி விலங்கைவிட்டுத் தொழுவில்மாட்டிக்கொண்டது போலாயிற்றே என்று எண்ணியவளாக ஏற இறங்க அவரை ஓர்முறை பார்த்தாள், இருபத்துநாலு வயதடைந்த யுவபுருஷன். மங்கின வெளிச்சத்திலும் அவரது சிவந்த மேனி புலனுயிற்று. நீண்ட மூக்கு, அகன்ற நெற்றி, கருத்துச் சுருண்ட கிராப்தலை, கட்டுமஸ்தான தேகம், காக்கி டிராயரும் வெள்ளை ஷர்ட் ட்ராயருக்குள் விட்டு மேலே பெல்ட் போட்டுக் கட்டியிருந்ததும் அவள்மனதில் ஓர்வித அமைதியைக் கொடுத்தது. ஆனுலும் பயத்தினுல் குப்பென உடம்பெல்லாம் வியர்த்து உடல் பதறிற்று. சற்றுநேரம் ஒன்றும் தோன்ருமல் நின்ருள்.

சற்றுநேரம் அவளை உற்றுப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தார். அவள் பேசாமல் நிற்கவே இயற்கையான தைரியத்துடன் "அம்மா! நீ யார்? ஏன் தற்கொலை செய்துகொள்ளத் துணிந்தாய்? அதிஸௌந்தர்யவதியான உனக்கு இவ்விளம் வயதில் ஏற்பட்ட கஷ்டமென்ன? உன் கஷ்டத்தை வெளியிட்டாயானுல் என்னுலான உதவியைச் செய்வேன். ஒன்று மட்டும் நிச்சயம். நீ உள்ளதை வெளியிட மறுத்தால், இப்படியே விட்டுப் போகமாட்டேன். செந்தூக்காகத் தூக்கிச் சென்று, போலீசார் வசம் ஒப்புவித்துவிடு

வேன். நான் யாரென்பதையும் சொல்லி விடுகிறேன். இப்பிராந்தியத்திலுள்ள சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.''

ஏதோ ஓர் வித சக்தி அவளுக்குத் தைரியத்தையும் சாந்தியையும் அளித்தது. அதனால் "போலீஸ்காரர் கையில்தான் ஒப்பித்தாய் விட்டதே; வேறு எங்கு செல்ல வேண்டும்?'' என்றாள் வேக வாகினியைப் பார்த்த வண்ணம்.

"அப்படியானால் குற்றத்தை ஒத்துக் கொள்ளுகிறாயா? தண்டனை கொடுக்க வேண்டும்'' என்றார்.

"தண்டனை! ஈசனே அளித்துவிட்டானே'' என்று சொல்லும்பொழுது கண்களில் நீர் நிரம்பிவிட்டது.

"நீ இந்த நிலைமையில் கூடியமட்டும் தைரியமாக நடந்துகொண்டது பற்றி எனக்கு மிகவும் திருப்தி. காலதாமதம் செய்வது இருவருக்கும் நன்மையல்ல. விஷயத்தை விளக்கினால் மேலே நடக்கவேண்டிய விஷயத்தைப்பற்றிய முடிவு தெரிந்துகொள்ள வசதியளிக்கும்'' என்றார்.

ஒரு நீண்டமூச்சு விட்டுவிட்டு, ''நான் தாசி வகுப்பைச்சேர்ந்தவள். ஆனால் குலத்தின்மீது என் மனம் வெறுப்புக்கொண்டது. நாட்டியமே எனது உயிராகத்தோன்றியது. அதிலேயே என் காலத்தைச் செலவிடலாமென்று நினைத்தேன். கலையின் அருமை தெரியாத இப்பிராந்தியத்தில் எனது ஜீவனம் வறுமையின் கையில் ஒப்புவிக்கப்பட்டது. குலத்தின் பெயரால் என்னை மணக்க ஒருவரும் முன்வரவில்லை. பெற்ற கடமையைத் தீர்க்க, அவர்கள்செய்த ஏற்பாட்டின்படி, ஜமீந்தாருக்கு ஆசை நாயகியாக இருக்க ஒப்புக்கொண்டேன். என் அந்தரங்கம் என்னவென்றால், தந்திரமாக ஜமீந்தாரிடம் பதினாயிரம் ரூபாய் வாங்கி, தாயிடம் கொடுத்துவிட்டுப் பிராணத் தியாகம் செய்வது, அல்லது கண்காணாமல் சென்று மானமாக ஜீவிக்கக்கூடிய தொழிலை மேற்கொள்வது என்பதே. ஆனால் இன்று விடிந்ததுமுதல் என் தைரியம் என்னைக் கைவிட்டுவிட்டது. நேரம் செல்லச் செல்ல சொல்லொணா வேதனையினால் மனம் தத்தளித்தது. பல விதமான பயங்கர எண்ணங்கள் தோற்றமளித்தன. அதனால் உயிரை வேகவாகினிக்கு அர்ப்பணம் செய்வதே நன்மை தரும் என்றமுடிவே தலைதூக்கி நின்றதே தவிர, கடையனான அந்த ஜமீந்தாரின் மூச்சுக்காற்றுக்கூட என்மீதுவிழ என்மனம் இடமளிக்கவில்லை. விதி, அதன் செயல்களை நிர்ணயம்செய்ய ஈசனாதிகளால்கூட முடியாதுபோலும். இச்சமயம் தாங்கள்வந்து கைபிடித்து நிறுத்தியது, என் வாழ்க்கைச் சக்கரத்தை எந்தப் பாதையில் உருட்டிவிடவோ? ஓர்நிமிஷம் பிந்தியிருந்தால்? ஆஹா! என்ன அமைதி கிடைத்திருக்கும்'' என்றாள்.

''அப்பொழுது அமைதி கிடைத்திருக்காது. அல்லல் கிடைத்திருக்கும். இப்பொழுது நீ உள்ளன்புடன் நான் சொல்லும் ஏற்பாட்டிற்கு இணங்குவதாக இருந்தால் உனது வாழ்க்கைப்படகு ஆனந்த சாகரத்தில் அமைதியாக மிதக்கும்'' என்றார் புன் சிரிப்பு முகத்தில்தாண்டவமாட.

''வேகவாஹினி சாக்ஷியாகத் தற்சமயம் என் மனதிலேற்பட்ட எண்ணத்தைச் சொல்லிவிடுகிறேன். ஹ்ருதய தாபத்தில் எழும் என் சொற்கள் சத்யம். தங்களைக் கண்டதும் என்மனம் பயத்தை அடையவில்லை. ஆறுதலே ஏற்பட்டது. என் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து நான் வணங்கிவரும் பவானி தேவியே தங்களை அனுப்பிவைத்தாள் போலும். இனி என் வாழ்க்கைச் சகாப்தத்தில் ஆனந்த வர்ஷமே நர்த்தனம் செய்யப்போகிறது என்று என்னையறியாமலே என் மனதில் ஓர் இன்ப உணர்ச்சியும் அமைதியும் ஏற்பட்டன. இனி தாங்களே என் தெய்வம். தங்கள்வாக்கே வேதமொழியாகக் கொள்ளுவேன். இந்த நிர்ப்பந்தத்திலிருந்து என்னை விடுதலைசெய்து விடுங்கள்'' என்று அவரை வணங்கும் பொருட்டு அவர் பிடிக்குள்ளிருந்த தன் கையை விடுவிக்கப் பிரயத்தனப்பட்டாள்.

''நான் தேகப்பயிற்சியில் ஈடுபட்டவன். ஸர்க்கிள் இன்ஸ்பெக்டராக வேலைபார்க்கும் என்கையிலிருந்தே நீ தப்பமுடியாது. தற்கொலை செய்துகொள்ளப்பிரயத்தனம் செய்ததற்குத் தண்டனையுண்டு தெரியுமா?'' என்றார் அவள் இரண்டுகைகளையும் அழுத்திப் பிடித்தவாறே.''

''என்ன தண்டனை? கொடுங்கள், ஏற்கச் சித்தமாக இருக்கிறேன்.

"ஏற்ற சமயத்தில் ஏற்ற இடத்திலன்றோ கொடுக்கவேண்டும். இப்பொழுது நடக்கக்கூடியதைப் பற்றித்தான் தற்சமயம் யோசிக்கவேண்டும்''

''தங்கள் சித்தம்''

''நான் இப்பொழுது எது சொன்னாலும் எது செய்தாலும் ஆக்ஷேபனை சொல்ல மாட்டாயே?''



"லக்ஸ் டாய்லட் சோப்
உங்கள் சருமத்தை
சுத்தமாகவும், கவர்ச்சியுடைய
தாகவும் செய்யட்டும்" என்கிறார்
குமாரி என். ராஜம்




LTS. 168-111-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

"சுவாமி! இன்னும் என்மீது நம்பிக்கை பிறக்கவில்லையா?" என்று சொல்லும் பொழுதே அவள் கண்களில் நீர் நிரம்பி விட்டது.

"அடடா! நான் என்ன தவருகச் சொல்லிவிட்டேன் இப்படி வருத்தப்படுவதற்கு" என்றுசொல்லிக் கொண்டே அருகிலழைத்து, கண்களைத் துடைத்துவிட்டுக் காதருகில் குனிந்து சிலவிஷயங்களைச் சொன்னர். சூரியனைக்கண்ட தாமரையென அவள் முகம் மலர்ந்தது. சந்தோஷமிகுதியினல் அவரைப் பார்த்தபடியே நின்ருள்.

"என்ன பதிலைக்காணேம்" என்ருர்.

"சுவாமி! என்னபேசுவது என்றுதெரியவில்லை. ஆனல் எப்படிமுடியும் என்று தயங்குகின்றது என்மனம்"

"தயக்கமேன்? நான் இதுவரை ஒரு பெண்ணை நேருக்குநேராகப் பார்த்துப்பேசியது கிடையாது. "ஸ்த்ரீ ஸ்பர்சம்" என்பது உன்னைத்தொட்டே அறிந்தேன். அதுவும் ஆபத்திற்குப்பயந்து வகைதெரியாது உன் கைபிடித்தேன். முதன்முதலாக ஏற்பட்ட பாசம், காதலின் சுழலிலிருந்து தப்ப விடாது. உன் விருப்பம்தான்........"

"நான் என்றும் தங்கள் அடிமை. நான் மிக்க பாக்கியசாலி" என்ருள்.

"பாக்யசாலி யார்? என்பதுதான் புரியவில்லை. அதுபோகட்டும். உன் வீடுவரையிலும் நான் கொண்டுவந்துவிடவா?"

"வேண்டாம் நானே, சென்றுவிடுவேன். பழக்கமான இடம்தானே. நீங்கள்கூட வந்தால் வீண் கலவரமாக முடியும்"

"சரி, இந்தத்தோப்பைத் தாண்டும்வரை கூடவருகிறேன்" என்று நடந்தார். அவளும் பின்தொடர்ந்தாள். தோப்பைத் தாண்டியதும் திரும்பி நின்று, "நமஸ்காரம் சென்றுவருகிறேன்" என்று இரு கைகளையும் எடுத்துக் கும்பிட்டாள்.

"சந்தோஷம். தைர்யமாக நட. நான் சொன்னவைகளை மறந்துவிடாதே" என்ருர் புன்சிரிப்புடன்.

"மறந்து நடந்தால் வாழ்க்கையில் நஷ்டம் யாருக்கு?" என்று சொல்லிவிட்டு நடக்கவாரம்பித்தாள். கொஞ்ச தூரம் சென்றதும் திரும்பிப் பார்த்தாள். தன்னையே நோக்கிநிற்கும் ராஜாராமைப் பார்த்துத் தயங்கி நின்ருள்.

கைக்குட்டையை விசிறி "போ" என்று ஜாடை காண்பித்தார். சட்டென மான் போல் துள்ளி மறைந்தாள்.

"குலமா பிரதானம்? குணமன்ருே வேண்டும். என் கனவு நனவாயிற்று" என்று எண்ணிய வண்ணம் நடந்தார்.

4

நாரா கிராமத்துப்பவானிசமேத புவனேசுவரர் ஆலயம் அன்று சாயங்கால முதல் ஒரே ஆரவாரமாக இருந்தது. மின்சார தீபங்களாலும் புஷ்பங்களினலும் ஜோதிர் மயமாகத் திகழ்ந்தது ஆலயம். வசந்த மண்டபத்தில் புவனேசுவரரையும் பவானி தேவியையும், அதியற்புதமாக அலங்காரம் செய்து வைத்திருந்தார்கள். சுவாமிக்கு இருபுறத்திலும் இரண்டு ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. சுவாமிக்கு முன்ன தாகச் சுமார் முப்பதடி நீளமும் பதினைந்தடி அகலமும் ஆடுவதற்காக விட்டு விட்டு மற்ற இடமெல்லாம் ஒரே தலை மயமாகத் தெரிந்தது. அலங்கார தீபாராதனை முடிந்ததும் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டரும் ஜமீன் பிரதிநிதியும் மரியாதையுடன் அழைக்கப்பட்டு வந்துசுவாமிக்கு வலப்பக்கமாக இன்ஸ்பெக்டரும், இடப்பக்கமாகப் பிரதிநிதியும் அமர்ந்தார்கள். சுவாமிக்குப் பின்புறமிருந்த வாயில்வழியாக வந்த மோஹினி முதலில் இன்ஸ்பெக்டரை வணங்கிவிட்டு, பிறகு சுவாமியையும் பிரதிநிதியையும் வணங்கி, சபை வணக்கமும் செய்தாள்.

ஜதி, அலாரிப்பு முடிந்ததும், "சலமேலரா" என்ற நாட்டைக்குறிஞ்சி வர்ணத்தைப் பாடியவண்ணம் அபிநயம் பிடித்தாள். "ஹா திரௌபதிகி துகிலிட நீ" என்ற இடத்தில் அவள் காட்டிய பாவமானது, ராஜாராமை நோக்கி என் மானத்தைக் காக்கமாட்டாயா" என்று கேட்பதுபோலிருந்தது அவர் மனதிற்கு. "அழகுள்ள துரை இவர் யாரடி" என்ற கமாஸ்ராக பதத்தைப் பாடி அதி அற்புதமாகப் பாவம் பிடித்தாள். அடுத்தபடியாக, "யாரோ இவர் யாரோ" என்ற பைரவிராக அருணசலக்கவி பாடலுக்குப் பாவம்பிடித்தாள். தம்மை மறந்து யாவரும் ஆட்டத்தில் மனதைப் பறிகொடுத்தார்கள். ஊசி விழுந்தால்கூட சப்தம் கேட்கும் நிலைமையிலிருந்தது அக்கூட்டம். அன்று ஆட்டம் அதியற்புதமாக அமைந்தது. வெகு நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மோஹினியின் நடனத்தில் தம்மைமறந்து ஈடுபட்டார் ராஜாராம். இம்மூன்று பாட்டிற்குப் பின்

னர் ஒவ்வொரு பாட்டிற்கும் அடிதொடங்கிக் கொடுக்கத் தொடங்கினர். சுமார் பத்துப் பாட்டு, அவர் சொன்னதற்கெல்லாம் அபிநயம் பிடித்தாள். கடைசியில் அவள் நெற்றியில் லேசாக வியர்வை அரும்புவதைக் கவனித்த ராஜாராமின் மனம் ஓர்வித சலனத்தை அடையத்தொடங்கினது. அவள் வியர்வையைத் துடைத்து ஆச்வாசம் செய்யவேண்டும் என்ற அவா எழுந்தது.

சிரமத்துடன் மனதை அடக்கிக்கொண்டு பட்டரை நோக்கி "நடனம் போதும்; மேலேநடக்கவேண்டியவைகள் ஆகட்டும்" என்றார்.

"தங்கள் ஆக்ஞை" என்று பல்லிளித்தார் பட்டர்.

கடைசியாக மங்களம் பாடி நடனம் செய்தவண்ணம் ராஜாராமின் அருகில் வந்து, சட்டெனத் தன் கழுத்திலிருந்த மாலையைக் கழற்றி, ராஜாராமின் கழுத்தில் போட்டுவிட்டு, அவர் பாதத்தில் ஒரு நமஸ்காரம் செய்து, அவர் பக்கமாக, சுவாமி அருகில் நின்றாள் மோஹினி.

அவ்வளவுதான், அதுவரை அமைதியுற்றிருந்த இடம் பாறையின்மீது ஜலம் ஓடும் நிலைமையை அடைந்தது.

அனுபவம் மிகுந்த பிரதிநிதி கூட்டத்தைக் கையமர்த்தி, "அதிகாரிக்கு மாலை போடவேண்டியது மரியாதைதானே? அதற்கு இவ்வளவு ஆரவாரமேன்?" என்றார் அமைதியாக.

சந்தடி அடங்கியதும், "பட்டர்வாள், அடுத்த அயிட்டம் ஆரம்பிக்கலாமே?" என்றார் ஜமீன்பிரதிநிதி.

"சமூகத்தின் உத்தரவு" என்று கை கூப்பிய வண்ணம், பழம் பாக்கு வெற்றிலை புஷ்பம் இவைகளுடன் சுவாமிமுன், ஒரு தட்டில் மாங்கல்யம் வைத்திருந்ததை, ஒரு கற்பூர ஹாரத்தி செய்துவிட்டு, மாங்கல்ய சூத்திரத்தைச் சுவாமி கையில் வைத்து எடுத்து மோஹினியின் கையில் கொடுக்க வந்தார் பட்டர்.

"அதை இப்படிக் கொடும்" என்று கையை நீட்டினார் ராஜாராம்.

பார்ப்பதற்குக் கேட்கிறார் என்று நினைத்து அவர் கையில் கொடுத்தார் பட்டர்.

கையில் வாங்கிக்கொண்டு "மோஹினி!" என்றார்.

"சுவாமி" என்று திரும்பி அவர் எதிராகத் தலை குனிந்து நின்றாள்.

அடுத்த கணம் யாவரும் சற்றும் எதிர்பாராவண்ணம் தமது கரத்தினால் அவள் கழுத்தில் மாங்கல்யத்தைக் கட்டிவிட்டு, அவள் கையைப் பிடித்து இழுத்துத் தம் பக்கத்தில் நிறுத்திக்கொண்டார் ராஜாராம். பிறகு ஓர் விசில் கொடுத்தார். தீபத்திலிருந்து சுடர் தெறித்தது. பத்து ஜவான்கள் அவரைச் சுற்றி நின்றுகொண்டார்கள்.

இச்செய்கை யாவர் உள்ளத்திலும் திக்பிரமையை உண்டாக்கிவிட்டது. கற்சிலை போல் பிரமித்து நின்றுவிட்டார்கள் மோஹினியின் தாயாரும் பட்டரும். ஜமீன்பிரதிநிதி கிருதாமீசை துடிக்க எழுந்து நின்றார்.

"என்ன? இன்ஸ்பெக்டர்வாள் இப்படிச் செய்யலாமா?" என்றார்.

"என் இதிலென்ன தப்பு? மனமொத்த மணம்" என்றார் கம்பீரமாக ராஜாராம்.

"மணமாவது குணமாவது அதெல்லாம் ஒன்றுமில்லை. ஜமீனுக்குத்தான் அவள் சொந்தம். இங்கேவா மோஹினி!" என்று அவள் கையைப்பற்றி இழுக்கச் சென்றாள் தாயார்.

மோஹினியின் அருகில் வரமுடியாமல் ஜவான்கள் தடுக்கவே "இது என்ன அநியாயம்" என்று சத்தமிட்டாள்.

"பெரியம்மா! அனாவசியமாகக் கூச்சல் போடாதீர். உங்களுக்கு வேண்டியது பணம். அது எவ்வளவு வேண்டுமானாலும் நான்தருகிறேன்" என்றார் ராஜாராம்.

"என்னய்யா இது? போலீஸ் உத்யோகஸ்தரா இவ்விதம் செய்வது? அவள் எங்கள் ஜமீனுக்குத்தான் சொந்தம். எல்லா ஏற்பாடுகளும் நடந்த பிறகு எப்படித் தடுக்கமுடியும்? அவளை விடப்போகிறீரா, இல்லையா?" என்றார் பிரதிநிதி.

"அவள் எனக்கே சொந்தம். விடமுடியாது" என்றார் ராஜாராம்.

"வீண் விவாதம் செய்யாதீர். பெண்ணை அழைத்துச் சென்றதாகத் தாவா போடுவோம்" என்றார் பிரதிநிதி.

தாராளமாகத் தாவா செய்யும். அவள் மேஜர். பூர்ண சம்மதத்துடன் என்னோடு வருகிறாள். அவளைக் கட்டாயப்படுத்தி, பணத்திற்கு விற்கிறார்கள் என்று நான் நடவடிக்கை எடுப்பேன். ஏன்? இப்பொழுதே

உங்களை அரஸ்ட் செய்ய எனக்குப் பவர் இருக்கிறது. உங்கள் ஜமீந்தாரின் அந்தரங்க ஊழல்களெல்லாம் பகிரங்கமாகட்டும். நல்ல நோக்கமுள்ளவராக இருந்தால், இன்று வர அஸௌகரியப்பட்டால் மற்ருரு நாள் தாமே நேரில் வந்து அழைத்துச் செல்வது முறை. உண்மையான அன்போடு இவளை ஏற்பதாக இருந்தால் அப்படிச் செய்திருப்பார். கேவலம் தாசி; அவரின் அந்தப்புரத்தில் ஓர் அழகி இருக்கிருள் என்ற பெருமை வேண்டும்; சமயத்தில் அவரது கீழ்த்தரமான இச்சையைச் சமனம் செய்யும் ஓர் கருவி அவள்! அந்த ஸ்தானத்தை வஹிக்க அவளுக்கு இஷ்டமில்லை. தன் வாழ்க்கைச் சக்கரத்தைச் செலுத்தும் பாதையை வகுக்க அவளுக்குச் சுதந்திரமுண்டு. உரிமையுண்டு. அதற்குரிய வயதும் வந்துவிட்டது; இப்பொழுது சமாதானமாக ஓர் ஏற்பாடு செய்துகொண்டு அவளை என்னுடன் அனுப்புவதாக இருந்தால் யாவருக்கும் நன்மை. இல்லையேல் இவ்வளவுபேர்களும், உங்கள் ஜமீந்தாரும் அரஸ்ட் செய்யப்படுவார்கள். இந்த விஷயத்திற்காக நடந்த கடிதப் போக்குவரவு அவ்வளவையும் கைப்பற்ற அவள் வீட்டு வாசலில் தயாராகக் காத்திருக்கிருர்கள் ஸப் இன்ஸ்பெக்டரும் ஜவான்களும். என்ன சொல்லுகிறீர்கள்?" என்ருர் ராஜாராம்.

இவருடைய கம்பீரமானதும் சாதுர்யமானதுமான சொற்களைக்கேட்ட பிரதிநிதி, பயந்து நடுங்கிவிட்டார். ஆனுலும் அதை வெளிக் காட்டிக்கொள்ளாமல், "சரிதான். ரொம்ப பயமுறுத்தவேண்டாம். வீம்பு வைத்தால் பிரிவிகௌன்ஸில்வரை சென்று பார்த்தேவிடுவோம். இந்த அதிசய சரக்கிற்கு அவ்வளவு செலவழிப்பானேன். நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். எனக்குச் செலவான ஐயாயிரம் ரூபாயைக் கொடுத்துவிடும் போதுமானது" என்ருர் பிரதிநிதி.

"அப்படிவாரும் வழிக்கு," என்று சொல்லிக்கொண்டே பாக்கெட்டிலிருந்த செக்புஸ்தகத்தை எடுத்து ரூபா ஐயாயிரத்திற்குச் செக் எழுதி, பிரதிநிதி முன் நீட்டி, "இந்தாரும் பெற்றுக்கொண்டேன் என்று ஜமீன் ரசீது கொடும்" என்ருர். பிறகு மோஹினியின் தாயாரைப் பார்த்து, "நீங்கள் எங்களுடன் வரப் பிரியப்படாவிட்டால் இவ்விடம் சுகமாகக் காலம் கழிக்கவேண்டிய


# நின்றுபோன மாதவிடாய்



குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினுல் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்ருர்கள்

| | | | |
|---|---|---|---|
| சாதாரண கேஸ்களுக்கு | ... | ... | ரூ 3 |
| நீண்டநாளைய கேஸ்களுக்கு | ... | ... | ரூ 5 |
| மிக ஆபத்தான கேஸ்களுக்கு | ... | ... | ரூ 8 |
| கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு) | | ... | ரூ 4 |

(வி. பி. அணு 12 கூட)

தயாரிப்பவர்:-

**MRS. P. DEVEE, F.D.S. (C.M.)**

Tollygunge CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

ஹாரி & சன், 93, சைனுபஜார் ரோடு மதராஸ்.
ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு பங்களூர் ஸிடி
நாதம் & கம்பெனி மட்டஞ்சேரி, கொச்சி.
J. திராத் & கம்பெனி, மஹாத்மா காந்தி ரோடு, கராச்சி
L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட் 167, தராம்தோலா தெரு கல்கத்தா.
சிவானந்த சித்தர் மெடிகல் ஹால், 92, கடல்தெரு கொளும்பு, &
768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

பணம் அனுப்பிவைக்கிறேன். கவலைப்படாமலிருங்கள்" என்ருர்.

"அடி, பாவி! மோஹினி! என்னடி இப்படிச் செய்தாய். அந்த ஜமீன் ஆள் பொய் சொல்லி ஐயாயிரம் ரூபாயைக் கொட்டிக் கொண்டு போகப் போகிருன். அவன் சொன்ன பணம் என்னிடம் கொடுக்கவில்லையே. பண நஷ்டம், அவமானம், இது தானு?"

"அம்மா! அவர் அந்தப் பணத்தோடு போகட்டும். இதோ நான் தருகிறேன், பெற்றுக்கொள்ளுங்கள்" என்று இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களை அவள் முன்னுக நீட்டினுர்.

அவர்களை வெறிக்கப் பார்த்தபடி பேசாமல் நின்ருள்.

"கவலைப்படாதே அம்மா! வாங்கிக் கொள். இனிமேல்தான் நமது நற்காலம் தொடங்கப்போகிறது" என்ருள் மோஹினி.

வாயைத் திறவாமல் கை நீட்டி வாங்கிக் கொண்டாள்.

"உம், ரசீது கொடும்" என்று அதட்டினுர் பிரதிநிதியை ராஜாராம்.

ரசிதை அவர் கையில் கொடுத்துவிட்டு "உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனியைப்போல்" எழுந்து சென்ருர் பிரதிநிதி.

"மோஹினி! வா போகலாம்" என்று எழுந்திருந்து சுவாமியை வணங்கிவிட்டு, "அம்மா சென்று வருகிருேம்" என்ருர் மோஹினியின் தாயாரை நோக்கியவாறு ராஜாராம்.

மோஹினியும் சுவாமியை வணங்கிவிட்டு தாயாரையும், வணங்கி, "அம்மா! கவலைப்படாதே; சென்றுவருகிறேன். கூடிய சீக்கிரம் உன்னைப் பார்ப்பேன்" என்று சொல்லிவிட்டு, ராஜாராம் அருகில் வந்தாள். தாயார் என்னசொல்வது என்னசெய்வது என்று புரியாதவளாக ஊமைபோல் நின்ருள். மோஹினியின் கையைப் பிடித்தவண்ணம் சபையை ஓர்முறை சுற்றிப் பார்த்துவிட்டு ஆண் சிங்கம்போல் நடந்து சென்ருர். ஜவான்களும் பின்தொடர்ந்து கோவிலுக்கு வெளியில் நிற்கும் காரில் அவர்கள் இருவரும் ஏறினதும் ஸல்யூட் வைத்தார்கள். அடுத்த நிமிஷம், சம்யுக்தையைத் தூக்கிச் சென்ற பிருதிவி ராஜன்போல் காரை ஸ்டார்ட்செய்து "பூம் பூம்," என்ற வெற்றிக்கோஷத்துடன் அவ்விடம் விட்டு அதிவேகத்தில் வண்டியைச் செலுத்தி மறைந்தார் ராஜாராம்.

"சிகப்புத் தொப்பி" என்று கேட்டாலே நடுங்கும் அந்தக்கிராமத்து ஜனங்கள் அச்சமயம் ராஜாராமிற்கு அனுகூலமாகவே நடந்தார்கள்.

"மோஹினி! அதிருஷ்டக்காரி. சேற்றில் முளைத்த செந்தாமரையைப்போல் தாசி குலத்தை வெறுத்துவந்தாள். பகவான் அவள் பங்கிலிருந்து, பவானிமாதா அனுக்கிரஹத்தினுல் உத்தமமான புருஷனை அடைந்துவிட்டாள்" என்ருர் சிலர்.

"என்ன அதிசயம்! என்ன தைரியம்? எங்கிருந்தோ வந்து பிருதிவிராஜ் ஸம்யுக்தையைத் தூக்கிச் சென்றதுபோல் சென்றுவிட்டானே. போலீசாக இருந்ததினுல் ஒருவரும் ஒன்றும் சொல்லவோ தடுக்கவோ முடியவில்லை. ஜமீன் ஆளும் பயந்துவிட்டான். ஏதோ எல்லாம் நன்மையாக முடிந்தது" என்றுசொல்லிக்கொண்டார் சிலர்.

"ஆமாம் என்னமோ அழகில் மயங்கி வாலிபமுறுக்கில் அழைத்துச்சென்றிருக்கிருன். முழுநாளும் தாசியைவைத்துக் கொண்டு வேறு கல்யாணம் செய்து கொள்ளாமல் ஏகபத்னிவிரதனுக இருந்து விடுவானு? இன்னும் கொஞ்சநாளில் நாய் போல் இங்கு தானே ஓடிவந்துவிடுவாள்" என்றசொல்லிக்கொண்டார்கள் சிலர்.

இப்படி பலர் பலவிதமாகப் பத்து பதினைந்து நாள்வரை அவ்வூரிலும், சுற்று வட்டாரங்களிலும் பேசியவண்ணமிருந்தார்கள். நாளடைவில் அச்சம்பவம் மறைந்து சர்வசாதாரண விஷயமாகி விட்டது.

மோஹினியின் தாயார் மாதா மாதம் வரும் பணத்தைக் கொண்டு சுககாலக்ஷேபம் செய்துவந்தாள். என்ருலும் "ஜமீந்தாரிணியின் சுகபோகத்தில் வாழவேண்டிய தனதுமகள் இப்படிச் சதிசெய்துவிட்டுப் போய்விட்டாளே; அவள் எந்நாளும் சுகபோகமாக வாழமுடியுமா?" என்ற பிரச்னை தீராவண்ணமே காலம் கழித்தாள்.

(தொடரும்)

# BMB மிஷீன் கலப்பைகளின் வெளிப்படையான உண்மைகள்

1. ஒரு நாளைக்கு சுமார் 2 ஏக்கரா பூமியை ஏர் உழும் 10 ஏக்கராவைப் பரம்படிக்கும்.
2 களைவெட்டுதல், பயிரிடுதல் விதை, விதைத்தல், உரமிடுதல் முதலிய வேலைகளைச் செய்யவும்.
3. சுமை இழுக்கவும், பெல்டினால் ஓட்டப்படும் யந்திரங்களை உபயோகிக்கவும் உதவும்
4. மிகக் குறைந்தசெலவிலும், அதிக கவனிப்பில்லாமலும், எல்லாவித கால நிலைகளிலும் எவ்வித தொந்தரவும் கொடுக்காமல் உழைக்கும்



1. குதிரை ஓட்டம் (HP.)
3. குதிரை ஓட்டம் (HP.)
6. குதிரை ஓட்டம் (HP.)

முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

## ஸிம்ஸன் & கம்பெனி லிமிடெட்.

மவுண்ட்ரோட். மதராஸ்.

கிளைகள்: பங்களூர், உதகமண்டலம், திருச்சிறப்பள்ளி, ஹைதாபாத் (Dn).

# ஆறுதல்

"மா. ச"

## 1. ஆரம்பம்

ஹரிபூரிலிருந்து அதுதான் கடைசி வண்டி. நாளை முதல் அந்த வழியில் போகும் வண்டிகள்கூட அங்கு நிற்காது. காரணம் குழப்பமும் கலகமும் அதிகரித்திருப்பதை முன்னிட்டுப் பஞ்சாப் அரசாங்கத்தினர் மூடிவிடத் தீர்மானித்த ஸ்டேஷன்களில் ஹரிபூரும் ஒன்று. வண்டியின் மேலும் ஜனங்கள் உட்கார்ந்திருந்தனர். கஷ்டப்பட்டு குழந்தையையும் அவளையும் உள்ளே திணித்துவிட்டு வெளியில் நான் நின்றுகொண்டிருந்தேன். வண்டியும் கிளம்பியது. எல்லோர் உள்ளத்தினின்றும் 'அப்பாடா' என்ற பெருமூச்சு. அடுத்தபடி வண்டி டெல்லியில் தான் நிற்கும். ஆம்! கவலையும் பயமுமின்றி அவர்கள் அங்குத்தான் வாழமுடியும். சிறிது நேரம் வரையில் பேச்சே காணோம். மெள்ள ஒருவர், "கல்கத்தாவில் காந்தி உண்ணாவிரதம் இருக்கின்றாராமே?" என்று பக்கத்தில் இருந்தவரைக் கேட்டார். உடனே வண்டியில் ஒரே கலவரம். எந்த நிமிடம் தாக்கப்படுவோமோ என்று அச்சங்கொண்டிருந்த அவர்கள் தினசரிச் செய்திகளை எங்கே பார்த்திருக்கப் போகிறார்கள்? "அடே! இந்தத் தடவை அவர் உண்ணாவிரதம் எல்லாம் பலிக்காது. இங்கு இவர்கள் நம்மை அழிக்கும் முறைக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும்...எல்லோரையும் நிற்கவைத்துச் சுட்டுத் தள்ளணும்" என்றார் ஒரு ஆயுத அபிமானி. "ஹூம்! காந்தியின் தத்துவம் என்ன, அவர் எதற்காக இந்த வேலையில் இறங்கினார் என்றெல்லாம் தெரியாமல் பேசுகிறீர்களே..." என்றார் ஒரு காந்தி பக்தர். இவ்வாறு பலர் பலவாறு பேசினர். மனைவி மாண்டு விட்டதனால் அவர்கள் பூண்டோடு அழிய வேண்டும் என்று சபித்தார் ஒருவர். சொத்து பறிபோய் விட்டதற்காகச் செத்தொழிய வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார் ஒருவர். இதற்கிடையில் மூலையில் ஒரு குரல், "இதெல்லாம் வேறு யார் வேலையும் இல்லை, ஸார்......அந்த மெகதீன் காஸிம் வேலை தான். அவனைப் பிடிச்சா எல்லாம் சரியாப் போய்விடும்" என்றார். எங்களுக் கெல்லாம் விந்தையாக இருந்தது. இவ்வளவு சுலபமாக இவ்வளவு பெரிய கலகத்தை அடக்கி விட்டாரே என்று!..."அதெப்படி...சொல்லுங்கள்" என்று ஓரிருவர் கேட்கவே அவரும் ஆரம்பித்தார். நானும் என் வழுக்கைத் தலையில் ஒரு துணியைச் சுற்றிக்கொண்டு அருகில் போய் நிற்கலானேன். (சமீபத்தில் இங்கு பரவிக்கிடந்த மத மாற்றத்தின் விளைவே இது என்று சொல்லாமலே உங்களுக்கு விளங்கும்) பொழுது போகவேண்டும் அல்லவா... அதனால் அவர் கதையை நாங்கள் நிறுத்த விரும்பவேயில்லை.

## 2 ஷெரிக் பூர்

"நான் ஷெரிக் பூரில் ஒரு ஸ்கூல் வாத்தியார். எனக்கு இந்தக் கலவரங்களைப் பற்றி அதிகமும் தெரியாது. தெரிய ஆவலும் இருந்ததில்லை. என் மனைவி எனக்குத் துணையாக ஒரு பெண்ணையும் இரண்டு பிள்ளைகளையும் பெற்றுப் போட்டுவிட்டு இறந்து விட்டாள். எனக்குப் பணம் வேண்டும் என நான் சம்பாதித்தது எல்லாம் இவர்களுக்காகத் தான். என் மனைவி இறந்து போகும்போது ரஜியாவை (என் பெண்) அவள் தம்பி இஸ்மெயில் காதருக்கே மணம் செய்து கொடுத்து விடவேண்டும் என்று என்னிடம் உறுதி வாங்கிக்கொண்டு உயிரை விட்டாள். ஆதலால் அவன் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து விட்டுப்போவான். அவன் தகப்பன் இறந்ததும் எங்கள் வீட்டிலேயே தங்க ஆரம்பித்தான். இஸ்மெயிலின் தம்பி தான் காஸிம். அவனுக்கு ஊரில் பீடி சுற்றும் சோம்பேறிகளும், வேலையில்லாத சோதாக்களும்தான் தொடர்பு அவர்களின் கேவலமான செய்கைகளுக்கும் அர்த்தமற்ற கேலிக்கூத்திற்கும் இவன் மிக உதவியாக இருந்தான். இஸ்மெயில் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டான். ஒன்றும் பலிக்கவில்லை. "தன் தம்பி தான் இவன்" என்று இஸ்மெயில் கூறுவதற்கே அஞ்சினாலும் காஸிம் பல தடவை கட்டவேண்டிய அபராதங்களை எல்லாம் கட்டினான். இதற்கிடையில் அவர்கள் தந்தை இறந்து போனார். அவருக்கு அதிகமாகச் சொத்துக்கள் கிடையாது. ஏதோ கொஞ்சம் இருந்ததை இஸ்மெயிலிற்கே கொடுத்துவிட்டு காஸிம் நல்ல வழியில் நடப்பதாக அவனுக்குத் தெரிந்தால் அதில் பாதி கொடுத்து விடும்படியும் கூறி

விட்டு இறந்து போனர். அடக்கத்திற்குக் கூட இந்த அற்பப் பயல் வரவேயில்லை. ஓரிரண்டு மாதங்கள் கழித்து ஒருநாள் இஸ்மெயிலைத் தேடிக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்து தன்னை ஏமாற்றி உயில் எழுதி வாங்கிக்கொண்டு விட்டதாக வாதாடி, தன் பங்கைக் கேட்டான். இஸ்மெயில் அடக்கமாக, "நீ நல்ல வழியில் திரும்பினுல் போதும். எப்போதும் உன் பணத்தைக் கொடுப்பதற்குத் தயார்" என்ருன். "நான் நல்ல வழியில் இருக்கிறேன், இல்லை என்பதைத் தீர்மானிக்க நீ யார்" என எதிர்த்துப் பேசினுன் அந்த முரடன். "இந்த முட்டாளுடன் உனக்கு என்ன பேச்சு" என்று இஸ்மெயிலைப் பார்த்து நான் சொன்னேன். இதற்குள் சப்தம் கேட்டு உள்ளே யிருந்த ரஜியா எட்டிப் பார்த்தாள். காஸிம் அவளைப் பார்த்து, "அடே! ரொம்ப அழகாயிருக்கிருயே இப்போ......சின்ன வயதில் உன்னைப் பார்த்தது......ஹூம் இப்போ விஷயம் தெரியுது! இஸ்மெயில், இந்தப் பெண்ணை 'நிக்கா' செய்துகொள்ளவேண்டும் என்றுதானே என் சொத்தை ஏய்க்கப் பார்க்கிறே. உன்னுடன் இந்தக் கிழவனும் சேர்ந்து கொண்டான். உங்களை அடக்கிற வழியில் அடக்கிறேன். ரஜியாவை, உன்னைத் தொலைத்துவிட்டு நான் எடுத்துக் கொள்ளாவிட்டால் நான் காஸிம் இல்லை" என்று வீருப்புப் பேசிவிட்டு வெளியில் தயாராகக் காத்துக் கொண்டிருந்த சகாக்களுடன் "வாங்கடா போகலாம்" என விறுவிறுப்பாக நடந்தான்.

## 3. புரட்சிப் புயல்

இதெல்லாம் பழைய சம்பவம்......அன்று தான் நாம் சுதந்திரம் அடைந்த மூன்ரும் நாள். மாலைப் பிரார்த்தனையில் 'நாமும் நம்மைச் சார்ந்த ஹிந்துக்களும் சுகமாக வாழவேண்டும்' என்று அல்லாவை வேண்டிக்கொண்டு வெளியில் வந்தேன். மணி எட்டிருக்கும். வாசலில் ஒரே கூட்டம். எல்லாம் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். சில தினங்களாக லாகூரிலும், அமிர்தசரஸிலும் பரவிக் கிடந்த கலவரம் இங்கும் வந்துவிட்டது என்று பலர் கூறிக்கொண்டே சென்ருர்கள். "ஐயோ! பாவி வேண்டாம்" எனப் பெண்கள் கூச்சல் வெகு தூரம் வரையில் கேட்டது. ஆங்காங்கே நெருப்பின் அறிகுறியாகப் புகைச்சல் எழ ஆரம்பித்தது. கையில் நெருப்புப் பந்தத்துடன் அபலைஸ்திரீகளைத் தொடர்ந்துகொண்டு ஓடினர் சிலர். கீழே தவறி விழுந்த ஓரிரண்டு குழந்தைகள் எடுப்பாரற்று மிதி பட்டுக் கிடந்தன. "ரஜியா! கதவைத் தாளிட்டுக் கொள்" என்று கூறிவிட்டு கூட்டம் வரும் திக்கை நோக்கி ஓடினேன். அப்பப்பா! அங்கே நான் கண்ட காட்சி கலங்க வைத்தது...இருபது முப்பது பேர்களைக் கட்டாயப்படுத்தி மொட்டை அடித்து நமாஸ் படிக்கச் சொல்லிக்கொண்டிருந்தார்கள் சில சோம்பேறிகள். அங்கே இஸ்மெயில் "அடே, இதை நபி ஒருகாலும் விரும்பமாட்டார். ஏன் வீணுக இஸ்லாமிய மதத்திற்கே அவமானம் விளைவிக்கின்றீர்கள். மனிதன் மனிதனைக் கொல்ல வேண்டும் அல்லது கட்டாயப்படுத்தி மதம் மாற்றவேண்டும் என்று எந்தப் புராணமும் சொல்லவில்லை......வீண் பழியைத் தேடிக் கொள்ளாதீர்கள்..." என்று அவர்களை அடக்கிக்கொண்டிருந்தான். கூட்டத்தில் ஒருவன், "ஆமாம்! இதெல்லாம் சோதாக்களின் செய்கை. அவர்களைப் பிடியுங்கள். போலீஸிற்குத் தெரிவியுங்கள்" என்று கூச்சல் போட்டான். அப்போது ஒரு மூலையிலிருந்து காஸிம் ஒரு கையில் நெருப்புப் பந்தத்துடனும் மற்ருெரு கையில் பிச்சுவாவுடனும் வந்து, "டேய்! எங்களைப் பிடிக்கவா போலீஸ் கூப்பிடுகின்ருய்...ஹூம்..." என்று இஸ்மெயிலை நோக்கி ஓடிவந்து அவன் இருதயத்தில் தன் பிச்சுவாவைப் பாய்ச்சினுன். இதற்குள் அவனது மற்ற சகாக்கள் ஓடிவந்து அனைவரையும் நெருப்புப் பந்தங்களினுலே தாக்க ஆரம்பித்தனர். ஒரு நிமிஷத்தில் கூட்டம் கலைந்தது... நான் சிறிதும் தாமதிக்காமல் இஸ்மெயிலை எடுத்து மடிமேல் கிடத்தி அவன் காயத்தைக் கட்ட ஆரம்பித்தேன். அப்போது இந்தக் கலவரத்தைக் கண்டு 'கலகல' என்று நகைத்துக்கொண்டிருந்த காஸிம் 'டே! கிழவா... நீ கூட இங்கு வந்துவிட்டாயா ..இப்போ உன் வீட்டிற்குத்தான் போகிறேம்...' என்று 'வீல்' எனச் சிட்டி அடித்து மற்றச் சகாக்களுடன் வீடு நோக்கி ஓடினுன். இஸ்மெயிலை விட்டு விட்டுப் போகவும் மனதில்லை. அதற்குள் இஸ்மெயில், "நான் போனுலும் பரவாயில்லை. ஓடிப்போய் ரஜியாவைக் காப்பாற்றுங்கள்... எத்தனையோ ஒன்றுமறியாதவர்கள் அழிந்து போனுர்கள். அதிலே நானும் ஒருவன்...இனி மேலாவது இந்த அட்டூழியம் நடவாது தடுங்கள்...வீட்டிற்கு ஓடுங்கள்...' என்ருன். மூச்சை அடைத்துக்கொண்டு அவன் பேச்சு வந்தது. நானும் சிலரைக் கூப்பிட்டு அவனை எடுத்துக்கொண்டு வரச்சொல்லிவிட்டு முன்னே ஓடலானேன்.

என் வீட்டு வாசலில் பெருங்கூட்டம். காஸிம் கதவைப் பிளந்துகொண்டிருந்தான். "கத

வைத் திறக்கமாட்டேன்" என்று ரஜியா சொல்லியதுதான் "காரணமாக இருக்கும். உள்ளேயிருந்தபடியே ரஜியா, காரணமில்லாமல் ஏன் இப்படிக் கலவரத்தை அதிகப்படுத்துகிறாய்...வேண்டாம் பெண்களைத் துன்புறுத்தாதே..." எனக் கத்திக் கொண்டிருந்தாள். உதவிக்காகச் சென்ற என்னை யாரோ ஒருவன் கீழே பிடித்துத் தள்ளிவிட்டான். கதவும் உடைக்கப்பட்டது. 'வெளியில் வா...'என்றான் காஸிம் அதிகாரத்துடன்..."முடியவே முடியாது" என்றாள் ரஜியா. "உன் தம்பிகள் இருவரையும் குத்திவிடுவேன்" என்று பயமுறுத்தினான் காஸிம். "அப்போதும் முடியாது!' என்றாள் ரஜியா. 'வீண் பேச்சு எதற்கு' காஸிம்...ஒரு மூலையில் வீட்டைக் கொளுத்துங்கள்" என்றான் ஒரு பாவி. வீடும் கொளுத்தப்பட்டது. ரஜியாவையும் என் இரு மகன்களையும் வலுக் கட்டாயப்படுத்தி வெளியே இழுத்துத் தள்ளினார்கள். காஸிம் இத்துடன் நிற்கவில்லை..." இஸ்மெயில் இத்தனைநேரம் இறந்திருப்பான்...நீ என்னை மணம் செய்து கொள்வதாக இத்தனை பேருக்கு எதிரில் கூறு. ...இல்லாவிட்டால் உன் தம்பிகள் இங்கே வெந்துபோவதைத் தான் காண்பாய்..." என்றான் கேலிச்சிரிப்புடன். பேய்தான் உரு வெடுத்து வந்ததுபோலிருந்தது அவன்குரல். "முடியவே முடியாது!' எனத் திடமாகச் சொன்னாள் ரஜியா. காஸிம் கால்களைப் பிடித்து என் மகன்கள் இருவரையும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு எரிந்துகொண்டிருக்கும் தீயில் எறிந்தான்,...(பாவி...என்று அனைவரின் கூச்சல்) ஆனால் யாரும் அவனைத் தடுப்பதற்குத் தயாராக இல்லை. காரணம் அவனது கூட்டம் துரோகிகள் அடங்கியது. எதற்கும் அஞ்சாதவர்கள் நிறைந்தது. அதிகாரிகளுக்கு மட்டும் ரகசியமாக ஆட்கள் அனுப்பப்பட்டனர். இதற்குள் ரஜியா அனைவரையும் ஒருமுறை நோக்கி, பெரியவர்களே...கூட்டத்தில் என் தந்தை என்ன கதி ஆகியிருப்பாரோ தெரியாது...கணவன் குத்துண்டான். இரு சகோதரர்களும் தீக்கு இரையாயினர்...இனி நான் இவ்வுலகில் இருப்பதில் பயனில்லை...ஆனால் உங்களுக்கு ஒரு வார்த்தை...அரசியலிலே சிக்கல்கள் பல உண்டு. ஆனால் அதைப் பெரிதாக்கித் தங்களது தீய இச்சைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பாவிகளுக்கு இனி இடங் கொடாதீர்கள். உங்கள் உயிர் போனாலும் அவர்களை அடக்குங்கள்..." என்று கூறிக் கொண்டே தீயினுள் நுழைந்தாள். அவளது வார்த்தைகள் அனைவரையும் திடுக்கிடச்செய்திருக்கும்... பலர் காஸிமைப் பிடிக்க ஓடி வந்தார்கள்.


# இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்
நார்த் பீச் ரோட், மதராஸ்.

●

மதராஸ் ஆபீஸ்கள்:
எஸ்பிளேனட், மவுண்ட் ரோடு,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்,
எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

| | | |
|---|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | - ரூ. | 72,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ | 53,00,000 |
| ரிஸர்வ் நிதி | - - ரூ. | 62,00,000 |

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்.
செக்ரெடரி.

போலீஸ் படையும்வரும் சப்தம் கேட்டது. இதைக்கண்ட காலிம் சிட்டி அடித்துக் கொண்டே நெருப்புப் பந்தங்களை நாலா பக்கங்களிலும் வீசினான். துப்பாக்கி வேட்டுக்கள் சப்தம், மக்கள் கால்களிலே மிதிபடும் உணர்ச்சி, தீப்பற்றி எரிவதனால் உண்டாகும் நாற்றம், பல மணி நேரம் கிடந்தன. அடிபட்ட அதிர்ச்சியிலிருந்து எழுந்தேன்...எல்லாம் கனவு போல இருந்தது. ஆனால் எதிரே சாம்பலாகிக்கிடந்த என் வீடும் வெந்து கொண்டிருந்த என் கண்மணிகளின் உடல்களும் இது கனவல்ல என்பதைக் குறித்தது. வயிறு எரிய அவர்களைத் தூற்றினேன். ஆனால் பயன் என்ன?...இனி எனக்கு ஷெரிக்பூரில் ஒருவரும் இல்லை. இங்கு இருப்பதில் என்ன...அல்லது இந்தியாவில் இருப்பதினால் தான் என்ன...இனி உடலை வளர்க்க உழைக்கவேண்டும். இங்கு இருந்து உழைத்தால் இந்த ஞாபகங்கள் அடிக்கடி வரும். அங்கோ அந்த நினைவுகளை ஒருவாறு மறக்கலாம்...அதனாலே தான் இந்தியாவிற்குக் கிளம்பி விட்டேன்" என்றார் பெருமூச்சு விட்டுக் கொண்டே அக்கிழவர்.

## 4. ஆறுதல்

"நீங்க சொல்வது ரொம்ப உண்மை. தங்களது சொந்த நலத்திற்கே இந்தக் கலவரத்தைப் பலர் பயன்படுத்திக் கொள்கின்றனர்" என்று வண்டியிலிருந்த பலர் ஆமோதித்தனர். கிழவர், "அந்தப் பாவியைப் பிடித்தார்களோ இல்லையோ...அவனைப் பிடித்து விட்டால் ஷெரிக்பூரில் தொந்தரவே யில்லை" என்றார் அவர்... 'ஷெரிக்பூரில்தான் சேதம் அதிகமாம். இவரைப்போல எல்லா முஸ்லீம்களும் இருந்து விட்டால் தொந்தரவே கிடையாது" என்று அங்கலாய்த்தார் ஒருவர். "இந்த வண்டி ஷெரிக்பூர் வழியாகத்தானே போகும்... அப்போ அதெல்லாம் தெரியுமாப்பா' என்றான் இவைகளை ஒன்று விடாமல் கேட்டுக் கொண்டிருந்த என் பெரிய பையன்..." இரவு பன்னிரண்டு மணிக்குப் போகும். இருட்டில் ஒன்றும் தெரியாது...பாருங்கோ பையன்கூடத் தூங்காமல் இந்த பயங்கரச் சம்பவங்களை கேட்கிறான்" எனச் சற்றுப் பெருமையுடனே பேசினேன். சிறிதுநேரம் வரையில் மௌனம். பெண்கள் வட்டாரத்தில் இதைப்பற்றிப் பேச்சு வளர்ந்துகொண்டிருந்தது.

திடீரென்று வண்டி மெதுவாகப் போக ஆரம்பித்தது. தலையை வெளியில் நீட்டிப் பார்த்ததில் நெருப்புப் பந்தங்களுடன் பலர் வெளியே நின்றுகொண்டிருந்தார்கள். பெரும் பாறைகள் தண்டவாளங்களில் வைக்கப்பட்டிருந்தன. வண்டியும் மெதுவாக நின்றது. ஒரு பெட்டிக்கு ஒருவராக அவர்கள் ஓடிவந்தனர். "உங்களிடம் இருக்கும் பணம், நகைகளையெல்லாம் உடனே கொடுத்துவிடுங்கள்...அப்போதுதான் வண்டி போகும்" என்று கூவினார்கள்...இதற்குள் வண்டியில் இருந்த கிழவர் "நீ கேட்பது—நாங்கள் கொடுப்பதா? ச்சே, கீழே இறங்குங்கள்...வாருங்கள் இவர்களை ஒரு வழி செய்யலாம்' என்று பையிலிருந்த பிச்சுவாவுடன் கீழே இறங்கினார். நாங்கள் பலர் பின் தொடர்ந்தோம்...... "இவர்கள் தான்! ஸார்! ஷெரிக்பூர் சோதாக்கள்" என்று கத்திக் கொண்டே பெரியவர் முன்னே சென்றார். இவரைக் கண்டு பலர் வண்டியிலிருந்து இறங்கினர். வண்டியிலே பதுங்கிக் கிடந்த ஒரிரண்டு சிப்பாய்களும் கீழே இறங்கினர். அரைமணி நேரம் பெரிய சண்டை நடந்தது. கற்கள் வீசி எறியப்பட்டன. பலருக்குக் காயம். துப்பாக்கிகள் பிரயோகிக்கப்பட்டபின் காலிகள் கூட்டம் ஓய ஆரம்பித்தது. இருட்டிலே யார் எந்தக் கட்சி என்று கூடத் தெரியாமல் அடிகள் விழ ஆரம்பித்தன. ஒருவாறு சப்தம் அடங்கிற்று. "வண்டி காலையில்தான் கிளம்பும்......இருட்டிலே இன்னமும் என்ன நேரிடுமோ" என்று கூறிவிட்டார் கார்ட்......ஆங்காங்கே படுத்தோம். கால்களிலே இரத்தம் தோய்ந்திருப்பது தெரிந்தது. பிணங்கள் கால்களிலே இடறின.

காலையில் எழுந்து யார் யார் தெரிந்தவர்கள் இறந்து போனார்கள் என்று பிணங்களைப் பார்க்க ஆரம்பித்தோம். கிழவர் கீழே கிடந்தார்...எங்கள் அனைவருக்கும் பெரிய வருத்தம் தான்......"அதோ பார்! காலிம்கூட குத்தப்பட்டிருக்கிறான்" என்று வேறு ஒரு சிறு கூட்டத்தினர் எத்தனை காலிகள் இறந்தனர் எனக் கணக்குப் போட்டுவந்தனர். அதில் ஒருவன் ஷெரிக்பூர் வாசியாக இருக்கலாம்...கிழவரைப் பார்த்தோம்...ஆம்! அதிலே முன் நாங்கள் பார்க்க முடியாத வெற்றிப் புன்னகை தவழ்ந்திருந்தது. "காலிமின் காலம் முடிந்ததிற்கு 'நான்' தான் காரணம் என்பதுபோலிருந்தது அது. இரண்டு நாட்களுக்குப் பிறகு டெல்லி வந்துசேர்ந்தோம். டெல்லியில் பத்திரிகையில் 'ஷெரிக்பூரில் கலகம் குறைந்திருக்கின்றது...'என்றிருந்தது...பாவம்! கிழவர் சொல்லியது உண்மைதான். பழிக்குப் பழி வாங்கி விட்டோம் என்பதிலே அடக்குவார் அற்றுக் கிடக்கும் அவரது ஆவி ஆறுதல் அடைந்து இருக்கும் என்பதில் வியப்பென்ன, மறுப்பென்ன!

# 'ரோஜா முள்'

ராஜலக்ஷ்மி சுவாமிநாதன்

'சிந்தையில் கவலை நீங்கி இன்புற்று
ரோஜாமலர் ஒன்று பறித்தேன்;
என் மாயக் காதலி வந்தனள்!
என் மலரைப் பெற்று ஏகினள்;
முள்ளே என்னிடம் எஞ்சி நிற்கும்?

காதலை இதய கீதமாக்கி அமுத வெள்ளத்தைப் பெருக்கிவிட்ட ஆங்கிலக் கவி 'ராபர்ட் பர்ன்ஸி'ன் கவிக் கனவுகளில் லயித்திருந்த என் மனதைத் தொட்டு விட்டது இந்தக் கட்டம்.

சற்று நேர இன்பப் போதைக்குப் பின் தலை நிமிர்ந்ததும், எதிரே மேஜையின் மீது கிடந்த, நேற்று முன் தினம் பறித்த, ரோஜா மலரின் வாடிய தோற்றம் என் மனப் பரிதியைத் தட்டி விட்டது:—

'..........ஏ! ரோஜாவே! உன்னை இன்று விரும்பி வரவேற்பவர் யார்?

வேலியின் முட்களுக்கிடையில் உன்னை அணைந்து நாள் முழுவதும் நிற்கும் நறுமணத்தைக் கவர்ந்து செல்லும் தென்றல் இன்று இனிமையில்லை என்று ஏகிவிடும்!

ஒளி மலர்ந்ததா, மலர் ஒளிர்ந்ததா வென்று மயங்குமாறு உன் அழகிய உடலில் தன் அழகைச் சேர்க்கும் கதிரவன் இன்று உனக்கு ஒளி தராது செல்வான்!

செம்மை விளங்கும் உன் மேனியில் தங்கி வெண்மையாய் இருந்தும் செந்நிறம்பெற்ற உன்னை நினைத்திடும் பனித்துளி இன்று விழுந்தால் உன்னைத் தொடவே இருண்டுபோகும்!

வேனில் பொறுது உன் தூய இதழில் தன் மென்கால் நீட்டி, அமரும் ஈ, இன்று அமர்ந்தால் வெறுத்து உன்னை விட்டு அகலும்!

உயிரற்றது என்று மயங்குமாறு உன் தேன் மாந்திய மகிழ்வால் உன் மேனியில் அயரும் தேனீ இன்று வந்தால் உன்னைக் கண்ணெடுத்தும் பாராது!.....' சிந்தனைப்புரவி மேலும் பாய்ந்து செல்வதற்குள் என் மனக்கண் கவியின் ஆழத்தை மறுமுறை காண அவ்வரிகளை நாடிச் சென்றது.

'என் மாயக்காதலி வந்தனள்
என் மலரைப் பெற்று ஏகினள்
முள்ளே என்னிடம் எஞ்சி நிற்கும்'

'மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம்' என்ற பாரதிவாக்கை நிதர்சன மாக்கியது இந்த வரிகள். என்ன தான் மந்திரமிருந்ததோ? திரும்பத் திரும்பப் படித்தேன் 'எஞ்சி நிற்பது முள்' என்ற அந்த வரியை மாத்திரம்.

ஆம்! வாஸ்தவம்! கவி தீர்க்க தரிசியே!

* * *

அன்றைக்கு நான் சுதந்திரன். காலச் சக்கரம் திரும்பிச் சுழல வாரம்பித்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்சென்றால் அந்தக்காட்சி காணக் கிடைக்கும். கல்லூரிப் படிப்பு முடிந்ததும், கிராம மோஹம் பிடித்து ஊர் சுற்ற வாரம்பித்தேன். அப்பொழுது என் தகப்பனார் நல்ல நிலைமையிலிருந்தார். மிகவும் படித்தவர். ஆங்கில மோஹம் கிடையாது. சங்க இலக்கியங்களில் பாண்டித்ய மதிகம். என் மனம்போன போக்கிலேயே என்னை விட்டு வைத்தார்.

முதலில், அரசியலை நாடியது என் மனம். ஆனால் இது அதிககாலம் நீடிக்கவில்லை. அரசியல் துடிதுடிப்பு, தாய்மொழிப்பற்றில் கொண்டு விட்டது. பிறகு இலக்கிய ஆராய்ச்சி. கடைசியில், காவ்யரசனையில் வந்து தங்கியது. இன்று ஆங்கிலக் கவியை ரஸிக்கிறேனே, அன்று தமிழன்றிப் பிறிதொரு பாஷையில் கவியே இருக்கமுடியாது என்று வாதித்த காலம்.

தென்னைமரத் தோட்டங்களிலும், ஆற்றுப் படுகைகளிலும், வயல்வெளிகளிலும், என்னதான் காணக்கிடைக்குமோ? நாள்தோறும் சுற்றி யலைவேன் ஏதோ ஒன்றைத் தேடித் திரிவதேபோல். சத்திரம் சாவடிகளில் சாப்பாடு. இரவுநேரங்களில் இயற்கையன்னையின் எழில் மடியில் ஆநந்த நித்திரை புரிவேன். நாதர் முடிமேவிருக்கும் வெண்ணிலவே என் தோழி. தூக்கம் வராத வேளைகளில் அவளுடன் அளவளாவ ஆரம்பித்துவிடுவேன். காவ்ய ரஸனையைக் கனிவுடன் ஊட்டியவளும் அவளே........ இந்த மாதிரி எவ்வளவு நாட்களோ? எவ்வளவு கிராமங்களோ?

* * *

'வாழ்வில் விரக்தி யடைந்தவனோ? ........அரசியல் தொண்டனோ?........ அல்லது எத்தகைய மஹானோ?........ எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். அவர் வாய் திறந்து ஒரு வார்த்தை சொன்னால் நம் மனம் குளிர்ந்து விடுகிறதே? இதுதான் நான் எதிர்ப்பட்ட மக்கள் பேச்சு.'

சலசலவென்ற நீரோடையைப் போன்ற, கிராம மக்களின் தெளிந்த உள்ளத்தை, அவ்வளவு தூரத்துக்கு வசீகரிப்பது எளிதாகவே முடிந்தது. நாளடைவில் என் 'இலக்கிய ரஸனைக் குழு' ஒன்று ஏற்பாடாகியது. மாலை நேரங்களில், ஆற்றங்கரை மணலில்,



RETAIL BRANCHES:
285, China Bazaar Road G.T.
71, Pondy Bazaar, T.Nagar.

கிராமத்து வாலிபர்களில், இருபது முப்பது பேருக்குக் குறையாத சபை கூடும். ஒருநாள் சிலப்பதிகாரம்.... ஒருநாள் ஜீவக சிந்தாமணி........ஒரு நாள் மணிமேகலை........எனக்குத் தெரிந்த சில ரஸமான அநுபவங்களை, எளியமுறையில் எடுத்துக் கூறுவேன். அவர்களுக்கிருந்த தமிழறிவைக்கொண்டு அவர்கள் இலக்கியத்தை ரஸித்தது பெருத்த ஆச்சரியமே. கூட்டம் அதிகரிக்கவே குறள் வகுப்பு....கம்பராமாயண வகுப்பு........ இலக்கிய ஆராய்ச்சி, விவாதங்கள்.... எல்லாம் முறையே ஏற்பாடாயின.

ஆனல், இவ்வளவுக்கு மிடையில் ஒரே இடத்தில் அதிககாலம் தங்க நேரிட்டால் விருப்பு வெறுப்பற்ற நடுநிலைமையிலிருந்துகொண்டு தொண்டு செய்ய முடியாது என்ற எண்ணம் ஆழமாகப் பதிந்துவிட்டது.

* * *

'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது' என்ற பழமொழி என்வரையில் உண்மையாகிவிட்டது. பரதபுரத்தில் அடி எடுத்து வைத்ததும் என் பிரயாணத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிவரும் என்ற எண்ணம் மாத்திரம் ஏனே எனக்கு முன்னரே தோன்ருமல் போய்விட்டது. மலைகளும், காடுகளும், அருவிகளும், நீர் வீழ்ச்சியும், நிறைந்த இடம் என் சிந்தனைக்கு நல்ல உணவு என்று நினைத்துக் கொண்டே ஊரை நெருங்கினேன். அந்திவிந்தைக்குமரன், மேலைத்திசை வானக் கோட்டை யடையுங் காலம். மலையடிவாரத்தில் நெருங்கவும், அப்படியே நீர் வீழ்ச்சியைத் தடுத்துக் குடித்து விடுபவன்போல், வைத்த கண் வாங்காமல் நின்றுகொண்டிருந்த ஒரு எழிலுருவம் என்மனதை ஆகர்ஷித்தது. சங்க இலக்கிய ஆராய்ச்சியில்கூடக் காண முடியாத ஒருஇன்பப்போதை; ஒருகணம், மந்திரத்தால் கட்டுண்ட கருநாகம்போல் அசைவற்று அயர்ந்தேன்.

என் நினைவு வந்து மறுமுறை நிமிர்ந்து நோக்குவதற்குள், அவள் சாலை வழியே நடந்து செல்ல வாரம்பித்து விட்டாள். என்னை யறியாமல் என் கால்களும் நடந்தன! சிறிது தூரத்துக்கப்பால் ஒரு சோலை நடுவிலிருந்த பர்ணசாலை போன்ற ஒரு குடிசையில் நுழைந்து மறைந்தாள்.

வெளியே சாலையிலிருந்த படியே குடிசையைக் கவனித்தேன். எளிய குடியானவர் குடிலே போலிருந்தது. குடிசையைச் சுற்றித் தோட்டம் நந்தவனம் போன்றிருந்தது அதன் நடுவிலிருந்த ஒரு மணல் திட்டில் கையில் புத்தகத்துடன் ஒரு கிழவர் வீற்றிருந்தார்.

நான் சிறிது யோசித்தேன். 'அங்கு போனல் நன்ருயிருக்குமா?.... ஏன்? இன்று இரவுச் சாப்பாட்டுக்கு வேறுவழி? ....அவர்கள் தவருக நினைத்து விட்டாலோ?....இல்லை! இல்லை! அவர்கள் என்ன வேணுமானுலும் நினைத்துக் கொள்ளட்டும். என் இன்பராணியை மறுமுறை காணுது....சேசே!....அவள் யார்?.... நான் யார்?....எதற்காக இந்தப் பாழும் மனம் கிடந்து துள்ளுகிறது?

* * *

அறிவுக்கும் உணர்ச்சிக்கும் நடந்த போராட்டத்தில் வெற்றி உணர்ச்சிக்கே!

புஸ்தகத்தைக் கீழே வைத்துவிட்டு மகிழ்ச்சியினல் தழு தழுத்த குரலுடன், 'ப்ரமீளா! ஏழை நம் குடிலை நாடி உலகம் போற்றும் உத்தமர் ப்ரேமானந்தரே வந்திருக்கிருர்?' என்ற கிழவரது வார்த்தைகள் என் மனத்தில் ஒருங்கே ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் வாரியிறைத்தன.

'ப்ரேமானந்தரா?....என்ன பாக்கியம்!' என்று இசைத்துக்கொண்டே ப்ரமீளா ஓடி வந்து நமஸ்கரித்து எழுந்து நின்றது என் மனதை வர்ணிக்க இயலாத போதையில் ஆழ்ந்தியது.

மதி மயங்கி நின்ற என் நிலையில், சம்பிரதாயமான பேச்சுக்கள், வரவேற்புகள் எல்லாம் இயந்திரம்போல் நடந்தேறின.

இரவு போஜனம் முடிவதற்குள்ளாக நான் தெரிந்து கொண்டது இவ்வளவு தான். ப்ரமீளாவின் தந்தை நல்ல அந்தஸ்துடையவர். உடல் நிலை காரணமாக இயற்கைக்—காற்றுக்காக இங்கு வந்து வசிப்பவர். தந்தையும் தனயையும் இலக்கியத்தில் பரிச்சயமுடையவர்களே! என்னைப்பற்றி எனக்குத் தெரிந்ததைவிட அவர்கள் அதிகம் தெரிந்து கொண்டிருந்தார்கள்!

வெண்ணிலவில் சபை கூடியது. விருத்தரான ப்ரமீளாவின் தந்தை மௌன குருவாக வீற்றிருந்தார். விவாதம் ஆரம்பமாயிற்று.

ப்ரமீளா:—'அரசியலைப் போல் இலக்கியத்தையும், பிரசாரத்தின் மூலம் விருத்தி செய்யலாமென்பது தங்கள் சித்தாந்தமா?'

நான்:—'பிரசாரம் இலக்கியத்தை விருத்தி செய்யாது! மொழிப்பற்றை வளர்க்கலாம் இயக்கிய ரஸனையை உணர்த்துவதன் மூலம்?'

ப்ரமீளா:—'பிரசாரத்தின் மூலம் ரஸனையையாவது புகட்டலாமென்று கருதுகிறீர்களல்லவா?'

நான்:—'புகட்டுவதற்கிடமில்லை! நான் சுவைப்பதை, 'உன்னாலும் சுவைக்க முடிகிறது? பார்!' என்று சொல்லலாமல்லவா?'

ப்ரமீளா:-'மன்னிக்கவும்! தானுகப் பழுக்காததை ....................'

நான்:—'இல்லை ப்ரமீளா! அது வல்ல என்முயற்சி. கரும்பைச் சுவைக்கும் பொழுது, வாய் திறந்து அதன் இனிப்பைப் போற்றுதே என்றால் என்னால் முடிகிறதில்லை. இலக்கியத்துக்கு என் வாழ்வை யளித்து விட்டேன். இனி எனக்குத் தெரிந்ததை அல்லது தெரிந்ததாகத் தோன்றுவதைச் சொல்லிக்கொண்டு தான் போகப் போகிறேன். உலகம் உவந்து ஏற்குமா வென்பதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.'

இதைக்கூறி நிறுத்தியதும், 'ஏன்! நானிருக்கிறேனே! உன் வாழ்வாகிய இலக்கிய மதுவையே அள்ளிப் பருக' வென்ற ப்ரமீளாவின் குறும்புப் பேச்சு அப்பொழுதைக்கு என் மனதில் ஒருவித களங்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

* * *

காலைக்கன்னி, தன் கனிவு முகங் காட்டினள். புட்கள் எழுந்து உதய கானம் செய்தன. கூடிப்பேசிக் குலாவின. 'ஜிவ்! வென்று.

நீல வானில் பறந்து சென்றன. 'பொழுது புலர்ந்தது' என்ற பாரதியாரின் தீங்கவிதை, காற்றிலே மிதந்துவந்த கீதம்....மணல் திட்டில் மௌன நிஷ்டையிலிருந்த வென்னைத் தட்டி எழுப்பியது. பாடியது ப்ரமீளாவாகத்தானிருக்கவேண்டுமென்று முடிவு கட்டியது மனம். ஏதோ ஒரு அர்த்தமற்ற பெருமூச்சு!

'ப்ரபோ!'.......(சிந்தனை கலைந்து எழுந்தேன்.)

'யார்? ப்ரமீளாவா?'

'ஆம்! என்ன கனவா?'

'கனவேதான்! ஆனல், அது நனவாகிவிடக் கூடாதா?'

'ப்ரபோ! யாரைப்பற்றிய இன்பக் கனவு? அடியாளுக்குத் தெரிவிக்கக் கூடாதா!'

'ப்ரமீளா! ப்ரமீளா! ஏன்?........ என்....அன்புத்....தேவியைப் பற்றியதுதான்.'

'தங்கள் தேவியா ப்ரபோ! அந்த ....அந்த பாக்கியம்!................அதற்கு மேல் பேச முடியாமல் பெருங்காற்றில் சிக்குண்ட பூங்கொடிபோல் துவண்டு சரிந்தாள்.

நான் சற்று நகர்ந்து எனக்கும் அவளுக்குமிடையே ஒரு முல்லைப் புதர் குறுக்கிடும்படியாகப் பார்த்து உட்கார்ந்தேன்.

'ப்ரமீளா! இதைச் சொல்ல என் நா தழு தழுக்கிறது! நேற்றிரவு நீ சென்றபின் என் மனத்திடைத் தோன்றிய புயலின் வேகத்தை அளவிட முடியுமா? இன்றுவரை என் உள்ளம் தனித்து நின்றது!....இனி அது சாத்யமில்லை! உணர்ந்துவிட்டேன்! ஏன்? நேற்றே அந்தப் புயலுக்குப் பின்னர் நிலவிய அமைதியில் என் உள்ளத்தில் மற்றொரு உள்ளம் ஐக்யப்பட்டுவிட்டதே!'

இந்த அருமையான கட்டத்தில் குறுக்கிட்டது தந்தையின் குரல்.

குடிசைக்குள் ஓடியொளிந்தது என் நடமாடும் தெய்வம்.

* * *

'தேவி! தாங்கள் என்ன கற்சிலையாகிவிட்டீர்களோ?' வெனச் சந்தேகித்தேன்.'

'ப்ரபோ! தாங்களா? வெகுநேரம் காக்க வைத்துவிட்டேனே?'

'ப்ரமீளா! சூழ்நிலையை மறக்கும்படியான அந்தச் சிந்தனை எதைக் குறித்ததோ?'

'ப்ரபோ! ஆழந்தெரியாது காலை விட்டுக்கொண்டுவிட்டேன். தாங்கள் தான் கரையேற்றவேணும்.'

'ப்ரமீளா! அதுதான் தேவிக்குக் கஜேந்திர மோக்ஷ அபயமளிப்பதற்குத் தேவன் வந்து காத்திருக்கிறேனே! விஷயத்தைச் சொல்.'

'ப்ரபோ! அது ஒரு நீண்ட கனவு!'

'என்ன? இவ்வளவுதானா?'

'இல்லை ப்ரபோ! கனவல்ல! காதல்! ஆம்! காதலைத் தேடியலைந்தேன்!'

'ப்ரமீளா! எங்கெங்கு தேடினாய்?'

'நான் தேடாத இடம் கிடையாது ப்ரபோ! இயற்கை அன்னையின் எழில் மடியில் எங்கெங்கோ தேடினேன். புதரடர்ந்த குன்றில் தேடினேன். மலையுச்சியில் தேடினேன். நீர் வீழ்ச்சியில் தேடினேன். மரமடர்ந்த காட்டில் தேடினேன். தெளிந்த நீரோடையில் தேடினேன். மணல் திட்டிலும் மலர் நிறைந்த ...............'

'ப்ரமீளா! புறமெல்லாம் தேடினாயே, உன் அகத்தில் தேடினாயோ?;

ஒரு நீண்ட பெருமூச்சு. அதுதான் எவ்வளவு அர்த்தமுடையதாக விளங்கியது....பேசாத பேச்சு!....

'ப்ரபோ! இருள் நீங்கிற்று! மனத்திரை விலகிற்று! அகக்கண் திறந்தது! ஒளி அருள் பிறந்தது! ஒன்றுபட்டுவிட்ட நம் உள்ளப் பிணைப்பை இனி அன்னை சக்தியாலும் பிரிக்க முடியாது!'

'ப்ரமீளா! இப்பொழுது மறுமுறை தேடு. இதய கீதத்தைப் பருகிவிட்ட நீ இனி இயற்கையில் கவியும் காதலையும் பருகமுடியும்.'

இதுபோன்ற மனோகரமான மாலைகள், இன்ப இரவுகள் எவ்வளவோ? பேச்சு மூச்சற்று ஆழ்ந்துவிடுவோம் சிலகாலம். தலைபோவதுபோல் விவாதிப்போம் சிலகாலம். வார்த்தைகளில்தான் என்ன சுவை! இதயத்திலுள்ள அன்பில் தோய்ந்து ஈரத்தோடு வெளிப்படும் வார்த்தைக் கனிகளல்லவா? இனிக்காமல் என்ன செய்யும்?

இவ்வளவுக்குமிடையில், எங்கள் பந்தம், உள்ள ஒருமைப்பாட்டோடு நின்றுவிட்டது. காட்டுத் தீ எங்களை ஒன்றும் செய்வதற்கில்லை. ஞானத் தீ எரித்துவிட்டது எங்கள் செயலை.

* * *

மொட்டு மலரும் தருணத்தில் சென்றுவிட்டேன். மன நெகிழ்ச்சிக்கு மருந்துதேடப்போய், கிளர்ச்சி மேலும் அதிகரித்தது. கையில் ஒரு மலர்ந்த ரோஜாவைப் பறித்து வைத்துக்கொண்டே, மலராத மொட்டே கிடையாதாவென்ற சிந்தனையில் சிறிது போழ்து லயித்தேன்.

திடீரென்று தளிர் விரல்கள் என் கண்களைப் பொத்தியதும் என் கனவு கலைந்தது. ஏதோ ஒரு புது அநுபவம் அவளை நிமிர்ந்து நோக்குவதைத் தடுத்து நிறுத்திவிட்டது.

மலரை என்கையிலிருந்து பிடுங்கிக் கொண்டே, 'ப்ரபோ! நான் போய் வரட்டுமா?' என்றாள்.

'ப்ரமீளா! நீ எங்கு போய்விடப் போகிறாய் என்மனதை விட்டு! அதிருக்கட்டும்.

நீ மலராத மொட்டைக் கண்டதுண்டா?'

'ப்ரபோ! மன்னிக்கவும். தாங்கள் பாடாதவண்டைப் பார்த்ததுண்டா?'

'தேவி! என்னால் கீதமற்ற இதயத்தைக் காணமுடியாது!'

'ப்ரபோ! என்னால் இதயமற்ற மனிதரைக் காண முடியாது!'

........இதற்கு முற்றுப்புள்ளி வைத்தது தந்தையின் அழைப்பு. 'ப்ரமீளா! கொஞ்சம் தண்ணீர் எடுத்துக்கொடேன்?


# MEHTA'S SPECIALITIES

***Well-known for their efficacy and Medicinal values***

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

*Stocked by all important Chemists & Druggists of South India*

## K. S. MEHTA & CO.

**250, China Bazaar, MADRAS.**

....மின்னல்தோன்றி மறைந்தது. என் மாயக்காதலி மலரைப்பெற்றுச் சென்றுவிட்டாள். அவசரத்தில் பிடுங்கியதில் முள்தான் என் விரலில் தைத்து நின்றது.

*  *  *

காலதேவனுக்கு என்னவோ பொருமை! இந்த நாடகத்துக்கு அதிக ஆயுள் கொடுக்க விருப்பமில்லை போலும். ஆனல், அவனுடைய செய்கை எங்கள் காதலை அமரத்துவமடையச் செய்தது என்ருல் அவன் ஒப்புக்கொள்வான?........

சோதனையில் முதற் பகுதி. அன்றைய கொடிய இரவு என் ப்ரமீளாவின் உடலை என்னிடமிருந்து பிரித்துச் சென்றுவிட்டது!....வெளியே, மணலில் துண்டை விரித்துப் படுத்திருந்த என்னைத் தந்தையின் சோகக்குரல் எழுப்பியது. ஆனல் என்னுடைய தூங்கியஉள்ளத்தைத் தட்டி எழுப்புவதற்குள் அங்கு காரியம் மிஞ்சிவிட்டது! கொடிய விஷப்பாம்பு தீண்டி கருநீலம் படர்ந்துவிட்ட அவளது துவண்டமேனி, உயிர் உடலைவிட்டுப் பிரிந்து எவ்வளவோ நேரமாகிவிட்டதென்பதையே காட்டியது.

அன்றும்.... அந்த....விடியா இரவும் ....விடிந்தது! ஆனல், உதயகீதம் இன்று ஒலிக்கவில்லை.

சோக சம்பவங்கள் தனித்து வருவதில்லையென்பது என் வரையில் உண்மையாகிவிட்டது. பதினைந்து தினங்களாக வராமலிருந்த தபால்காரன் அன்று ஏன் வரவேண்டும்? இதுதான் விதியோ?...................

'தந்தை மரணப் படுக்கையிலிருக்கிருர் உடனே புறப்படவும்.' இதற்கு மேல் தந்தியில் என்ன இருக்கப் போகிறது?

திரும்பி விருத்தரைப் பார்த்தேன். உள்ளக் குமுறலை வெளிக்காட்டியது இரண்டு சொட்டு இரத்தக் கண்ணீர் தான்!

—மனப் பேய் விரட்டியடிக்க என் கிராமத்தை நோக்கிக் கிளம்பினேன். அங்கும் நான் செல்வதற்குள் காரியம் முடிந்து விட்டது...இனி யென்ன?—

குறிஞ்சி நிலத்திலிருந்து பாலை நிலத்தில் தூக்கிப் போட்டுவிட்டது என்னை விதி என்ற கொடிய நியதி!....

..............................................................

மறுமுறை ரசித்தேன் அந்த வரிகளை....ஏன்? பலமுறை ரசிக்க ஆரம்பித்து விட்டேன்!

'என் மாயக்காதலி வந்தனள்
என் மலரைப் பெற்று ஏகினள்
முள்ளே என்னிடம் எஞ்சி நிற்கும்?

சித்தப்பா! எவ்வளவு தடவை கூப்பிடுவது? இந்தப் பழக்கமான குரல் என்னைச் சற்று திரும்பச் செய்தது. ரோஜா மலரின் வாடிய தோற்றம் பரிதாபகரமாக விருந்தது! ஏனே அதன் சோகத்தில் அதற்குச்சமாதானம் கூறவேண்டுமென்று வற்புறுத்தியது என் மனம்.

எழுந்து மலரைக் கையில் பற்றினேன்.

ஏ! ரோஜாவே! இதயம் மாத்திரம் தான், இன்றும், என்றும், உன் நண்பன்!

அது தன்னந் தனியாக உன்னை மறவாமல் இருக்கும். உன்னை மறைக்கும் உன் மாறுதலை அறியினும் இன்னும் உன் நறுமணம் நுகரும். உன் அழகைக் காணும்! நீயே பூரணம் என்று துணியும்.

---

# அழகின் சிறப்பு

## சருமசுகத்தின் மகிமையே






உங்கள் வசீகரம் பெரும்பாலும் மேனியழகை பொறுத்திருக்கிறது. மேனியழகு சருமசுகத்தினால் மட்டுமே ஏற்படுகிறது. சருமத்தைப் போஷிக்கும் குணமுடையதும் ஆன்டிஸெப்டிக்குமான தைலங்கள் சேர்ந்துள்ள கேடில் ரெக்ஸோனாவில் அடங்கியிருப்பதால் அது சருமத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதுமல்லாமல் சரும அழகு ஏற்படவும் உதவுகிறது. அதிசீக்கிரத்தில் தாராளமாயுண்டாகும் ரெக்ஸோனாவின் நுரை சருமத்திற்குள் சுகமளிக்கும் கேடிலை சேர்த்து ஆற்றலுடன் அழகையும் கொடுக்கின்றது. கேடில் கலந்துள்ள விசேஷமான சோப் இது ஒன்றே. அதனாலேயே, சருமத்தை மச்ச மறுக்களிலிருந்து பாதுகாத்து ஆரோக்கியத்தையளித்து ஒவ்வொரு மங்கையும் விரும்பும் மேனியழகைத்தரும் குணத்தை இச்சோப்புப் பெற்றிருக்கிறது.

ஆரோக்கிய மிகுதியால் சோபையடையும் சருமத்தை முக்கியமாகக் கருதும் ஆடவர்கள், ரெக்ஸோனாவின் சுறுசுறுப்பளித்து சக்தியை ஊட்டும் திறமையை மெச்சுவார்கள். சுகமான சருமமேற்பட விரும்பும் ஆடவர்களுக்கு, ரெக்ஸோனா இன்றியமையாதது என்று உண்மையாக சொல்லலாம்.

குழந்தைக்கு ரெக்ஸோனா: குழந்தையின் மெல்லிய சருமத்தில் புண்கள், சினைப்புகள் ஏற்பட வழியுண்டு. ரெக்ஸோனாவின் மருந்து சேர்ந்த நுரை சிறு கைகால்களை சாதாரண சரும வியாதிகளிலிருந்து காப்பாற்றுகிறது.

★ ரெக்ஸோனாவிலுள்ள கேடில், ஆன்டிஸெப்டிக்கும் சுகமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ கலப்பு மருந்து. இம்மருந்து சருமப் பாதுகாப்பிற்கு ரொம்பவும் உத்தமமானது.

# சருமசுகத்திற்கு ரெக்ஸோனா



REXONA PROPRIETARY LIMITED

# பாரதி கண்ட கலைமகள்

வி. ஜி. ஸ்ரீநிவாஸன்

"தாமரைப் பூவினிலே—சுருதியைத்
தனி இருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே கண்ணில் ஒற்றிப்
புண்ணியம் எய்திடு வோம்"

—கவி பாரதியார்.

ஓவியர் மணி ரவிவர்மா தீட்டிய சரஸ்வதி படம் இல்லாத இந்துக்கள் வீடே இல்லை என்னலாம்; அல்லது ரவிவர்மா சரஸ்வதியைப் பார்த்திராத இந்து இருக்கமுடியாது. இது பொய்யல்ல. இயற்கையழகின் நடுவே தாமரைக்குளம் ஒன்று. அதிலே அன்னங்கள் நீந்தி விளையாடும். குளத்தருகே பெரும்பாறை. அதன் மீது 'வெள்ளைக் கலையுடுத்த' கலை மடந்தை கால்மேல்காலிட்டு உட்கார்ந்திருப்பாள். இரு கரங்கள் வீணை இசைப்பதில் ஈடுபட்டிருக்கும். ஒரு கையில் சுவடி; மற்றொரு கையில் ஜப மாலை. அருகே மயில் நிற்கும். இப்படிப்பட்ட ரவிவர்மா படத்தை நாம் அனைவரும் பார்த்துத்தான் இருக்கிறோம். தவிர, திறம் நிரம்பிய கலைஞர் பலர் தம் கற்பனைக்குத் தக்கவாறு கலைமகள் உருவத்தைத் தீட்டியிருக்கின்றனர்.

'ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும்' சரஸ்வதி தேவியைப் பற்றி அருட் கவிஞராகிய காளிதாசன், கம்பன், குமர குருபரர் தெள்ளிய பாடல்கள் புனைந்திருக்கின்றனர். ஏன், 'வெண் தாமரைப் பதி மெல்லியலாள்' தன் புகழ் பரவாத பாரதக் கவிஞனே கிடையாது.

ஓவியர் ரவிவர்மாவின் சித்திரம், பழம்பெரும் கவிஞரின் தோத்திர மாலை எல்லாவற்றையும் தாண்டி நிற்பதுவே பாரதியின் கவிதை!

கவி பாரதி வருணிக்கும் கலைமகளை ரவிவர்மா படத்தில் காணமுடியாது. எந்த ஓவியனும் தீட்டமுடியாத சொல்லோவியமாக அமைந்துள்ளது பாரதி கண்ட கலைமகள், பாரதி பரவுகின்ற புகழ்முறை தனிப்பட்ட பாணியைக் கொண்டது. "சியாமளா தண்டகம்", "சகல கலா வல்லி மாலை", "சரஸ்வதியந்தாதி" எல்லாவற்றையும் தாண்டித் தனிப்பட்ட சிறப்புடன் விளங்குகின்றது பாரதியின் வருணனை,

வெண்தாமரை மலர் தனில் அமர்ந்து விளங்கும் கலைமகள்தனை கவி பாரதியார்,

"வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்"
"வெள்ளைக் கமலத்திலே—அவள்
வீற்றிருப்பாள் புகழ் ஏற்றிருப்பாள்"
"வெள்ளை மலர்மிசையே
வேதக்கருப் பொருளாகிவிளங்கிடுவாய்"

என்று கொள்கிறார். "ச்வேதபத்மாஸனி"யாகிய தெய்வம் "யா வீணா வரதண்ட மண்டித கரா" என்ற தன்மையை,

"கொள்ளைக் கனியிசைதான்—நன்கு
கொட்டுநல் யாழினைக் கொண்டிருப்பாள்"

என்று சொல்வதில் அழகுபடத் தெரிவித்துள்ளார்.

இனிவரும் கலைமகள் வருணனையைப் பற்றிப் பார்ப்போம். கலைமகளை அங்கம் அங்கமாகப் பரவும் பாரதியின் சொல்லோவியத்தைக் கற்

பனைக் கண்கொண்டு தேர்ந்து மகிழலாம்.

தூய்மை, அமைதி, புனிதம் மூன்றினுக்கும் உறைவிடமான வெண்தாமரை மலர் மீது வீற்றிருக்கும் கலைமகள் கீர்த்தி சால் ஞானமூர்த்தி. அவளது திருக்கரங்களைச் சார்ந்து சிறக்கும் வீணையோ ரஸபரிதமான கீதங்களைப் பொழிவது.

கலைமகளின் திருவிழிகள் சதுர் வேதங்களே! வேதங்கள் செறிந்த பொருளும், ஆழ்ந்த கருத்தும் கொண்டவை; மறைபொருள் உடையனவே. கலைமகளின் நீலக் கரு விழிகளும் அவ்வாறே. கண்களில் தீட்டப்பெற்ற கருமையே விரிவுரைகள். அவளது சுடர் நெற்றி அமுத கிரணங்கள் தெளிக்கும் சந்திரனே; நெற்றியில் கவிந்து பின்னுகை அடர்ந்து, நீண்டு, நெருங்கி வளர்ந்த கருங்கூந்தல் சிந்தனை சக்தியே! வாதம், தர்க்கம் என்ற இரண்டும் அவளது இரு செவிகள். நேர்மை கொண்ட நல்ல துணிவு தான் காதணிகள். எள்ளுப் பூப் போன்ற அவளது மெல்லிய நாசி அறிவு. கலைமகளின் திருமுகத்திலிருந்து பொங்கிப் பொங்கிப் பெருக்கெடுத்தோடும் பல பனுவல்கள். ஆம், 'உற்ற கலைமடந்தை ஓதுகிருள்'!

"வேதத்திரு விழியாள்—அதில்
மிக்கபல் உரையெனும் கருமையிட்டாள்;
சீதக்கதிர் மதியே—நுதல்;
சிந்தனையே குழல் என்றுடையாள்;
வாதத்தருக்க மெனும்—செவி
வாய்ந்தநல் துணிவெனும் தோடணிவாள்;
போதமென் னுசியினுள்—நலம்
பொங்குபல் சாத்திர வாயுடையாள்"

கண்களின் அளவையும், அழகையும் நன்கு எடுத்துக் காட்டி எல்லை கோலுவது அவற்றில் தீட்டப்படும் மையே! அளவிற்கு மீறித் தீட்டிவிட்டால் கண்களின் அழகு கெடும், விகாரமாக இருக்கும். அளவு, அழகு இவற்றை ஓர்ந்து மிதமிஞ்சிப் போகாதவாறு உரைகளை எழுதவேண்டும் என்பது கருத்து.

கலைமகளின் உதடுகள் கற்பனை யென்ற தேன் பொருந்தியவை. உருண்டு திரண்டு புடைத்துப் பருத்து ஓங்கி முன்னிற்கும் அவளது ஸ்தன பாரங்களோ நவரஸங்களை ஒருங்கு ஊட்டும் உத்தமக் காவியங்கள். அவளது கைகள் நான்கு என்று நினைத்து விடவேண்டாம். அறுபத்து நான்கு கலைகளும் அவளது அறுபத்து நான்கு திருக்கரங்கள் தாம்! கலைமகள் அமர்ந்திருக்கும் "ச்வேத பத்மாஸனம்" தனிப்பட்ட பெருமையும், விசேஷமும் கொண்டது. அவள் இடம் கொண்டது வெள்ளைத் தாமரைப் பூவல்ல, நான்முகனின் நாவுமல்ல! சொல் நயம், அழகு, பொருள் ஆழம் முதலியன தெரிந்து அடுக்கடுக்காக அழகழகாக வார்த்தைகளைப் பொறுக்கிச் சேர்த்துக் கோத்துக் கவிமாலை புனைகிறார்கள் அல்லவா உண்மைக் கவிஞர், அவர்களது நாவினைத்தான் அவள் தனது இருக்கையாகக் கொண்டுள்ளாள். தாமரை இதழாகத்திகழும் ஒவ்வொன்றும் அந்த மேலவர் நாவே.

"கற்பனைத் தேனிதழாள் சுவைக்
காவியம் எனுமணக் கொங்கையினுள்;
சிற்பமுதற் கலைகள்—பல
தேமலர்க் கரமெனத் திகழ்ந்திருப்பாள்:
சொற்படு நயமறிவார்—இசை
தோய்ந்திடத் தொகுப்பதின் சுவையறிவார்
விற்பனத் தமிழ்ப்புலவோர்—அந்த
மேலவர் நாவெனும் மலர்ப்பதத்தாள்"

தமது கற்பனை விசேஷத்தால் கலைமகள் வருணனையை இசைபடத் தொகுத்துக் காட்டிய கவி பாரதியார் நமக்கு வானவில்லின் ஏழு நிறங்களுக்கு மேல் ஓர் தனி நிறம் காட்டுவது போன்ற உணர்ச்சி ஏற்படு

கிறது; நவரஸத்திற்கு மேலும் ஒரு 'நவ' ரஸம்போல் இனிக்கிறது. சொல்லோவியத்தை அனுபவிக்கலாம், கற்பனையில் கண்டு மகிழலாம். ஓவியமாகத் தீட்டிவிட முடியுமா என்ன!

ஞானத்திருவுருவாகி விளங்கும் கலைமகள் எப்படிப்பட்ட தெய்வம்? யார் யாருக்குத் தெய்வம்? நேர்மையான முறையே உழைத்து, நியாயமான ஊதியம் பெறும் அனைவர்க்கும் இவளே குலதெய்வம், போரிலே உபயோகமாகும் ஈட்டி, வாள் முதலியன வடித்துக் கொடுக்கும் கொல்லர், திறங்கொண்ட சிற்பியர், தச்சர், வியாபாரிகள், வீரம் செறிந்த விரல் வேந்தர், வேதியர் அனைவரும் இவளையே தஞ்சம் அடைகின்றனர். அப்படிப்பட்ட அறிவுத் தெய்வம் இவள்!

"வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழு மாந்தர் குலதெய்வ மாவாள்;
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்,
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்,
மிஞ்ச நற்பொருள் வாணிகம் செய்வோர்,
வீரமன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடும் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம்"

இந்த ஞானசக்தி தெய்வம் நமக்கு எல்லாவற்றையும் உணர்த்தி வைப்பாள். கெடுவழிகளைக் காண்பித்து, விலக்கித் திருப்பி நல்வழிப்படுத்துவாள். 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற எடுப்பான கொள்கை பூண்டு முயல்பவருக்கு உறுதுணை இவள்தான். காரியத்தின் நேர்மையான போக்கையும், வெற்றிகரமான முடிவையும் எதிர்பார்த்துச் செயலில் இறங்குவோரின் 'உயிருக்கு உயிர்' இவள், 'ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும். அது நன்கு அழகாக உருப்படவேண்டும்' என்று நம்புவோரும் இவளையே பணிவார்கள். பாட்டாளி மக்களுக்கும் இவளே தெய்வம். 'கள்ளையும் தீயையும் சேர்த்து, காற்றையும் வானவெளியையும் சேர்த்து, பூங்கவிதை இசைக்கும் கவிஞரின் தெய்வமும் இவள்தான். இது மட்டுமா? 'விண்கண்ட தெய்வம் பல கோடி'க்கும் இவள்தான் தெய்வம்! ஆம், இவள் தேவ தேவி! மகாதேவி! அயன், அரி, அரன் மூவரும் வழிபடுகின்றனர் இந்த அறிவுத் தெய்வத்தை!

"தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்;
தீமை காட்டி விலக்கிடும் தெய்வம்;
'உய்வம்' என்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்;
'செய்வம்' என்றொரு செய்கை எடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடும் தெய்வம்;
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்;
கவிஞர் தெய்வம்; கடவுளர் தெய்வம்"

["யா பிரம்மாச்சுத சங்கரப் ப்ரப்ருதிபிஹி" என்ற வடமொழிக் கருத்தையும், "விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல் கண்கண்ட தெய்வமுளதோ?" என்ற குமரகுருபரரின் தீந்தமிழ் வாசகத்தையும் தேரவும்.]

இத் தலைமகளாகிய கலைமகள் எங்கிருக்கிறாள், எங்கு வாசம் செய்கிறாள், எங்கு ஆனந்த நடனம் ஆடுகிறாள்? அவளை எங்கே காணலாம்? ஓவியர் தீட்டும் சித்திரத்திலா? புத்தக அடுக்கினிலா? கவி பாரதியார் கலைமகள் தங்கித் திருநடம் புரியும் அழகிய இடங்களைத் தெளிவாகக் காட்டுகின்றார். கலைமகள் எங்கும் 'கௌரவம்' கருதித் தனித்து நிற்கவில்லை! நம்மைச் சூழ்ந்தே நிற்கிறாள். அவள் எங்கும் 'காணுகின்ற காட்சியாய், காண்பதெல்லாம் காட்டுவதாய் மாணுயர்ந்து' விளங்குகிறாள்.

கலைமகள் புனித பரிசுத்த வெள்ளைத் தாமரைப் பூவில் இருக்கிறாள்: அதாவது அலர்ந்த வெண் தாமரையைக் கண்டதும் கலையுணர்ச்சியே

மீறி நிற்கும்; கலைப் படைப்பினை அருளிய இறைவன் விந்தை வெளியாகும்; புனிதமும், பரிசுத்தமும் எங்கும் பரப்பும் வெள்ளைநிறப்பூ கலையின் உறைவிடமாகி, கலைமகள் கோவில் கொளும் இடமெனத் தோன்றும். அழகுப் பொருள்களெல்லாம் கலைமகள் விளக்கமே. நல் யாழ் அளிக்கின்ற இசையமுதிலே கலைமகள் இருக்கிறாள். 'நவரஸபாவனை நயமுற நாட்டும்' இன்பக் கவிதை புனையும் கவிஞர் தம் வெள்ளையுள்ளத்திலே அவள் அமர்கிறாள். 'இருப்பது ஒன்றே' என்று பறைசாற்றும் வேத வாசகங்களின் கருப் பொருளாகி விளங்குகிறாள் கலைமகள். உள்ளது ஓர்ந்து, கள்ளம், கபடம், சூது, வாது, பொய், பொறாமை இல்லாத உள்ளம் கொண்ட மாமுனிவோர் கூறிச் சென்ற நல்லுரைகளில் திகழ்கிறாள்! அவர்களது சீரிய கருத்துகள் இவளேதான்.

"வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்,
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்,
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்,
உள்ள தாம்பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்,
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்"

மங்கை நல்லாரால் பாடப்பெறும் இனிய இசைகளிலே கலைமகளைக் கண்டு இன்புறலாம். குழலிசை, யாழிசைக்கும் மேலானதாக விளங்கும் குழந்தையின் மழலை மொழிகளில் விளங்குகிறாள். இனிய கீதம் பாடுகின்ற குயிலின் குரல்தனிலும், கிள்ளை மொழிதனிலும் இலங்குகிறாள் கலைமகள். பலர் கண்டு, மனமகிழ்ந்து, மெச்சிப் புகழும் சிறந்த தொழில் வன்மை கொண்ட சித்திர விசித்திர வேலைப்பாடுகள், கோபுரங்கள், கோயில்கள் இவற்றிடையே விளங்கிக்




காட்சி தந்து அவற்றுக்கு அழகு தருகின்றாள். சுருங்கக்கூறின் கலைமகள் இன்பத்தின் வடிவு.

> "மாதர் தீங்குரல் பாட்டில் இருப்பாள் ;
> மக்கள் பேசும் மழலையில் உள்ளாள் ;
> கீதம் பாடும் குயிலின் குரலை
> கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள் ;
> கோத கன்ற தொழிலுடைத் தாகி
> குலவு சித்திரம் கோபுரம் கோவில்
> ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள் ;
> இன்பமே வடி வாகிடப் பெற்றாள் ! "

இவ்வாறாகக் கலைமகள் எனும் மாண்புறு தெய்வம் நல்ல பொருள், சிறந்த பொருள், அழகிய பொருள், தூய்மையான பொருள், இன்பமான பொருள், புனிதமான மங்களப்பொருள் அனைத்திலும் தங்கி விளங்கிச் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றாள் எனும் தன்மையை வெகு அழகாகக் கவிஞர் கோமான் சுப்ரமண்ய பாரதியார் காண்பிக்கிறார் !

நம் பழம் பெரும் பாரத நாட்டின் பண்பாட்டினையும், நாகரிக வரலாற்றையும் நன்கு ஆராய்வோருக்கு அரியதொரு பேருண்மை தெளிவாகப் புலப்படும். அதாவது நம் மூதாதையர்—அறிவிலே தெளிந்த சான்றோர் - வாழ்க்கையில் காணும் பொருள்களை யெல்லாம் மூன்று வகையாகப் பாகுபாடு செய்தார்கள். அவர்கள் கண்ட பிரகாரம் எல்லா விஷயங்களும் சத்யம், சிவம், சுந்தரம் என்ற மூன்று பிரிவினுக்குள் அடங்கிவிட்டன. வாய்மைப் பொருள், மங்கலப் பொருள், அழகுப் பொருள் என்பனவே அவை! இம் மூவகைப் பொருள்களையும் இறைவன் இயற்றிய கலைப் பொருளாகக் கொண்டனர். ஆகையால் அவர்கள் மெய், மங்களம், அழகு மூன்றையும் உபாசிக்கும் போது இறைவனையே உபாசித்தனர். 'பச்சை மாமலை', 'பாடி நகர்ந்து வரும் நதி', 'விரிந்து மணம் வீசும் மலர்', 'ஏழிசை', 'நீல விசும்பு' - முதலிய எல்லா அழகு தரும் பொருள், இன்பம் பயக்கும் பொருள் அனைத்திலுமே இறைவனையே கண்டு வழிபட்டனர். அத்தகைய 'மேலோர்' வழி வந்தவர் நம் பாரதியார்; தவிர 'எங்கெங்கே நோக்கிடினும் ஏதெவற்றைப் பார்த்தாலும் அங்கங்கே ஈசனது அற்புதத்தைக் கண்டிடும் கவிஞர் மரபினைச் சார்ந்தவர் பாரதியார்.

இத்தகைய மகாகவி பாரதியார் கலைமகள் விலாசத்திற்குத் தக்கவொரு விளக்கம் கொடுத்ததில் வியப்பென்ன ?

> "வாணி கலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
> ஆணிமுத் தைப்போல அறிவுமுத்து மாலையினாள்
> காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாம்
> காட்டுவதாய்
> மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே"

—கவி பாரதியார்

# பதவி

வே. ரங்கராஜன்

ஸெயின்ட் பிலோமினா வித்தியாலயத்தின் தலைமை உபாத்தினி சற்குணம் தன் படுக்கையில் புரண்டு வேதனைப்பட்டாள். நடுநிசி நழுவி மணி இரண்டடித்தும் கண் உறக்கம் கொள்ளவில்லை. அவள் மனத்தில் எழுந்த எண்ணங்கள் ஆர்ப்பரித்து அலை பாய்ந்தன.

அந்த வித்தியாலயத்தில் பதினைந்து வருஷங்களுக்குமேல் வேலை பார்த்துவந்த அவளுக்குத் தலைமை உபாத்தினி பதவி அளிக்காமல் மேலே வேறு எவரையும் வைக்கக் கூடாது என்று அவள் முன்பு விண்ணப்பித்திருந்தாள். தலைமை உபாத்தினி பதவி காலியாயிற்று. வேலை பார்த்து வந்த ஆசிரியை அதிகச் சம்பளம் கொடுக்கும் வேறு பள்ளியில் வேலையை ஏற்றுக் கொண்டு ராஜிநாமா செய்துவிட்டுப் போய்விட்டாள். ஆகவே தனக்குத்தான் அப்பதவி கிடைக்குமென சற்குணம் உறுதியாக எண்ணினாள். ஆனால் வேறு தலைமை உபாத்தினிக்கு விளம்பரம் செய்துவிட்டு அதுவரை அவளை அவ்விடத்தில் தற்காலிகமாக வேலை பார்க்கும்படி தலைமைப் பாதிரியாரிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

இக்கடிதத்தைக் கண்டவுடன் அவளுக்குக் கோபம் அதிகமாக வந்தது. தற்காலிகமாகக் கூட அப்பதவியை எற்றுக் கொள்ளக்கூடாது; அவ் வித்தியாலயத்தையே விட்டு விலகி வேறு பள்ளிக்குச் சென்றுவிட வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. தலைமைப் பதவிக்குத் தான் எவ்விதத்திலும் குறைந்தவளல்ல என்பது அவள் எண்ணம்.

மெட்ரிகுலேஷன் பரீக்ஷை பாஸ் செய்துவிட்டு, போதனாமுறை படித்து அவள் ஆசிரியையானாள். அதன் பிறகு, தானே, ஒழிந்த நேரங்களில் வீட்டில் படித்து, இண்டர் பரீக்ஷையில் தேறினாள். அதன் பிறகு டாக்டர் செல்வம் அவளது வாழ்க்கையில் குறுக்கிட்டார். இருவரும் பரஸ்பரம் காதலித்துத் திருமணம் செய்துகொண்டனர். அவர்கள் இருவருக்கும் காதல் உண்டானதும் திருமணம் ஆனதும் ஒரு விந்தையான சம்பவம். நாவல்களிலும் கதைகளிலுங்கூட அம்மாதிரியான சம்பவம் இதுவரை கற்பிக்கப்படவில்லை. அதனால் தானோ என்னவோ அவர்கள் வாழ்வு மிக இன்பமாக நடந்துகொண்டு சென்றது; அதில் ஒரு குறைவுமில்லை. ஆகையால், 'ஒரே முயற்சியாக பி. ஏ. யையும் முடித்துவிடவேண்டும்' என்று சற்குணம் கங்கணம் கட்டிக்கொண்டிருந்ததை மறந்து விட்டாள்! எதிர்கால வாழ்வை வெறும் பாலையாகச் சித்திரித்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த அவள், தன் மடியிலே தவழ்ந்து விளையாடிய குழந்தையையணைத்துப் பேரானந்தம் அடைந்தாள்.

இப்படி ஐந்தாறு ஆண்டுகள் சென்றுவிட்டன. அதன் பிறகுதான் அவளுக்குத் தன்னுணர்வு வந்தது. தன்னைப்போல் அறிவும் அனுபவமும் உள்ள ஒரு பெண், நேற்றும் இன்றும் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றுவிட்டு வந்துவிடும் அனுபவமில்லாத சிறுமிகளுக்கு அடங்கி வேலை செய்வது கேவலம் என்ற எண்ணம் மேலோங்கியது. மறுபடியும் இரவு பகலாகப் படிக்கத் தொடங்கினாள். பி. ஏ. யை முடித்துவிட வேண்டுமென்று பாடுபட்டாள்.

பகவானே! ஒரு நல்ல காரியம் செய்வோம் என்று தொடங்கிவிட்டால் எத்தனை இடையூறுகள்! மனச் சோர்வை அளிக்கும் எத்தனை இக்கட்டான சந்தர்ப்பங்கள்! அதுவும் குடும்பம் என்ற கூண்டிற்குள் இருந்துகொண்டு வான வெளியை நிமிர்ந்து பார்க்கையில் கண்ணை உறுத்தும் எத்தனை மின்னல்கள்! மனவலியைக் குலைக்கும் எத்துணை இன்னல்கள்!—சற்குணம் இவை யாவற்றையும் சகித்துச் சமாளித்து முன்னேற வேண்டியிருந்தது.

அவள் கணவர் செல்வம் சுமாரான வருவாயுள்ள டாக்டர். ஒரு எல். எம். பி. அவருடைய மருந்துகள் நோயாளிகளைக் குணப்படுத்தாவிடினும் இனியபேச்சும் சுமுகமான குணமும்நோயாளிகளை அவரை நாடி வரச்செய்தன. அவர் பில்கள் அனுப்பும் வழக்கமே கிடையாது. கொடுப்பதை வாங்கிக் கொள்வார். இதனால் அவர் பெருந்தன்மை உடையவர் என்றும்; பணக்காரர், வைத்தியத்தைப் பரோபகாரத் தொழிலாக வைத்திருக்கிறார் என்றும் சொல்லிக் கொண்டனர். ஆனால் நிலைமை என்னவோ முற்றிலும் மாறானது. அவர் தம் வைத்தியத் தொழிலை நம்பித்தான் வாழ்ந்து வந்தார். ஆனால் அதை வியாபாரமாகக் கொண்டு போய் விடாமல் இருந்தார். இதனால் அவர் மாத சராசரி நிகர வருவாய் ரூபாய் நூற்றுக்குள்தான் இருந்தது. தன்தொழில் மூலம் பெருஞ் செல்வம் குவித்துவிட எண்ண வில்லை. ஆதலால் மன நிறைவுடன் வாழ்ந்தார். அதுவும் சற்குணத்தை மணந்த பிறகு அவர் வாழ்வில் குறையெதுவுமே இல்லை. இருவர் வருவாயும் குடும்பத்திற்குப் போதுமானதாய் இருந்தது. மன நிறைவும் இருந்தது.

சற்குணம், குடும்ப வேலைகளிலிருந்து சற்று தன்னை விடுவித்துக் கொண்டு படிக்க ஆரம்பித்ததும் செல்வம் டைப்பாயிட்ஜுரத்தில் விழுந்தார். அவர் மறுமடியும் எழுந்து தொழில் செய்ய மூன்று மாதங்கள் ஆய்விட்டன. குடும்பப் பொருளாதார நிலையில் ஒரு பெரும் நெருக்கடி யுண்டாயிற்று. அவர் எழுந்து, தம் உடல் நிலையை கவனித்துக் கொண்டு, தொழிலையும் நடத்த ஆரம்பித்ததும் மூன்று வயது நிரம்பியிருந்த அவர்கள் மகன் அவருடைய சைக்கிளை மேலே தள்ளிக்கொண்டு வலது கையை முறித்துக்கொண்டான். இந்நிலையில் வித்தியாலயம் போய்வருவதும் குழந்தையைக் கவனிப்பது மாகவே நாட்கள் சென்றன. இரவில் ஒரு வரி கூடப் படிக்க ஓய்வு இருப்பதில்லை. இப்படி இரண்டு மாதங்கள் சென்றன. இவை மட்டுமா? உபகாரம் செய்யாவிட்டாலும் அபகாரம் செய்வதற்கு உறவினர்களா இல்லை! அவர்கள் குடும்பத்தில் கல்யாணம் சாவு இப்படி வந்து வெளியூர்களுக்குப் போகவேண்டி வந்து விட்டது. இவைகளினிடையே சற்குணம் பகீரதப் பிரயத்தனம் செய்தும் பரீட்சையில் ஒரு பாகந்தான் பாஸ் செய்ய முடிந்தது.

இப்படியாக, அலைமோதும் கடலின் முன் நின்று சாந்தியோகம் செய்வதைப்போல் குடும்பத் தொல்லைகளுக்கிடையே, பத்து வருஷ காலத்திற்குள், பி. ஏ.யை முடித்துப் பட்டத்தைப் பெற்றுள், சற்குணம்.

பட்டம் பெற்ற இரண்டு வருஷங்களுக்குப் பிறகுதான் தலைமை உபாத்தினி பதவி காலியாயிற்று. அவ்வித்தியாலயத்தின் சக-உபாத்தினிகள் யாவரும், சற்குணந்தான் தலைமை உபாத்தினியாக நியமிக்கப்படுவாள், ஆசிரியையாக இருந்து தலைமைப் பதவிக்குப் போவதால் தமது கஷ்ட சுகங்களை அறிந்திருப்பாள், கொஞ்சம் சுயேச்சையாக இருக்கலாம் என எண்ணினர். ஆனல் மேலிடத்திலிருந்து வந்த உத்தரவு அவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது. சற்குணத்தின்மீது பொருமைப் பட்டுக்கொண்டிருந்த ஓரிரு உபாத்தினிகள் சந்தோஷப் பட்டனர். 'அப்பா! உயிரை விட்டுப் படித்ததெல்லாம் வீணுயிற்று, பார்த்தாயா?' என்று பேசிக் கொண்டனர்.

பாதிரியாரிடமிருந்து வந்த உத்தரவைத் தன் கணவரிடம் காண்பித்து அவர் அபிப்பிராயத்தைக் கேட்டாள், சற்குணம். "உடனே ராஜிநாமா செய்துவிட்டு வீட்டோடு இருந்துவிடு. நம் குடும்பத்திற்கு என் சம்பாதனை போதாதா என்ன? மலைமேலலையும் மறிக்கும் மண்ணுள் வாழும் புழுக்கும் உணவளிக்கும் பரமபிதா நமக்கும் கொடுப்பார்" என்று சொன்னர்.

ஆனல் பொறுப்பேற்றுகுடும்ப வரவுசெலவை நடத்திய சற்குணத்திற்குப் பரம பிதாவையே முழுதும் நம்பி வாழ்வது உசிதமாகப்படவில்லை பள்ளி வேலையை விட்டால் குடும்ப வருவாயின் செம்பாகம் போய்விடும் என்பது தெரியும். அதை விட்டால் திருச்சியில் வேறு நல்ல பெண் பாடசாலையும் இல்லை. தன் கணவர் நிலையாக வைத்தியத் தொழில் செய்து வரும் இடத்தை விட்டு வேறு இடத்திற்கும் போவதற்கில்லை. இதையெல்லாம் யோசித்து ராஜிநாமா செய்யும் உத்தேசத்தைக் கைவிட்டாள். தற்காலிகமாகப் பதவியளித்த உத்தரவை ஏற்றுக்கொண்டு, தான் தலைமை உபாத்தினி பதவிக்குத் தகுதியானவள் என்பதைச் சாங்கோபாங்கமாகஎழுதி, வெளியிலிருந்து நேர்முகமாக யாரையேனும் நியமிப்பது சரியல்ல என்றும் கண்டித்து பாதிரியாருக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டாள்.

ஆனல் அவள் கடிதம் சென்ற மறுநாள் உத்தரவும் கையுமாக புதிய தலைமை உபாத்தினி வந்து அவளிடமிருந்து பொறுப்பை வாங்கிக் கொண்டு தலைமைப் பீடத்தில் உட்கார்ந்து விட்டாள்.

முன்பே முடிவு செய்துவிட்ட உத்தரவை மாற்றுவதற்கில்லை என்றும், மறுமுறை காலியானல் அவளுடைய உரிமை கவனிக்கப் படுமென்றும் பாதிரியாரிடமிருந்து பதில் வந்து விட்டது. இவ்வுத்தரவு வந்த இரண்டொரு மாதங்கள் வரை ஒருவிதப் பற்றுமின்றி கடமை எனக்கொண்டு வேலை பார்த்து வந்தாள், சற்குணம். முன்பிருந்த உற்சாகமில்லை, மனச் சந்துஷ்டியில்லை.

புதிதாக தலைமை உபாத்தினியாக வந்த மங்கை நல்லவள். சற்குணத்தின் உரிமைக்குக் குறுக்காகத்தான் வந்துவிட்டதாக அவள் உணர்ந்தவுடன் அவளைக் கண்ணியமாக நடத்தினுள். அவள் நட்பைத்தானே முன்வந்து உண்டாக்கிக்கொண்டாள். அத்துடன் பாதிரியாருக்குச் சிபாரிசுக் கடிதம் எழுதி, சற்குணத்தின் சம்பளத்தை உயர்த்தும்படி செய்தாள். இதனுல் அவள் மனக்குறை ஒருவாறு குறைந்தது. வித்தியாலயத்தின் காரியங்கள் அவள் ஆலோசனையின்படி நடத்தப்படவே நாளாவட்டத்தில் மறந்துவிட்டாள்.

இப்படி நான்கு வருஷங்கள் கழிந்த பிறகு புதிதாக வந்த அம்மையாரின் மகனுக்குச் சென்னை செக்ரடேரியட்டில் உத்தியோகமாயிற்று. சென்னையில் வேலை தேடிக்கொண்டு மகனுடனேயே இருக்கலாம் என்ற உத்தேசத்துடன் வேலையை ராஜிநாமா செய்துவிட்டுப் போய்விட்டாள்.

அவள் சென்றதும் சற்குணத்திற்கு உத்தரவு வந்தது. தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டாள். தன் உயர்ந்த கடமையுணர்ச்சியை வெளிப்படுத்தி வித்யாலயத்தை உன்னத நிலைக்கு உயர்த்திப் பெயர் எடுக்கவேண்டும் என்ற உறுதியுடன் ஏற்றுக்கொண்டாள்.

## 2

பதவி ஏற்று ஓராண்டு ஆவதற்குள் வித்யாலயம் பல துறைகளிலும் முன்னேற்றமடைந்தது. பார்வையிட வந்த ஜில்லா கல்வி அதிகாரி மிகவும் பாராட்டி, தலைமை உபாத்தியாயினியின் திறமையைப் புகழ்ந்து எழுதிவைத்து விட்டுப் போயிருந்தார். அன்பாயும் சுமுகமாகவும் நடந்துகொண்டதால் சக-ஆசிரியைகள் அனைவரும் ஒத்துழைத்தனர். ஒரு முறை பார்வையிட்டபொழுது, அமுலிலிருந்த ஒழுங்கு முறைகளைக் கண்டு திருப்தியடைந்துவிட்டுச் சென்றார் பாதிரியார்.

ஆனால் சற்குணம் தன் கடமைகளைச் செய்கையில் எதிர்பாராத சோதனைகள் குறுக்கிட்டன. அவைகளில் மிகச் சிக்கலான ஒரு சோதனை அன்று முதல்நாள் நடந்திருந்தது. வித்யாலய ஆபீஸ் அறையுள் இருந்த சம்பள வசூல் நகல் ரசீதுகள் அடங்கிய புத்தகங்களும் தினக் குறிப்பு மாதக் குறிப்பு நோட்டுக்களும் காணமற்போயிருந்தன. ஆபீஸ் அறையுள்ளும் மற்ற இடங்களிலும் துருவித் தேடிப் பார்த்தாய் விட்டது. காணமற் போயிருந்தால் தானே கிடைக்கும். அந்த முக்கியமான தஸ்தவேஜுகள் களவாடப்பட்டிருந்தன! அதன் விளைவுகள் என்னவாகும் என்று சற்குணம் நினைத்த பொழுது அவள் வயிறு பகீரென்றது; கண்கள் கலங்கின. சற்குணம் இயற்கையாகவே மனத்திடம் இல்லாதவள். இவ்விதப் பெருஞ்சோதனைகளைச் சமாளிக்க வகையறியாதவள். வேலை போய்விடுமே என்று அவள் வருந்தவில்லை. தன் மானம் போய்விடுமே என்று மனம் நொந்தாள்.

திருட்டு மிகச் சாதுர்யமாக நடைபெற்றிருந்தது. அந்தத் தஸ்தவேஜுகளைத் தவிர வேறு ஒரு குண்டூசியும் களவாடப்படவில்லை. வித்தியாலயத்தின் அந்தரங்கங்களை அறிந்த ஒருவர்தான் களவாடிச் சென்றிருக்கவேண்டும். ஆபீஸ் அறைப் பூட்டுக்கு மறு சாவி போட்டுத் திறந்து கொண்டு உள்ளே சென்று களவாடிச் செல்வதற்கு மிக்க மனத்திடம் உள்ளவன் செய்திருக்கவேண்டும். அதிக நேரம் சிந்திக்க அவசியமின்றி இத்திருட்டுக்குத் தூண்டுதலாயிருந்தவன் யார் என்பது புலனாயிற்று. அதை யூகித்து அறிந்து கொண்டவுடன்தான் சற்குணத்தின் மன வேதனை பின்னும் அதிகமாயிற்று.

முன்பு அந்த வித்தியாலயத்தில் ஒரு கிழவர் குமாஸ்தாவாக இருந்தார். வித்தியாலயத்தில் படிக்கும் பெண்களிடமிருந்து மாதச் சம்பளம் வசூல் செய்வது, கணக்கு வைத்துக்கொள்வது, அன்றன்று வசூலாவது நிர்வாகத்தினருக்கு அனுப்பிக் கையெழுத்துப் பெறுவது, ஆசிரியைகளுக்குச் சம்பளப் பட்டியல் தயாரிப்பது இவ்விதமான வேலைகளைச் செய்து வந்தார். இவ்வேலைகளுக்காக நிர்வாகத்தினர் அவருக்கு 20 ரூபாய் கொடுத்தனர். வேலையிலிருந்து ஓய்வு பெற்று விலகிவிட்ட குடும்பஸ்தரான அவருக்கு இது பேருதவியாக இருந்தது. வேலைக்கு அமர்ந்து பத்து வருஷம் ஆகி அனுபவம் அடைந்ததும் நிர்வாகத்தினர் கண்களைக் கட்டிப் பணத்தைச் சுண்டவும் ஆரம்பித்தார். குடும்பத்தில் பணமுடை அதிகமாக ஆக, பல குயுக்தியான வழிகளைக் கண்டுபிடித்துப் பணம் திருட ஆரம்பித்தார். ஆபீஸ் நிர்வாகம் அறியாத புதிய தலைமை ஆசிரியைகள் இருக்கும்போது அவர் இட்டதுதான் சட்டமாக இருந்தது. அவர் சுட்டின இடத்தில் அந்த அம்மையார் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு சிறு காரியத்திலும் தன் கவனம் முழுவதையும் செலுத்தி வேலை செய்த சற்குணம் அவர் கள்ளத்தனத்தைக் கண்டுபிடிக்கக் காலம் அதிகமாகவில்லை. ஒரு வகையான ஆதாரம் கிடைத்ததும் தலைமைப் பாதிரியாருக்குப் புகார் செய்துவிட்டாள். நம்பிக்கை மோசம் செய்த அந்தக் குமாஸ்தா மீது பாதிரியாருக்கு அதிக கோபம் வந்துவிட்டது. அவரை உடனே வேலையிலிருந்து நீக்கிய தோடல்லாமல் நம்பிக்கை மோசம் செய்ததாகக் குற்றம்சாட்டி வழக்குத் தொடுத்தார். அவ்வழக்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருந்தது. வழக்குக்கு அத்தாட்சியாக அந்தத் தஸ்தவேஜுகளைக்கொண்டு காண்பிக்க விசாரணை நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள், சற்குணம். விசாரணைத் தேதி குறிப்பிட்டுக் கடிதம் வந்த பிறகு அவை காணமல் போயிருந்தன! தனக்குப் பாதகமாகச் சாட்சியம் சொல்லப் போகும் அவைகளை அந்த குமாஸ்தாதான் களவாடிச் சென்றிருக்கவேண்டும். ஆனால் யார் மூலம் செய்திருக்கக்கூடும்? வேறு யார்? அன்று இரவு காவலுக்கு இருந்த பியூன் பெரியசாமிதான் அதற்கு உடந்தையாக இருந்திருக்கிறான்!

- அவன் இதைச் செய்ய பலவித காரணங்கள் இருந்தன. அவன் வறுமை; அவனுக்கும் பழய குமாஸ்தாவுக்கும் இருந்த நட்புரிமை; சற்குணத்தைப் பழி தீர்த்துக்கொள்ள அவன் விரும்பிய வஞ்ச எண்ணம்.

பெரியசாமி சாதாரணமான மனிதனல்ல. பக்கா பேர்வழி. அந்த வித்தியாலயம் ஆரம்பமான புதிதிலிருந்து அவன் வேலையில் இருக்கிறான். அவன் திருடாத நாள் கிடையாது. ஆனால் கையுங் களவுமாகப் பிடிப்பது இயலாத காரியம். பள்ளிக்கூடம் திறந்த புதிதில் இளம் சிறுமிகளின் புத்தகங்கள் திடீர் திடீரென மாயமாக மறைந்துவிடும். பேதைப் பெண்கள் கண்ணைக் கசக்கிக்கொண்டு அழும்! இவை பெரியசாமியின் செயல் என்று உபாத்தினிகளுக்குத் தெரியும். தெரிந்தும் அவனை

கேட்க முடியுமா! கேட்டால் அவர்கள் மானம் போகும்படி தாறுமாருகப் பேசிவிடுவானே!

அவனை வேலையை விட்டு நீக்கிவிடவேண்டுமென்று ஆசிரியைகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தலைமை உபாத்தினியிடம் எத்தனையோ முறை முறையிட்டுக் கொண்டனர். ஆனால் அவனை வேலையைவிட்டு நீக்கிவிட்டு அதனால் வரும் பலாபலன்களை எதிர்த்து நிற்க யாருக்கும் மனோ திடம் இல்லை.

சற்குணம் பதவியை ஏற்றுக்கொண்டதும் அவனைத் தனியே அழைத்து ஹிதோபதேசம் செய்தாள். நயமாகக் கண்டித்து வைத்தாள். ஆனால், அந்தச் சமயத்திற்கு மட்டும் தலையை அசைத்தானே தவிர மறுபடியும் தன் தொழிலை ஆரம்பித்துக்கொண்டான். புகார்கள் வந்தன. அவைகளைப்பொறுமையுடன் கேட்டுக்கொண்டு சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் சற்குணம்.

தன் கடமையை உணர்ந்தபோதிலும் அவனை விலக்குவதால் எழும் சிக்கல்களை அவள் அறிவாள். வித்யாலயத்தில் இவ்வளவு மோசடிகள் செய்தபோதிலும் தலைமைப் பாதிரியாரிடம் அவன் நன்மதிப்பைப் பெற்றிருந்தான். ஒவ்வொரு ஞாயிறன்றும் அவரைச்சென்று கண்டு வருவான். அந்த வாரம் முழுமையும் வித்யாலயத்தில் நடந்தவைகளை ஒன்றுவிடாமல் சொல்வான். தலைமை உபாத்தினி. ஆசிரியைகள், சிப்பந்திகள் ஆகிய இவர்களின் நடவடிக்கைகளை விஸ்தாரமாகச் சொல்வான். அடிக்கடி நேர்முகமாக மேற்பார்வை செய்ய இயலாதிருந்த அவருக்கு அவன் மூலம் தகவல்களைத் தெரிந்துகொள்வது வழக்கமாகப் போயிற்று. இந்த விஷயம் சற்குணத்திற்குத் தெரியும். பாதிரியாரின் தலையீடில்லாமல் இருக்கும் வகையில் அவனை நீக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தாள்.

## 3

வருஷாந்தரக் கணக்குகள் தயாராகவேண்டியிருந்தது. குமாஸ்தாவை நீக்கிவிட்ட பிறகு வேறு குமாஸ்தா நியமிக்கப்படவில்லை. அதனால் கணக்கு வழக்குகள் அன்றன்று முடிவு கட்டாமல் குவிந்துகிடந்தன. அன்று சாயங்காலம் வித்தியாலயம் முடிந்த பிறகும் நீண்ட நேரம் ஆபீஸ் அறையுள் உட்கார்ந்து வேலை செய்து கொண்டிருந்தாள் சற்குணம். அவளுக்குச் சினேகிதியான உபாத்தினி ஒருவளும் உதவியாக இருந்தாள். வேலைகள் அதிகமாக இருந்ததால் முடித்துவிட்டுப் போக வேண்டும் என்று நினைத்து உட்கார்ந்து செய்த அவர்

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை :- நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
I.D.L. நெ 61, மெடிகேடட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிர்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
கவனிப்பு:- மாதர்களுடைய சூதக, கெர்ப்பாசய உபாதைகளுக்கு விபரம் எழுதி சிகிச்சை பெறலாம்
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதறாஸ்.

களுக்குப் பொழுது போனதே தெரியவில்லை. மணி எட்டுக்குமேல் ஆகிவிட்டது. வீட்டுக்குப் புறப்பட நினைத்து, கதவுகளைப் பூட்டிச் சாவி கொடுக்க, பியூனைப் பார்த்த பொழுது காண வில்லை. அன்று காவல், பெரியசாமி முறை. தினசரி திருட்டுக்கு ஆஸ்பதமாக வித்யாலயத் தோட்டத்தினுள் ஏதேனும் காய்கறிகளைத் திரு டிக்கொண்டிருப்பான் என்று நினைத்து தன் சிநேகிதியை அழைத்துக் கொண்டு தோட்டத் துப் பக்கம் போனுள், சற்குணம்.

தோட்டத்து வராந்தாவிலே, மின்சார விளக்கு வெளிச்சத்திலே, அவள் கண்ட காட்சி கண் களை மூடிக்கொள்ளச் செய்தது. இரவுச் சாப் பாட்டிற்கு மானத்தை விற்க வந்த பெண் பேய் படுத்தவாறே முகத்தை மூடிக்கொண்டால் மானத்தைக் காத்துவிடலாம் என்ற எண்ணமோ என்னவோ! அவர்கள் வந்து பார்த்துவிட்டுப் போனதாக அவள் பெரியசாமியிடம் சொன் ஞள். "போகட்டும்!" என்று சொல்லி, தன் காரியத்தை முடித்துக் கொண்டு அவளை அனுப்பிவிட்டுச் சாவகாசமாக வந்தான் பெரிய சாமி. அவன் நடையில் கொஞ்சங்கூட அடக் கம் இல்லை; மான வெட்கம் இல்லை. எப் போதும் போல் கதவுகளைப் 'படீர், படீர்' என்று அடைத்துச் சாத்தினன். கதவைச் சாத்திப் பூட்டி சாவிக் கொத்தை விட்டெறிந் தான்.

தனக்கு வந்த கோபத்தை சற்குணத்தால் அடக்க முடியவில்லை. "டேய்! பெரியசாமி! உன்னை நாளைமுதல் சஸ்பெண்ட் செய்திருக் கிறேன்; வேலைக்கு வரவேண்டாம். பாதிரி யாரிடமிருந்து உத்தரவு வந்ததும் பாக்கிச் சம்பளத்தை வாங்கிக்கொள்!"; என்று பட படத்துச் சொன்னுள்.

"சரிதான் போங்கம்மா உங்க வேலையை பார்த்துக்கிட்டு. நீங்க ஏங்கம்மா வீணு இதை யெல்லாம் கவனிக்கிறீங்க? சாமியாராச்சி நானுச்சி பாத்துக்கிறேன் போங்க. உங்க அதி காரத்திலே எல்லாம் நடக்கிறதா நினைச்சுகிட்டு தாறுமாறு அதிகாரம் பண்ணுறீங்கே!" என் ருன், பெரியசாமி.

சற்குணத்திற்கு வந்த கோபம் எல்லையை மீறியது. என்ன சொல்வதென்று தெரிய வில்லை. "பார்ப்போம்!" என்று சொல்லிவிட்டு வித்யாலயத்தை விட்டு வெளியேறினுள்.

மறுநாள் காலை வித்தியாலயத்திற்கு வந்ததும் முதல் காரியமாக பெரியசாமியின் மீது ஒரு நீண்ட புகார் எழுதி, நேற்று அவள் கண்ட கோலத்தையும் விவரமாகக் கூறி, அவன் சொன்னவைகளையும் எழுதி, அவனை அவ சியம் வேலையைவிட்டு நீக்கிவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். தனக்கு உதவியாக அன் றிரவு வேலை செய்த ஆசிரியையும் சாட்சியாகப் போட்டிருந்தாள்.

இந்தப் புகார் போய்ச்சேர்ந்த மறுநாள், பெரியசாமியை உடனே வேலைக்கு எடுத்துக் கொள்ளும்படி, பாதிரியாரிடமிருந்து கடிதம் வந்தது. இதைப் படித்த சற்குணம் தன் கண் களையே நம்பவில்லை. அறிவும் விசால புத்தியும் உலக அனுபவமும் உள்ள பாதிரியார் இப்படிச் செய்வார் என்று அவள் நினைக்கவில்லை.

அன்று வீடடைந்ததும் வித்தியாலயத்தில் நடந்தவைகள் யாவையும் தன் கணவரிடம் சொல்லி, அவள் எழுதிய நகல் கடிதத்தையும் பாதிரியாரிடமிருந்து அதற்கு வந்த பதிலையும் காண்பித்தாள். இரண்டையும் படித்துவிட்டு டாக்டர் பெருமூச்சுவிட்டார்.

சமீப நாட்களாக அவருக்கு மனச் சந்துஷ் டியே இல்லை. சற்குணம் தலைமைப் பதவி ஏற்றதிலிருந்து குடும்பத்திலே ஒழுங்கில்லை, குழந்தைகள் தாயின் முகத்தைப் பார்த்து எத்தனையோ நாட்களாயின. அதிகாலையில் எழுந்து குளித்து உடுத்து பள்ளிக்கூடம் சென்றுவிடுவதும் சாயங்காலம் விளக்குவைத்து நீண்ட நேரம் கழித்து வீடு திரும்புவதுமாக இருந்தாள் சற்குணம். குழந்தைகளை வேலைக் காரியே கவனித்து வந்தாள். வீட்டு வேலையை யும் பார்த்துக்கொண்டு அவளால் எத்தனை குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள முடியும்? நான்கு குழந்தைகளும் நான்கு கோலங்களில் காட்சியளித்தன. பகல் முழுதும் வெளியே சென்று நோயாளிகளைப் பார்த்துவிட்டு அவர் வீடு திரும்பும்பொழுது ஒன்று பரட்டைத் தலையும் அழுக்குச் சொக்காயுமாக காட்சியளிக் கும். ஒன்று சாக்கடைத் தண்ணீரை மடை கட்டிக் குளமாக்கிக் கப்பல் விட்டுக்கொண்டிருக் கும்; ஒன்று அவர் அறையுள் நுழைந்து மேஜைமீது இருந்த காகிதங்களிலே 'அ, ஆ' எழுதிக்கொண்டிருக்கும். மூத்த பையன், 'உடனே எதாவது தின்பதற்கு பலகாரம் செய்து கொடு!' என்று சமையற்காரியைத் தொந்தரவு கொடுத்துக்கொண்டிருப்பான். வீட் டுக்குள் நுழைந்தால் சாமான்களும் வைத்திய ஆயுதங்களும் அலங்கோலமாய்க் கிடக்கும். ஒழுங்காக இருந்த வீடு இப்படிப்போனதும், சற்குணம் பள்ளிக்கூடமும் பதவியுமாகவே இருப்பதும் அவருக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை.

சற்குணம் தன் குறையைச் சொல்ல வந்த சமயம் பார்த்து, அதைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணி, "பதவிக்கேற்ற அதிகாரம் இருக்கவேண்டும். அதில் யாரும் குறுக்கிடக் கூடாது. குறுக்கிட விட்டுக்கொண்டு பதவி யில் ஒட்டிக்கொண்டிருப்பது அகௌரவம்.

உடனே ராஜினாமா செய்துவிடு " என்றுசொன்னார், அவ்வாறே சற்குணம் ராஜினாமாக் கடிதத்தை எழுதினாள்.

ராஜினாமா போன மறுநாள் பாதிரியார் பள்ளிக்கூடத்தை மேற்பார்வையிட வந்தார். அவளிடம் நேர்முகமாக யாவற்றையும் விசாரித்தார். சில விவகாரங்களில் பரிதாபகரமாக பெரியசாமியின் கைக்குள் சிக்கியிருந்த அவரால் அவனை வேலையினின்றும் நீக்க இயலவில்லை. சற்குணத்திடம் ஏதோ நொண்டிச் சமாதானங்களைச் சொல்லி மழுப்பி, ஒருமாதச் சம்பளத்தை அபராதமாகப் போட்டு, பெரியசாமியை மறுபடியும் வேலையில் வைத்துக் கொள்ளும்படி சொன்னார். அவர் மிகவும் நயந்து சொன்னதின் பேரில் சற்குணம் தன் ராஜிநாமாவை வாபஸ் பெற்றுக் கொண்டாள்.

## 4

இதன் பிறகு பெரியசாமி தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள எத்தனையோ சந்தர்ப்பங்களில் முயன்றான். சற்குணம் இதை எதிர்பார்த்து மிகவும் ஜாக்கிரதையாக இருந்ததால் அவன் காலித்தனங்கள் பலிக்கவில்லை. கடைசியாக முன்னிருந்த குமாஸ்தாவின் தூண்டுதல் மேல் பெரியசாமி தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டதுடன்; அந்த ஏழைக் குமாஸ்தாவிடம் கைக்கூலியும் பெற்று வயிற்றை நிரப்பிக் கொண்டான். தஸ்தவேஜுகள் களவு போனதைப்பறறி, சற்குணம் பாதிரியாருக்குக் தகவல் கொடுக்கவில்லை. அவை களவு போய்விட்டன என்று சொன்னால் விபரீதமாக எண்ணிவிடுவார் என்று பயந்தாள். குறிப்பிட்ட தினத்தன்று காவலுக்குப் படுத்துக்கொண்ட பெரியசாமியின்மீது வீணை புகார் செய்வதாக நினைப்பார். மிக நேர்மையாகவும் கண்டிப்பாகவும் நடந்து கொண்ட அவள் சுபாவம் ஏனோ அவருக்குப் பிடிக்கவில்லை. இந்த நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று அவளால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை.

* * *

இரவு பூராவும் படுக்கையில் கிடந்து புரண்டு மனதைக் குழப்பிக் கொண்டாள். எந்தப் பதவிக்காக இரவு பகலென்று பாராமல் உழைத்து வாழ்வைத் தியாகம் செய்து அடைந்தாளோ அது முள்ளின்மேல் நடப்பதாகப் பட்டது அவளுக்கு. இந்தச் சிறு பதவியில் இவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றனவே! பிரதம மந்திரி, ஒரு மாபெரும் அரசியல் ஸ்தாபனத்தின் தலைமைப் பதவி, இன்னும் இவை போன்ற பதவிகள் இவைகளை நிர்வகித்து நடத்தும் பொறுப்புள்ளவர்களுக் கெல்லாம் எவ்வளவு நெருக்கடிகள் இருக்கும்! சிந்திக்கச் சிந்திக்க அவள் மனம் சாம்பிக் குழம்பியது. "ஐயோ" வேண்டாம்! பதவியே வேண்டாம்;' என்று கூக்குரலிடலாமா என்று தோன்றியது அவளுக்கு.

அப்பொழுது தொட்டிலில் உறங்கிக்கொண்டிருந்த குழந்தை 'வீல்' எனக் கத்தவே எழுந்து சென்று தூக்கிக்கொண்டாள். ஏதோ பயங்கரக் கனவு கண்டு வெருண்டு எழுந்துவிட்டது குழந்தை. அதைச் சமாதானப்படுத்தி, பாலூட்டி உறங்கவிட்டு மறுபடியும் படுக்கையில் படுத்தாள். அதைத் தொடர்ந்து உற்று மன அமைதி உண்டாயிற்று. பதவியைச் சமாளிப்பதற்கு நேர்மைமட்டும் போதாது, சாணக்கிய தந்திரமும் வேண்டும் என நினைத்தாள்.

மறுநாள் காலை வழக்கம்போல் பள்ளிக்கூடம் சென்றாள். ஆபீஸ் கதவுகளைத் திறந்து விட்டுவிட்டு போகத் தயாரானான், பெரியசாமி.

"பெரியசாமி! இங்குவா!"! என்று மிகவும் நயமாக அவனைக் கூப்பிட்டாள்; "இதோ பார்! ஐந்து ஐந்து ரூபாய் நோட்டுக்கள்! இவைகளை உனக்கே கொடுத்து விடுகிறேன். கொண்டு போன ரிக்கார்டுகளைத் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்துவிடு!" என்று நயமாகக் கேட்டாள்.

"இல்லையம்மா....நான்...எனக்கு...."என்று மழுப்பினான் பெரியசாமி.

"பெரியசாமி! பயப்படாதே. இதை நான் யாரிடமும் சொல்லவில்லை. யேசுவின் மீது ஆணையாகச் சொல்கிறேன். அவைகளைக் கொண்டுவந்து கொடுத்தால் போதும். இப்போதே வேண்டுமானாலும் இந்த ரூபாயை எடுத்துக்கொள். உன் வார்த்தைகளை நான் நம்புகிறேன்" என்றாள்.

"சாயங்காலம் வேலைக்கு வரும்பொழுது கொண்டு வருகிறேனம்மா" என்று சொல்லிவிட்டு இருபத்தைந்து ரூபாயையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான் பெரியசாமி.

அவன் சொன்னபடி அன்று சாயுங்காலம் காணமற்போன தஸ்தவேஜுகளைக் கொண்டு வந்து கொடுத்தான். ஆனால் அவைகளைப் புரட்டிப் பார்த்தபொழுதுதான் சற்குணம் திடுக்கிட்டாள்; தன் தவறையும் அறிவீனத்தையும் உணர்ந்தாள். புத்தகத்தில் ஏறியிருந்த கணக்குகள் அடித்துத் திருத்தப்பட்டிருந்தன. ரசீது நகல்களில் வரிசைக் கிரமமான எண்கள் இல்லை. கோர்ட்டாருக்குக் காண்பிப்பதற்கென மடித்து வைத்திருந்த மோசடி ரசீதுகளெல்லாம் கிழித்து எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

* * *

ஏமாற்றமடைந்து சற்குணம் குலைந்த மனோநிலையுடன் அந்தத் தஸ்தவேஜுகளை எடுத்துக்

கொண்டு பாதிரியாரிடம் சென்ருள். அவைகளைக் காண்பித்து நடந்தது நடந்தவாறு சாங்கோபாங்கமாகச் சொன்னுள். பெரியசாமியை அப்பொழுதே வேலையினின்றும் நீக்கியிருந்தால் இத்தகைய காரியம் நடந்திருக்காது என்று சொன்னுள்.

அதே சமயத்தில் பெரியசாமியும் அங்கு வந்து சேர்ந்தான். அவனைப் பாதிரியார் கேட்கவே தனக்கு இந்த விஷயம் ஒன்றுமே தெரியாது என்று சாதித்தான். பரம பிதா யேசுவின்மீதும் பாதிரியார் தலைமீதும் ஆணையிட்டுச் சத்தியம் செய்தான்.

பாதிரியாருக்குக் கோபம் வந்துவிட்டது. சற்குணத்தை நேர்மையின்றிப் பேசிவிட்டார்.

* * *

குமாஸ்தாவின் மீதிருந்த வழக்கு முடிந்தது. ரிக்கார்டுகள் தக்கபடி ருசுவளிக்கவில்லை என்று சொல்லி நீதிபதி வழக்கைத் தள்ளிவிட்டார்.

அந்த வழக்கிற்குச் செலவான பணத்தையும் மோசடி செய்ததாகக் கணக்கெடுத்து வழக்குத் தொடரப்பட்ட 500 ரூபாயையும் சற்குணத்தின் பிராவிடண்ட் பண்டிலிருந்து பிடித்துக் கொண்டு மீதியைக் கொடுத்து அவளை வேலையினின்றும் நீக்கிவிட்டார் பாதிரியார்.

* * *

சற்குணம் வேறு எங்கும் வேலைக்குப்போகவில்லை. வீட்டுள் அடைந்து கிடந்து குடும்பத்தை நடத்தினுள்.

டாக்டர் செல்வம் இப்போது மிக்க சந்தோஷத்துடன் தம் வேலைகளைக் கவனித்து வருகிருர். எப்போதும்போல் அவர் நிலையான வருவாய் வத்துகொண்டிருக்கிறது.

ஆனுல் சற்குணத்தின் மனத்தில் அமைதி இல்லை. இழந்த பதவியை நினைத்து நினைத்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிருள்.

---

பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனுல் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிருர்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாருதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :— 15, புகழியபிள்ளைதெரு, தெப்பகுளம் போஸ்ட்.

# ஸ்ரீரங்கம் துலுக்க நாச்சியார்

**கலாதாஸன்**

நான் ஒருநாள் "தாதா"வுடன் ஸ்ரீரங்கம் கோயிலுக்குத் தரிசனத்திற்குப் போயிருந்தபோது அபிஷேக (திருமஞ்சன) சமயமாயிருந்தது. அப்போது உத்ஸவ விக்ரஹத்திற்கு ஒரு "லுங்கி" ஆடை கட்டப்பட்டிருந்ததைக் கண்டு, தாதாவிடம், "என்ன தாதா, ரங்கநாதஸ்வாமி எதற்காக, துலுக்கர்கள் ஸாதாரணமாக உடுக்கும் லுங்கியைக் கட்டிக்கொண்டு அபிஷேகம் செய்கிறார்" என்று கேட்டேன். அதற்கவர் "நீ கூறுவது உண்மைதான். இந்த ஆடையை ஸாதாரணமாக மகமதியர்கள் தான் அணிவார்கள். அதனால்தான் ஸ்வாமியுமதை உடுத்திக்கொண்டு அபிஷேகம் நடத்துகிறார். அவரை அந்தரங்க பக்தியுடன் போற்றின துலுக்க நாச்சியாருக்குக் கொடுத்த நாலு வரங்களிலிது ஒன்று" என்றுகூறினதைக் கேட்ட எனக்கு ஆச்சரியமேற்பட்டது. "என்ன தாதா, ரங்கநாதஸ்வாமிக்குத் துலுக்க நாச்சியாராவது? பெரிய நாச்சியார் ஸ்ரீரங்கநாயகியுண்டு தெரியும், மேலும் ஆண்டாள் ஸந்நிதியுமிருக்கிறது, உறையூர் நாச்சியாருமுண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன். துலுக்க நாச்சியாரைப்பற்றிக் கேள்விப்பட்டதே இல்லையே! அப்படி துலுக்க ஜாதியில் பிறந்த ஒரு நாச்சியார் ஸ்ரீ ரங்கநாதஸ்வாமிக்குண்டா?" என்று கேட்டேன். அதற்கு, தாதா புன்முறுவலுடன், "அப்பா, உனக்கு ஸ்ரீ ரங்கநாதரின் மஹிமை தெரியாது. அவரைப் பணிந்தவர்கள் யாராயிருந்தாலும் சரி, எந்த ஜாதி, எந்த மதம் எந்தத் தொழிலானாலும்சரி, அவர்களைத் தம் பாதத்தில் சேர்த்துக்கொள்வார். தம் பக்தையான துலுக்க நாச்சியாருக்கு, பரமபதம் கொடுத்ததுமன்றி அவளுக்குத் தம் கோயிலுக்குள்ளேயே ஒரு தனி ஸந்நிதியையும் அளித்திருக்கிறார். உன்னை அங்கே அழைத்துச் செல்கிறேன்" என்று சொல்லி என்னைத் தம்முடன் கூட்டிக்கொண்டுபோனார்.

* * *

ஸ்ரீ ரங்கம் கோயிலில் கர்ப்ப க்ருஹத்திற்கு வெளிப்பிராகாரத்தில் "கிளி மண்டப"மென்று ஒரு மண்டபமுண்டு. அதற்கு வடக்குப் பக்கம் இருப்பது "திருமொழியுற்சவ" மண்டபம். வைகுண்ட ஏகாதசிக்கு முந்தின பத்து நாள்களில் இந்த மண்டபத்தில் ஸ்வாமி எழுந்தருளுவார். அரையர்கள் திருமொழிப் பிரகடனம் செய்வார்கள். இந்த உத்ஸவத்திற்கு, "பகற் பத்து" என்ற பெயருண்டு. வைகுண்ட ஏகாதசியைத் தொடர்ந்து, கொட்டகையில் நடக்கும் பத்து நாள் உற்சவத்திற்கு "இராப் பத்து" என்று பெயர். பகற் பத்து மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் ஒரு சிறிய ஸந்நிதி இருக்கிறது; அதுதான் துலுக்க நாச்சியாரின் ஸந்நிதி. பகற் பத்து உற்சவம் நடக்கும் பத்து நாளிலும் ரங்கநாதஸ்வாமி அந்த ஸந்நிதிக்கு வருவதுண்டு. ஸ்ரீ ரங்கநாதருக்குள்ள நாச்சியார்களின் ஸந்நிதிகளுள் ஸ்வாமியுடைய கர்ப்ப க்ருஹத்திற்கு மிகவும் ஸமீபத்திலுள்ள ஸந்நிதி துலுக்க நாச்சியார் ஸந்நிதிதான். இந்த இடத்தை எனக்குக் காட்டினார் தாதா. பிறகு நான் வேண்டிக்கொண்டபடி எனக்கு இந்த நாச்சியாரின் சரித்திரத்தையும் கூறினார்.

* * *

முற்காலத்தில் மகமதியர்கள் ஹிந்து ஆலயங்களை இடித்துத் தள்ளி, அந்த இடங்களை அசுத்தப்படுத்தி, அவைகளிலுள்ள விக்ரஹங்களைப் பங்கப்படுத்துவது வழக்கமாயிருந்தது. அந்தச் சமயத்தில் சில மகமதியப் போர் வீரர்கள் டில்லியிலிருந்து ஸ்ரீரங்கம் கோயிலுக்கும் வந்தார்கள். ஆனால் கோயில் கட்டிடத்திற்கு விசேஷ கெடுதியொன்றும் செய்யவில்லை. விக்ரஹங்களையும், நகை முதலிய விலையுயர்ந்த பண்டங்களையும் கொண்டுபோய்விட்டார்கள். ரங்கநாதஸ்வாமியின் உத்ஸவ விக்ரஹம் ரொம்ப அழகாயிருக்கும். அதைத் தங்கள் மன்னனுக்குக் காணிக்கைப் பொருளாகக்

கொடுக்க எண்ணங்கொண்ட அந்தத் துலுக்கப் படர்கள் அதற்கு ஒரு கெடுதலும் செய்யாமல் அதையப்படியே கொண்டுபோய் மன்னனுக்குக் கொடுத்தார்கள். அந்த மன்னனுக்குச் சுமார் 16 வயதுடைய ஒரு பெண் இருந்தாள். அவளிடம் அந்த விக்ரஹத்தையும் நகைகளையும் இதர பொருள்களையும் மன்னன் கொடுத்தான். அவள் சந்தோஷத்துடன் அவைகளைப் பெற்றுக்கொண்டு, தன் அந்தப்புரத்துக்குச் சென்று, அந்தச் சாமான்களை ஒவ்வொன்ருக எடுத்துப் பார்க்கலானாள். சிலவற்றைப் பார்த்த பிறகு அந்த விக்ரஹத்தைப் பார்த்தாள். பார்த்தவள் திடுக்கிட்டாள். கண் கொட்டாமல் ஒரு பொம்மைபோல அப்படியே நின்றுவிட்டாள். அந்த உருவம் அவள் உள்ளத்தை அடியோடு கவர்ந்துவிட்டது. என்றுமில்லாத ஒரு உணர்ச்சி அவளுக்கேற்பட்டது. அவளது உள்ளத்தில் விவரிக்கமுடியாத சில நுட்பமான அனுபவங்கள் ஏற்பட்டன. தன்னையே அந்த ஸ்வரூபத்திற்கு அர்ப்பணம் செய்துவிட்டாள். அந்த உருவம் தனக்கு வெகுகாலமாகப் பழகின ஒரு மூர்த்திபோல் தோன்றிற்று. தான் அறியாமலே தன் மனம் அந்த வடிவைத் தழுவி நின்றது. அவள் மகமதியப் பெண்ணுய்ப் பிறந்தாலும், சிறு வயதில் தன் அரண்மனையில் தனக்குத் தாதிகளாயிருந்த சில ஹிந்துப் பெண்கள் கூறித் தான் கேட்ட கதைகள் ஞாபகத்திற்கு வந்தன. அவைகள் படங்கள்போல் தன் உள்ளக்கண்களெதிரில் தோன்றின. ரொம்ப காலத்திற்குமுன் தான் ரொம்ப அன்புடன் பழகின ஒரு வியக்தியைப்போல் தோன்றிற்று அந்த விக்ரஹம். தான் இடைவிடாமல் வெகு நாளாகத் தேடிவந்த ஒரு விசேஷ ஐசுவரியத்தையடைந்ததுபோல் உணர்ந்தாள்.

அந்த க்ஷணமுதல் அந்த விக்ரஹத்தை விட்டுப் பிரிவதே கிடையாது. உறங்கும்போதுகூட அது அவளருகில்தான் இருக்கும். அந்த ஸ்வரூபத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்திப்பது, அதைக் கட்டியணைத்து முத்தமிடுவது, அதைக் குறித்துப் பாடுவது, அதற்கெதிரில் ஆடுவது, தான் எதைச் சாப்பிடுவதாயிருந்தாலும் அதற்கு நிவேதனம் செய்துவிட்டுத்தான் சாப்பிடுவது, இப்படியே காலங்கழிக்கலாளுள். அவளுடைய தாதிகள் இதைக் குறித்துக் கவலைப்படலானுர்கள்.

ஸ்ரீரங்கத்தில் கோயிலதிகாரிகள் ஸ்வாமியின் விக்ரஹம் போனதைப்பற்றி ரொம்ப வருந்தினுர்கள். அதன் கதி என்னவாயிற்று என்றறிய ஆட்களை டில்லிக்கு அனுப்பினுர்கள். காலக்ரமத்தில் அங்கு ராஜகுமாரியிடம் அது இருப்பது தெரியவந்தது. அதை எப்படியாவது அடைய வேண்டுமென்ற தீர்மானத்துடன் சில அதிகாரிகள் டில்லிக்குப் புறப்பட்டார்கள். அங்கே வந்து ரகசியமாக விசாரித்ததில் விஷயம் தெரிய வந்தது. இப்படி இடைவிடாமல் ராஜகுமாரியால் காக்கப்படும் விக்ரஹத்தை, எப்படிக் கொண்டுபோவது என்று தெரியாமல் தத்தளித்து, பிறகு ராஜகுமாரியின் தாதிகளில் ஒருத்தியை ஏராளமான பணத்தைக்கொண்டு வசப்படுத்தி, விக்ரஹத்தை எடுத்துக் கொண்டுபோக ஒரு வழிசொல்லும்படிகேட்க அவள், "ராஜகுமாரிக்குத் தெரியாமல் தான் கொண்டுபோகவேண்டும்; தெரிந்தால் அதை ஒரு காலும் விட்டுப் பிரியாள். அதற்கு ஒரே ஒரு வழிதானிருக்கிறது. மாதத்தில் மூன்று நாள் அசுத்தமாயிருக்கும் காலத்தில் அந்தப் பதுமையை அண்டுவதில்லை. அந்தச் சமயம் பார்த்து, திருடிக்கொண்டு போகலாம். அதற்குரிய காலத்தை நான் முன்பேயே உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்" என்று கூறி, அதன்படியே அறிக்கை செய்தாள். அவர்கள் திருடிக் கொண்டு போவதற்குவேண்டிய சௌகர்யங்களும் செய்து கொடுத்தாள். கோயில் அதிகாரிகளும் சாமர்த்தியமாக வேலை செய்து ஒருவருமறியாமல் அந்த விக்ரஹத்தை எடுத்துக்கொண்டு, வெகு வேகமாகச்செல்லும் குதிரைகள் மூலம் ஸ்ரீரங்கம்வந்து சேர்ந்தார்கள்.

அசுத்தம் நீங்கின தக்ஷணம் தன் ஆசைக்கிருப்பிடமாகிய விக்ரஹத்தைக் காண ஆவலுடன் ராஜகுமாரி வந்தபோது அதைக் காணவில்லை. திடுக்கிட்டாள், மனம் நொந்தாள், எண்ணுததெல்லாம் எண்ணினுள். உலகமே சூன்யமானது போல்தோன்றிற்று. நன்ருக விசாரித்ததில் ஸ்ரீரங்கத்திலிருந்து யாரோ சிலர் வந்திருந்ததாகவும், அவர்கள் இரண்டு நாள்களுக்குமுந்தி அவசர அவசரமாகக்

குதிரைகள்மீதேறிப் போனதாகவும் தெரியவந்தது. அவர்தான் கொண்டுபோயிருக்கவேண்டும் என்றுணர்ந்து அந்த மூர்த்தியை விட்டு ஒரு கணம்கூடப் பிரிந்திருக்கப் பிரியமில்லாதவளாய், தனதந்தரங்கமான ஒரு தோழியுடைய உதவியால் ஒரு உயர்ந்த ஜாதிக் குதிரையை ஏற்பாடு செய்துகொண்டு ஒருவரிடமும் கூறாமல் ஸ்ரீரங்கம் நோக்கிப் புறப்பட்டாள். கோயிலதிகாரிகளுக்குப் பிறகு இரண்டுநாள் கழித்துப் புறப்பட்டாலும் வெகுவேகமாக, ஓரிடத்திலும் தங்காமல் அன்ன ஆகாரமில்லாமல் ஒரே அடியாக வந்ததால் அதிகாரிகள் கோயிலை அடைந்த அடுத்தக்ஷணம் ராஜகுமாரியும் அங்குவந்துசேர்ந்தாள். த்வஜ ஸ்தம்பத்தை யடைந்ததும் குதிரையைவிட்டுக் கீழே யிறங்கினாள்; அதிகாரிகள் கையில் அந்த விக்ரஹத்தைக் கண்டாள்; ஒரே பாய்ச்சலாக அதைநோக்கிப் பாய்ந்தாள். அந்தக்ஷணம் பார்ப்பவர்கண்ணைப் பறிக்கவல்ல ஒரு ஜோதி தோன்றிற்று. அதில் ராஜகுமாரியின் உருவம் மறைந்தது. கண்டவர்கள் திடுக்கிட்டு ஸ்தம்பித்து நின்றார்கள்; ஆச்சர்யத்துடன் நாலு புறமும் பார்த்தார்கள்; ஒருவரையொருவர் கண்டு பிரமித்தார்கள். அந்தச்சமயம் ஒரு அசரீரிவாக்குக் கிளம்பிற்று. "ஆச்சர்யப்படவேண்டாம், என் பக்தையை என் பாதத்தில் சேர்த்துக்கொண்டேன். இந்த உத்தமமான ஜீவன் அநேக ஜன்மங்களில் என்னைப் பஜித்து, என்னிடம் அபரிமிதமான அன்பைச்செலுத்தி, என்னையே கதி என்று சரணமடைந்தவள். இந்த ஜன்மத்தில் வடக்கே மகமதிய குலத்தில் பிறந்தாலும் என் ரூபத்தைக் கண்டமாத்திரத்தில் தன்னுடைய நிலையை உணர்ந்தாள். பழைய அன்புப் பிரவாகம் பன்மடங்கு அதிகமான வேகத்துடன் என்னை நோக்கிச் சுரந்தது. மனித நிலை தீர்ந்து என்னுடன் ஐக்கியத்தை யடைந்தாள். என்னுடைய அன்பிற்குரிய இந்தப் புண்யவதிக்கு என்னுடைய சமீபத்திலேயே ஒரு ஸந்நிதானம் ஏற்பாடு செய்யுங்கள். மேலும் இந்தத் துலுக்க சரீரத்திலிருந்து என்னையடைந்ததற்கடையாளமாக இனி இந்தக்கோயில் முறைகளில் மகமதியர்க்குரிய நான்கு காரியங்களை ஏற்படுத்தவேண்டும். அவை, எனக்குஅபிஷேகம் செய்யும்போது துலுக்கர்கள் சாதாரணமாக அணியும் லுங்கித் துணியைத்தான் எனக்குடுத்தவேண்டும். பிறகு எனக்கு வெற்றிலை கொடுக்கும்போது சுண்ணாம்பை வெற்றிலையின் முன்புறத்தில்தான் தடவவேண்டும். மேலும் காலையில் எனக்கு முதல் நைவேத்யமாக ரொட்டியும் வெண்ணெயும் ஏற்பாடு பண்ணவேண்டும். கடைசியாக மகமதியர்கள் ஒரே கலத்திலிருந்து உணவை எடுத்துண்பது வழக்கமானதால் அதன்படி வருஷந்தோறும் ஆனி மாதத்தில் ஜ்யேஷ்டாபிஷேகத்துக்கடுத்த நாளில் எனது சந்நிதிக்கெதிரிலுள்ள மண்டபத்தில் ஒரு சேலையைப் பரப்பி அதில் அன்னத்தைக் கொட்டி வைத்து, அதிலிருந்து என் ஆலயத்தில் கைங்கரியம் செய்கிற எல்லாரும் தங்கள் தங்கள் பாகத்தை எடுத்துக்கொண்டு போகவேண்டும். நானும் வருஷத்தில் பத்து நாள் திருமொழியுத்ஸவம் நடக்கும் சமயத்தில் எனது நாச்சியார்களில் ஒருத்தியாக நான் அங்கீகரித்திருக்கிற இந்தத் துலுக்க நாச்சியார் ஸந்நிதியில் வந்து நின்று தரிசனம் கொடுப்பேன்" என்று சொல்லிற்று. அந்தத் துலுக்கநாச்சியார் ஸந்நிதிதானிது என்று "தாதா" சொல்லி முடித்தார்.

# தேவானை

ஞானம்

தேவானை மிகவும் கம்பீரமான தோற்றமும், அழகும் உடையவள்; உல்லாஸ நடையாள்; பெருந்தன்மை கொண்டவள்.

ஆனால் அவள் கன்னங்கறுத்த மேனியாள். யாரையும் லட்சியம் செய்யாத பார்வை கொண்டவள்; நாணம் என்பது சிறிதும் இல்லாதவள். ஆடை உடுத்தாமல் அலைகின்றவள்—உன்மத்தம் பிடித்தவளோ—இல்லை; மிகவும் தெளிந்த புத்தி உடையவள்; அறிவும், வாத்ஸல்யமும் ஒருங்கே அமையப்பெற்றவள்.

சேலை உடுத்தாத, மானமில்லாத அவளும் ஒரு மனுஷிதானா?—அல்ல, அவள் மனுஷி அல்ல. அவள் 'தேவானை' என்ற பெயருக்கேற்ப மிருகமாய்ப் பிறந்தவள். அவள் ஒரு யானை.

அம்மணமாய்த் திரிந்த அவள் சேலை கட்டிய பெண்ணினும் எவ்வளவோ உயர்ந்தவள். நாணமில்லாத அவள் நாணமுடைய பெண்ணைக் காட்டிலும் தெய்விகம் வாய்ந்தவள்.

தேவானை ஒரு கோயில் யானை. காட்டிலே பிறந்து, காட்டிலேயே விடுதலையாய் வாழவேண்டிய அவள், காட்டில் பிறந்தாளே ஒழிய, விடுதலை கெட்டு, விலங்கிட்டு வாழ நாட்டிற்கு வந்தாள். அது அவள் அறிவீனமா? இல்லை. தன்னைவிட உருவத்தில் எவ்வளவோ சிறிய மனித பிராணிகள் அல்லவா அவளை வசக்கிக் கொணர்ந்து விலங்கையும் பூட்டின.

தேவானை அந்தக் கோயிலுக்கு வந்து சேர்ந்தபொழுது சிறுமியா யிருந்தாள். காட்டிலே சுதந்தர கர்ஜனை செய்து ஒய்யாரமாய் நடந்த அவள், ஒரு சின்னஞ்சிறு மனிதனைச் சுமந்து செல்லும் அடிமை வாகனமாய் வந்தாள்.

அவள் கோயில் வாயிலை மிதித்த அன்றே அவளை மஞ்சள் நீராட்டி, திலகம் இட்டு, வர்ண ஆடைகளால் அலங்காரம் செய்தார்கள். சங்கையும், முரசையும் முழக்கி ஆர்ப்பரித்தார்கள். 'பேர் அறியாத பெருஞ் சுடராய்' காட்டில் திரிந்த அவளுக்கு 'தேவானை' என்ற பெயரையும் சூட்டினார்கள்.

இந்தப் புதிய வாழ்வைக்கண்டு மிரண்டு மருண்ட தேவானை அங்குசத்தின் முனையில் தன் அபார சக்தியை இழந்து, கட்டுண்டு நின்றாள். கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட குமரியைப்போல் குமைந்த அவள், அங்குசத்தின் ஸ்பரிசத்திலே அடங்கி நின்றாள்.

தான் ஒரு விநோதமான உலகிற்கு வந்துவிட்டது போன்ற உணர்ச்சி அவளுக்கு இருந்தாலும் தன் அறிவைக் கொண்டு அந்த உலகில் வாழும் வகையைத் தெரிந்துகொண்டாள். தன் வயிற்றுப்பசி தீர, தனக்கு வேண்டிய உணவை அன்போடு கொடுத்த மனிதனிடம் தானும் அன்பாயிருக்கக் கற்றுக்கொண்டாள். தன்னைப் பராமரிக்கும் மாவுத்தனின் ஆத்ம அன்பிலே தன் இனத்தவரின் சாயலைக் கண்டு சிறிது திருப்தி அடைந்தாள்.

சிறுமியாயிருந்த தேவானையை மெல்ல மெல்ல, குமரிப் பருவம் வந்து அடைந்து கொண்டிருந்தது. கருமையோடு ஒருவித குளுமையும் சேர்ந்து அவளை அழகு செய்தன.

இந்த அழகுப் பருவத்தைக் காதல் மணம் வீசக் காட்டிலே கழிக்கவேண்டிய அவள், இங்கு தன் உணர்ச்சியை உள்ளடக்க வேண்டியிருந்தது. அதுமட்டுமல்ல; தான் வந்து சேர்ந்த விபரீத உலகில் அந்த மனிதப்பிராணிகளைத் திருப்தி செய்ய அவர்கள் தனக்கு வகுத்த சில விதிகளுக்கு இணங்க வேண்டியும் இருந்தது.

காலையும் மாலையும் ஊரைச்சுற்றி அவள் வலம் வரவேண்டும். பஜனையோ, பவனியோ செல்லுகையில் தன் மேனியை, பகட்டாடையால் மறைத்து முன்செல்ல வேண்டும்.

தேர் திருவிழாக் காலங்களில் அவளுக்கு வேலை அதிகமாயிருக்கும். தேர் நகராமல் சண்டித்தனம் செய்த பொழுதெல்லாம் அவள் தன் பெரும் ஆகிருதியில் அடங்கி ஒடுங்கிக்கிடக்கும் வலிமையை, தேரை முட்டுக் கொடுத்து நகரச் செய்வதில் காட்டவேண்டும்.

ஆனால், அவளுக்கு வேலை இல்லாத பொழுதெல்லாமோ தன் கால்களை வளைந்து தழுவிக்கொண்ட இரும்புச் சங்கிலியின் அணைப்பிலே அவள் தன் வலிமையை மறந்து வாளாவிருக்க வேண்டும்.

மனிதன் தன் மனோ சக்தியாலும், தந்திர வன்மையாலும் பிரமாண்டமான உருவம் படைத்த தேவானையை வசியம் செய்துவிட்டான்.

கோயில் வாசலில் காவலில் இருந்த கல்லானையைக் கண்ட தேவானை, அதைப் போலவே தானும் தலைகுனிந்து நிற்கப் பழகினாள்.

கல்லை யானை ஆக்கி மகிழ்ந்தானே ஒரு சிற்பி. ஆனால், இதோ, இந்த மனிதக் கும்பலோ தேவானையைக் கல்லாகச் செய்துவிட்டது!

துதிக்கையின் ஒரு அசைப்பிலே மனிதனை மண்ணைக் கவ்வச் செய்யும் சக்தி வாய்ந்த தேவானை சும்மா கிடந்தாள் சித்துக்களை அடக்கி மனசைக் கட்டுப்படுத்தும் யோகியைப் போல. கேவலம் இந்தச் சிறு மனித ஜந்துக்களிடம் தன் வலிமையை ஏன் வீணிலே காட்டவேண்டும் என்று நினைந்து கல்லாய்ச் சமைந்தாளோ என்னவோ.

கண்ணை மூடிக்கொண்டு தன் கன்னிப் பருவத்தோடு பல வருஷங்கள் கடத்தி விட்டாள் தேவானை.

காதலில் வெதும்பிய அவளுடைய கண்ணின் ஒளி மங்கிற்று. மேனியின் மினுமினுப்பு மறைந்தது. நடையின் மிடுக்குத் தளர்ந்தது. ஏதோ ஒரு சக்த எங்கோ இருந்து கூவி அழைத்தது. சக்தியின் இசை இடையிடையே அ நெஞ்சத்தில் ஒலித்து அவளை மயக்கிற

மயக்கம் தெளிய இசையின் உருவ தைக் காண விழைந்தாள் அவள். புத்துயிர் பெற இசையின் வடிவத்தை அவள் தழுவ நினைத்தாள். புது வாழ்வு பெற அவ்வடிவத்தோடு வடிவமாய் வாழ நினைத்தாள்.

மணியோசையும், முரசொலியும் ஓயாது நிறைந்த அந்தக் கோயில் இப்பொழுது பாழும் கோயிலாகவே அவளுக்குத் தென்பட்டது. பக்தர்களின் பக்தி வெள்ளம் கரை புரண்டோடும் கோயில் அவள் உயிரை வதைக்கும் ஒரு கசமாக மாறி விட்டது.

ஒரு நள்ளிரவிலே மதிமயங்கி, அங்கம் சோர்ந்து நித்திரை வசப்பட்ட அவள் கனவொன்று கண்டாள். பல வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவம்—அவள் மன ஆழத்திலே புதைந்து மறைந்து போன சம்பவம்—இன்று கனவாக அவள் முன் தோன்றியது.

......அடர்ந்த பசுங்காட்டினூடே அவள் தன் காதல் சிறுவனோடு உள்ளத்தில் பெருமை ஊசலாட அசைந்தாடி, சென்று கொண்டிருக்கிறாள். உள்ளம் ஒன்றுமாய் உருவம் இரண்டுமாய்ச் செல்கிறார்கள் பெருங் கருங்காதலர்கள். முன் செல்லும் தேவானை அதி வேகமாய்ப் போய்க் கொண்டிருக்கிறாள் ........... அவளைப் பிடிக்க மனிதன் தோண்டிய வஞ்சகக் குழியை அவள் கண்டாளில்லை......இலைகளும்; கொடிகளும், கரும்பும், கனிகளும் பின்னிக்கிடந்த அந்தப் பரப்பிலே ஆசை கொண்டு காலை வைக்கிறாள். மறு வினாடி 'சட சட' வென்ற சப்தம். பெருமிதத்துடன் ஆடிவந்த தேவானை படு குழியில் விழுந்தாள். கீழே விழுந்த தேவானை பதை பதைக்க மேலே பார்க்கிறாள் தன் காதலன் எங்கே என்று. மேலே குழியைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கலங்கியகண்களோடு பிளிறிக்கொண்டே அவன் தன்னைப் பார்த்துக்கொண்டிருப்பதைக் காண்கிறாள்...............

அதிர்வேட்டின் சப்தம் கேட்டுக் கண் விழித்த தேவானை தனக்கு எதிரே தன்

...த்தாழனுக்குப் பதிலாக தலை குனிந்... கல்லானையைக் கண்டாள். கலங்... ...ள்ளத்தோடு துதிக்கையைத் தலைக்கு ...லாகத் தூக்கி ஒரு நீண்ட மூச்சை ...ட்டாள்.

...முரசு கொட்டிற்று. சங்கு முழங்கிற்று. கண்டாமணியும் பாடிற்று. ஆனால் தேவானைக்கு அவைகளெல்லாம் ஒரே வேதனையைக் கொடுத்தன.

மாவுத்தன் அவள் முதுகிலே அம்பாரி அமைத்தான். முத்தாரங்களைக்கொண்டு அவளை அணி செய்தான். மணமுள்ள மாலைகளைச் சூட்டி மணமகளைப்போல் ஜோடித்தான்.

அன்று ஒரு விசேஷ தினம். தேவானைக்கு அல்ல; கோயில் பக்தர்களுக்கு. பஜனை ஊர்வலத்தோடு அவள் பவனி செல்லவேண்டும்.

நீண்டு வளைந்திருந்த வாங்காவை வானை நோக்கி வைத்து ஊதினார்கள். அவைகளி லிருந்து கிளம்பிய சப்தம் வானைக் கிழித்துக் கொண்டு சென்றது. அது தேவானைக்குத் தன் ஹிருதயத்தின் ஓலமாகவே தோன்றியிருக்கவேண்டும்.

சகல வைபவத்துடனும், பவனி புறப்பட்டது. முன்னே சதிராடிக்கொண்டு ஒரு மடந்தை செல்ல, பின்னே பஜனை கோஷ்டி காதலை இசையில் வைத்துக் கசிந்துருகிச் சென்றது.

'.........கைத்தலம் பிடிக்கக்
கனாக்கண்டேன் தோழி.......“

பாட்டின் பொருளில் பெருகிவந்த பக்தி ரசத்தைக் காதல் ரசத்தோடு கலந்து பருகிய பக்தர்கள் புல்லரித்துப் போனார்கள். சதிராடிக்கொண்டுசென்ற நங்கையின் சலங்கை ஒலி அவர்களை முன்னுக்கு ஈர்த்துக்கொண்டு சென்றது.

ஆம், தேவானையும் கனாக் கண்டாள். ஆனால் அவள் கனவை யார் அறிந்தார்? கனவில் கலங்கிய அவள் உள்ளத்தை யார் உணர்ந்தார்? சிதைந்த அவ்வுள்ளத்தின் குமுறலைத் தோழியாய் நின்று கேட்பதற்கு யார் இருக்கிறார்?

வருஷங்கள் பல கழிந்துவிட்டன. தேவானையின் யௌவனம் மறைந்தது. கிழத் தன்மை அவளைத் தழுவிக்கொண்டது. தளர்ந்துவிட்ட அவள் உடலில் பல சுருக்கங்கள் விழுந்தன. குவிந்த அவள் கபாலம் நிரந்தர சோர்வைக் காட்டிற்று.

நெடுங் காலமாய் அவள் நெஞ்சின் ஆழத்தில் புதைந்து கிடந்த ஆசை இன்று திரும்பவும் தலை தூக்க ஆரம்பித்தது. ஆனால் அந்த ஆசையெல்லாம் இப்பொழுது அவள் நெற்றி முனையிலே ஒரு பிரளயமாக வெடித்து உருவாகியது.

அதோ, அந்த மண்டபத் தூணைத் தாங்கி நிற்கும் கல்லானையை அவள் பார்க்கிறாள்—அடடே, என்ன விநோதம்! இது வரை கல்லாய் நின்ற அந்தக் கல்லானை உயிரோடல்லவா திகழ்கிறது! அதனுடைய கால்களும் துதிக்கையும் நெகிழ்ந்து அசைகின்றனவே!—தன் முதுகை அழுத்தும் தூணின் பாரம் தாங்காமல் அது துடிக்கின்றதோ? அல்லது தேவானையின் ஏக்கத்தைப் போக்க உயிர் பெற்றுவிட்டதோ? இல்லை, அது கல்லாகவேதான் இருக்கிறது. எல்லாம் தேவானையின் மனப்பிராந்தி. மனச் சிதைவு.

மக்கிக் கிடந்த தேவானையின் உடல் தெம்புடன் நிமிர்ந்தது. மங்கிக் கிடந்த கண்கள் செங்நிறம் காட்டின. மடிந்த இரு காதுகளும் விறைத்துப் போயின. தொய்வுடன் ஆடிய வாலில் ஒரு முறுக்கம். துடித்து வளைந்த துதிக்கையில் கருகி ஓடிய மூச்சு. ஆம், தேவானைக்கு மதம் கண்டுவிட்டது.

சங்கிலியை அறுத்துக்கொண்டு தன் சக்தியைக் காட்ட நினைத்தாள். அனல் கக்கும் கண்களை உருட்டி நிலமகள் நடுங்க 'திமு திமு' வென்று கிளம்பிவிட்டாள்.

தெருவெல்லாம் பிளிறிக் கொண்டே ஓடினாள். தன்னை வஞ்சித்த மனிதனை வஞ்சம் தீர்த்துக்கொள்ளக் கங்கணம் கட்டிக்கொண்டு சாடிப் பாய்ந்தாள்.

அரச மரத்தடிப் பிள்ளையாரைத் தோப்புக்கரணம் போட்டு வணங்கிக் கொண்டிருந்த பக்தன் ஒருவன் அவள் பார்வையில் விழுந்தான். அவனைப் பிடித்து இடறித் தரையோடு தேய்க்க வேண்டும் என்று ஓடினாள் தேவானை. ஆனால் பக்தன் தப்பிக்கொண்டான்.

போனால் போகிறான் என்ற பாவனையில் திரும்பிய தேவானை தன் பார்வையைப் பிள்ளையார் சிலையிலே குத்திட்டு நின்றாள்.

மின்வெட்டுப் போன்ற ஒரு சிந்தனை குழம்பிக் குமுறிய அவள் மனதில் உதயமாகி, பெருத்த அவள் உடலை உலுக்கிச் சென்றது.

"......ஊமையாய்க் குந்திக் குறுகிக் கிடக்கும் இந்தக்குட்டி யானையைத் தெய்வம் என்று சொல்லிக் கொண்டு தோப்புக் கரணம் போடும் அடிமையாயிருக்கிறான் மனிதன்....... உயர்ந்து, வளர்ந்து, நடமாடும் தெய்வமாயிருந்த என்னை, பேதை மனிதன் தனக்கு அடிமையாக்கிக் கொண்டான்......" அவளது சிந்தனைச் சுடர் மறு கணம் தெறித்துச் சிதறியது. பிள்ளையார் சிலையை வளைந்து பிடித்தது அவள் துதிக்கை. அதைப் பெயர்த்தெடுத்துப் பந்தாடிவிட்டு அவள் திரும்பினாள்.

"பிள்ளையார் போய்விட்டாரே" என்று சொல்லிக் கண்ணீர் விட்டார் தூரத்திலிருந்து இந்தக் காட்சியைக் கண்ட பக்தர் ஒருவர்.

மனிதனுக்கு விமோசனமே இல்லை என்று சொல்லுவது போல் பிளிறிக் கொண்டே அங்கு மிங்கும் ஓடினாள் தேவானை. மேனியெல்லாம் புழுதியை அளைந்துகொண்டாள். மண்ணை எடுத்து நாலாபக்கமும் சூறை ஆடித் தன் தலையிலும் போட்டுக்கொண்டாள்.

'யானைக்கு மதம் பிடித்துவிட்டது' என்று ஊரே அமளிப்பட்டது. யானையை வசக்கிக் கொண்டு வர மாவுத்தன் பல தந்திரங்களைக் கையாண்டான். சர்வ ஜாக்ரதையாக அவளைநெருங்கி 'தேவானை' என்று கூப்பிட்டான். ஆனால், இன்று தேவானை பழைய தேவானை அல்ல. கட்டு மீறிய யானை. தன்னுள் இதுவரை பம்மிக் கிடந்த சக்தியை அவிழ்த்துவிட்ட யானை. தன்னைக் கட்டிப் போட்ட மனிதர்களைப் பழிக்குப்பழி வாங்க முனைந்த யானை. பெரும் சப்தத்தோடு ஒரு பெருமூச்சு விட்ட அவள், துதிக்கையைப் பின் வாங்கி மாவுத்தன் முதுகிலே வீசி அறைந்தாள். புரண்டடித்துக் கொண்டு தரையிலே உருண்டான் அவன்.

மீண்டும் தெருவெல்லாம் புழுதிப் படு[illegible]தினாள் தேவானை. மூன்று நாட்களா[illegible] ஊரையே பாழ்படுத்தினாள் அவள்.

கற்புடைய கண்ணகி தனக்கு அநீ[illegible] இழைத்த மதுரைமாநகரை அழித்தாள். அதை உலகம் போற்றுகிறது. இன்று அதே அநீதியை எதிர்த்துத் தேவானை போராடுகிறாள். ஆனால் அவளுக்கு வழங்கப்படும் நியாயம் என்ன?

எந்த மனிதப் பிராணிகள் தேவானையின் சுதந்தரத்தைப் பறித்து அவளை விலங்கிட்டு அடிமைப் படுத்தினவோ அந்த மனிதப் பிராணிகளின் நன்மைக்காக, 'யானையைச் சுட்டுக் கொல்லுங்கள்' என்ற பாதுகாப்புச் சட்டத்தைப் பிறப்பித்தார் கலெக்டர்!

இரண்டு போலீஸ் ஜவான்கள் நீண்ட துப்பாக்கிகளைத் தாங்கிய வண்ணம் கிளம்பினார்கள்.

அதோ, கோயில் வாசலுக்கெதிராக மலைபோல் நின்றுகொண்டிருந்த தேவானை, தன் அகன்ற மேனியில் அதி அலட்சியமாகப் பல குண்டுகளை வாங்கிக் கொண்டாள். தன் வாழ்வைக்கெடுத்த மனித குலத்தைச் சபித்தவண்ணம் மேல் நோக்கித் தன் துதிக்கையால் வானைத் துழாவினாள்.

ஜவான்களின் கடைசி குண்டு அவள் துதிக்கையின் மெல்லிய நுனியைத் துளைத்துச் செல்லவே ஓலமிட்ட வண்ணம் தேவானை மலைபோல் சரிந்து சாய்ந்தாள்.

யானை செத்ததைத் தெரிவிக்க 'டமடம' வென்று அதிர்ந்தது முரசு.

"......காதல், அன்பு, வீரம் இம் மூன்றும் சேர்ந்து உருவெடுத்த தெய்வயானையைத் துளை போட்டு வீழ்த்திய பெருமை அந்த இரு ஜவான்களுக்கு மட்டுமல்ல. அவளைச் சுடச்சொல்லிக் கட்டளை இட்ட கலெக்டருக்கு மட்டுமல்ல. தேவானையை வசமாய் நடத்திப் பிறகு அவளை மதம் பிடிக்கச்செய்த மனித குலத்திற்கே அந்தப் பெருமை உ[illegible]து..........." என்று [illegible]தது முரசு.

*

கோயிலிலிருந்து பஜனை கோஷ்டி ...னி புறப்பட்டது.

...ஆனால் முகபடாம் போர்த்தி முன்னே ...செல்ல இன்று தேவானை இல்லை.

அதுபற்றிப் பஜனைகோஷ்டிக்கும், பக்த கூட்டத்திற்கும் பெருத்த கவலைதான், தங்கள் பவனியை அழகுசெய்யத் தேவானை இல்லையே என்று.

என்றுமில்லாத உணர்ச்சியோடு பக்தி ரசம் சொட்டப் பஜனையை ஆரம்பித்தார் பட்டுப் பீதாம்பரம் தரித்த ஒருவர்.

கண்டா மணியின் நாதத்தோடும், 'பொம் பொம்' மென ஆர்த்தெழுந்த சங்க நாதத்தோடும் பஜனை கோஷ்டி கிளப்பிய தேவாரத் தீஞ்சுவையும் கலந்துகொண்டு பக்த கூட்டத்தைப் பரவசப்படுத்தியது.

"......... காதல் மடப்பிடியோடும்
களிறு வருவன கண்டேன்........."

என்ற பாட்டின் வேகம் அங்கு நகர்ந்து கொண்டிருந்த ஒவ்வொரு உள்ளத்திலும் காதல் மகத்துவத்தைச் சங்கநாதம் செய்து முழக்கிக்கொண்டிருந்தது.

கூட்டத்திலுள்ள ஓர் இலக்கிய அன்பர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு சொன்னார்: "பாட்டின் பண் மத்த கஜத்தின் மந்தகாச நடையைப் போல்தான் இருக்கிறது. இருந்தாலும் ஆடம்பரத்தின் சின்னமாகிய யானை முன்னே செல்லாமல் பஜனை ஸ்வாரஸ்யப்படவில்லை, சார்"

பாட்டை ரஸித்துக்கொண்டே வந்த பக்தர்களும் அவர் சொன்னதை ஆமோதித்தார்கள்.

ஆம், அந்த மனிதக் கூட்டத்தின் அழகுணர்ச்சியைத் திருப்தி செய்ய இன்று தேவானை முன் செல்ல இல்லை.

"காதல் மடப்பிடியோடும்
களிறு வருவன கண்டேன்........."

என்று மடக்கிப் பாடினார் பஜனை கோஷ்டியின் தலைவர்.

களிறு வரும் வரும் என்று எத்தனையோ நாட்கள் பஜனைக்கு முன் சென்ற தேவானை கல்யானையைக் கண்டு தன் காதலை வளர்த்தாள். ஆனால் அவள் கண்ட பலன் என்ன? விசித்திரமான ஒரு சிறு மனிதக் கும்பலுக்காகத் தன் காதலை மறக்கடிக்க நினைத்த தேவானைக்குக் காதல் நோய் பீரிட்டுக்கொண்டு வரவே தானும் கல்லாய்ச் சமைந்தாள்.

கூட்டம் நகர்ந்து கொண்டிருந்தது தேவானை இல்லாமலே.

அதனாலென்ன? காதல் மடப்பிடியோடும் களிறு வரும் கோலாகலத்தைத் தேவாரப் பண்ணிலே அமோகமாய் ரஸித்த அந்த ரஸிகக் கூட்டம் தேவானையின் தியாகத்தையும் மறந்து தரையோடு ஊர்ந்து முன்னேறிக்கொண்டிருந்தது.

Edite... by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
... Press, Besent Road, Kumbakonam.